758

தமிழ் இலக்கியத் திரட்டு

ஐந்தாம் படிவம்

பொதுத் தொகுதி

758
4-54

OFFICE
...STRAR OF ...
2 . DEC 1954

T3
031 (10)
N54
137014

...கோபால்பிள்ளை
பதிப்பாளர்

திரு...ளி

2/27, பிராட்வே
சென்னை - 1

தமிழ் இலக்கியத் திரட்டு

ஐந்தாம் படிவம்—பொதுத் தொகுதி

[புதிய பாடத்திட்டப்படி அமைந்தது]

OFFICE ... TRAR OF BOOKS
2 ... DEC 1954

தொகுப்பாளர் :
P. துரைக்கண்ணு முதலியார், M.A., L.T.,
தலைவர்,
டாக்டர் அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
அழகப்பா நகர், காரைக்குடி.

வித்துவான் S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.,
தமிழ்த்துறைத் தலைவர்,
A. M. ஜெயின் கல்லூரி, சென்னை.



T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்
தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி | 2/27, பிராட்வே ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1954 [விலை ரூ. 1–6–0

முதற் பதிப்பு—மே, 1949
ஆறும் (திருந்திய) பதிப்பு—நவம்பர், 1954

T3
031,1C
N54



Kabeer Printing Works, Madras (2749)

முகவுரை

சென்னை அரசியல் கல்வித் துறையாளர் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை யொட்டி உயர்நிலைப் பள்ளிகளில் நான்கு, ஐந்தாம் படிவங் (Fourth and Fifth Forms) களில் பயிலும் மாணவர்க்கு ஏற்கும்படி 'தமிழ் இலக்கியத் திரட்டு' என்னும் புத்தகங்கள் இரண்டையும் தொகுத்துள்ளோம்.

இப் புத்தகங்களில் பாடத் திட்டத்தில் வகுத்துத் தரப் பெற்றுள்ள பிரிவுகளை முற்றும் தழுவிச் செய்யுட் பகுதியில் இனிய அரிய பாடல்களையும், உரைநடைப் பகுதியில் தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் எழுதி வெளியிட்டுள்ள அரிய கட்டுரை களையும் தேர்ந்து சேர்த்திருக்கின்றோம். இவைகளைத் தேர்ந்து கொள்வதில் மாணவர் சுவை, நோக்கம், பண்பாடுகளை உணர்ந்து, அவைகளுக்குப் பொருத்தமான தக்க பகுதிகளையே தொகுத்துச் சேர்த்துள்ளோம்.

மாணவர்க்குத் தமிழ் மொழியில் தேர்ச்சி உண்டாகும்படி செய்வதே பாடத்திட்டத்தின் சீரிய நோக்கமாதலால், செய்யுள் உரைநடையாகிய இரு பகுதிகளிலும் ஒவ்வொரு பிரிவின் முடி விலும் குறிப்புரை, பயிற்சி, வினாக்கள், கட்டுரையாக்கம் என்பன சேர்க்கப்பெற்றுள்ளன. இவற்றால் மாணவர்க்குத் தாய் மொழியில் தேர்ச்சி ஏற்படுவதுடன், கட்டுரை எழுதும் வன்மை யும் அமைதல்கூடும்.

இப் புத்தகங்கள் பாடத் திட்டத்தில் தரப்பெற்றுள்ள பொது, சிறப்பு (General and Speial Courses) ஆகிய இரண் டிற்கும் பயன்படுமாறு தொகுக்கப்பெற்றுள்ளன.

இவைகளைத் தமிழாசிரியர்கள் ஆதரித்துப் பாடபுத்தக மாக ஏற்படுத்தியுதவுமாறு வேண்டுகின்றோம்.

ஆசிரியர்கள்.

நன்றியுரை

செய்யுட் பகுதியில்

பாரதியார் பாடலிலிருந்து நாட்டு வணக்கம் என்ற தலைப்பி லுள்ள பாடல்கள் மூன்றைச் சேர்த்து வெளியிட அனுமதி தந்த அதன் உரிமையாளர்க்கும்,

உரைநடைப் பகுதியில்

சிறை நீக்கிய செய்யுள், இந்திய சிற்பங்கள், தமிழகத்துக் கோவில்கள், வெற்றிலை, பொறியூர்தி, சுவீடன், சங்ககால வள்ளல்கள் என்னும் கட்டுரைகளைச் சேர்த்துக்கொள்ள அனுமதி யளித்த அவற்றின் உரிமையாளர்கட்கும், ராடார், பத்திரிகையின் செய்திகளும் கருத்துக்களும் என்னும் கட்டுரை களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்துதவிய ''சிந்தனை'' என்னும் சீரிய பத்திரிகையின் அதிபருக்கும், ''பெனிஸிலின்'' என்ற கட்டுரையைச் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்த ''அமுதசுரபி'' யின் பத்திராதிபருக்கும் எமது நன்றி உரிய தாகும்.

ஆசிரியர்கள்.

உள்ளுறை

செய்யுட் பகுதி

உரைநடைப் பகுதி

ஐந்தாம் படிவம்—பொது



செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்துப் பாடிய பின்னரே நூல் பாடத் தொடங்குவது முன்னோர் வழக்கம். அதனால் இந்தப் பாடப்புத்தகத்திலும் கடவுள் வாழ்த்து முதலிடம் பெற்றுள்ளது. ‘கடவுள்’ என்னும் சொல்லுக்குக் ‘கடத்தல்’ என்பது பொருள். மனம் மொழி மெய் ஆகிய மூன்றையும் கடந்து நிற்பது கடவுள். ஒவ்வொரு சமயத்தாரும் கடவுளை வேறு வேறு பெயரிட்டு அழைத்தாலும் கடவுள் ஒன்றே என்பதை நாம் உணர்தல் வேண்டும். இந்த உணர்ச்சியுடன் கடவுள் வாழ்த்தாக ஆன்றோர் பாடியவற்றுள் ஐந்து பாடல்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

1. ஐங்குறுநூறு

கடைச் சங்கப் புலவர்கள் அருளிச் செய்த நூல்களாகிய எட்டுத் தொகைகளில் ‘ஐங்குறுநூறு’ என்பது மூன்றாவது. மருதம் முதலிய ஐந்து திணையொழுக்கங்களை மற்ற நூல்களைக் காட்டிலும் குறைந்த அடியளவுள்ள நூறு பாக்களால் தனித் தனியே விளக்குவதால் இப்பெயர் பெற்றது. இது சொற்சுவை பொருட் சுவைகளிற் சிறந்தது; பொருள்களின் இயற்கையழகை நன்கு தெரிவிப்பது. இந்நூலின் முதலில் சிவபெருமான் வாழ்த்தாக அமைந்துள்ள செய்யுள் பின்வருவது. இதனை இயற்றியவர் கடைச் சங்கப் புலவருள் ஒருவராகிய பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவர். இவர் தொண்டை நாட்டினர். தமிழில் முதன்முதலாக இவர் இயற்றிய பாரதம் ஒன்று உண்டு.

அந்நூலியற்றிப் புகழ் பெற்றதால் 'பாரதம் பாடிய' என்ற அடைமொழி இவர் பெயரோடு வழங்குகிறது.

நீல மேனி வாலிழை பாகத்
தொருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகையுலகு முகிழ்த்தன முறையே.

2. தேவாரம்

சைவ சமயாசாரியர் நால்வரில் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரும் பல தலங்களிலும் சிவபெருமானை வழிபட்டுப் பாடிய தோத்திரப் பாடல்களின் தொகுப்புக்குத் 'தேவாரம்' என்று பெயர். இது 'தே வாரம்' எனப் பிரியும்; தெய்வத்தைப் பற்றிய இசைப்பாட்டு என்பது பொருள். பின்வரும் செய்யுள் திருஞான சம்பந்தர் அருளியது. இவர் சோழ நாட்டில் சீர்காழி யில் அவதரித்தவர். இவர் வாழ்ந்திருந்த காலம் ஏழாம் நூற் ருண்டு. திருச்சாய்க்காடு என்ற தலத்துச் சிவபெருமானைக் குறித்துப் பாடப்பெற்ற செய்யுள் இது.

நீநாளும் நன்னெஞ்சே! நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

3. திருநெடுந் தாண்டகம்

தாண்டகம் என்பது தமிழில் வழங்கும் பிரபந்த வகைகளுள் ஒன்று. அறுசீரினல் அமைப்பது குறுந்தாண்டகம் எனவும், எண்சீரால் அமைப்பது நெடுந்தாண்டகம் எனவும் கூறப்படும். 'திரு' என்பது உயர்வைக் குறிக்கும் அடைமொழி. இத் திரு நெடுந்தாண்டகம் ஆழ்வார்களின் அருளிச் செயல்களான நாலா யிர திவ்யப் பிரபந்தத்தில் அடங்கிய நூல்களில் ஒன்று. பின் வரும் பாடல் அப் பிரபந்தத்தில் நான்காவதாகும்.

இப் பிரபந்தத்தை இயற்றியவர் திருமாலடியார்களான ஆழ் வார்கள் பன்னிருவருள் ஈற்றவரான திருமங்கையாழ்வார். இவர் சோழ நாட்டிலுள்ள திருக்குறையலூரில் கள்ளர் மரபில் உதித்துச் சோழ மன்னனது சேனைத் தலைவராகத் திகழ்ந்தவர். இவர் வாழ்ந்த காலம் ஏழாம் நூற்ருண்டு. இவரும் திருஞான

சம்பந்தரும் சமகாலத்தவர் என்பர் ஆராய்ச்சியாளர். இவர் அருளிய பாடல்கள் ஆயிரத்துக்குமேல் உள்ளன.

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் றன்னை
இருநிலம்கால் தீநீர்விண் பூத மைந்தாய்ச்
செந்திறத்த தமிழோசை வடசொல் ஆகித்
திசைநான்கு மாய்த்திங்கள் நாயி றாகி
அந்தரத்தில் தேவர்க்கு மறிய லாகா
அந்தணனை அந்தணர்மாட் டந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவா தென்றும்
வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே.

குறிப்புரை

1. வால் இழை - பரிசுத்தமான ஆபரணங்களை யணிந்த உமாதேவி யார். ஒருவன் - சிவபெருமான். முகிழ்த்தன - தோன்றின, குவிந்து கிடக்கின்றன. கடவுள் ஒருவன், அவன் தாள்கள் இரண்டு, அவற்றினின் றும் தோன்றிய உலகங்கள் மூன்று என ஆசிரியர் நயம்பட உரைப்பது காண்க. நீல மேனி வாலிழை, ஒருவன் இருதாள் - முரண்தொடைகள். இரண்டு + தாள் = இருதாள்.

2. சாம் நாளும் - இறக்கப் போகின்ற நாள் இன்ன தென்பதையும். புகழ் நாமம் - புகழையும் திருநாமங்களையும், நவின்று ஏத்த - சொல்லித் துதிக்க. நவின்று - நவில்: பகுதி.

3. முதல்வன் தன்னை - காரணனுனவனும். செம் திறத்த தமிழ் ஓசை வடசொல் ஆகி - செவ்விய தன்மையையுடைய தமிழ் மொழியும் வட மொழியுமாகிய இரு மொழிகளையும் உண்டாக்கியவனும். அந்தரத்தில் - (எல்லாப் பொருள்களிலும்) வியாபித்திருக்குமிடத்தும். அந்தணனை - தூய்மையுடையவனும்.

பயிற்சி

1. பொருள் கூறுக: இழை, விசும்பு, திகிரி, நாயிறு.
2. பிரித்து எழுதுக: வாலிழை, இருதாள், திகழொளி, தமிழோசை.
3. இப்பகுதியில் வந்துள்ள உவம உருபு, முரண்தொடை, பண்புத் தொகை இவைகளைக் குறிப்பிடுக.

வினுக்கள்

1. இப்பகுதியில் வந்துள்ள 'எட்டுத் தொகை'ச் செய்யுள் எது?
2. ஐங்குறு நூறு, தேவாரம்—பெயர்க் காரணம் என்ன?
3. மூவகை உலகம் எவை? அவை முகிழ்த்த இடம் எது?
4. திருஞான சம்பந்தர் நெஞ்சுக் குரைக்கும் நல்லுரை யாது?
5. திருமாலின் பெருமையை ஆழ்வார் எவ்வாறு கூறுகிறுர்?
6. திருமங்கையாழ்வாரைப் பற்றி நீவிர் அறிந்ததைக் கூறுக.
7. சம்பந்தருக்குச் சம காலத்தவரான அடியார் சிலரைக் கூறுக.

II. நீதிக் கோவை

1. திருக்குறள்

இதனை இயற்றிய திருவள்ளுவர் என்பவர், வள்ளுவர் என்னும் பழந் தமிழ்க் குடியினர். திருக்குறள் என்னும் பெருநூலைச் செய்து பெரும்புகழ் பெற்றமையால், அக்குடிப் பெயரே இவர்க்குச் சிறப்பாக வழங்கலாயிற்று. வள்ளுவக் குடியினர் படையெழுச்சி, திருவிழா, திருமணம் ஆகிய விசேட காலங்களில் யானைமேல் முரசினை யேற்றி முழக்கி, அரசன் ஆணையை ஊரார்க்குத் தெரிவிக்கும் தொழிலினர் என்பர். திருக்குறளுக்கு உரை இயற்றியோர் பதின்மர். அவ்வுரைகளுள் பரிமேலழகர் இயற்றிய உரை இந்நாளில் சிறப்பாக வழங்கி வருகின்றது. திருவள்ளுவர் வாழ்ந்திருந்த காலம் கடைச்சங்க காலம் ஆகும்.

திருக்குறளிலிருந்து ஊக்கமுடைமை, இடுக்கணழியாமை என்னும் இரண்டு அதிகாரங்கள் இங்குத் தேர்ந்துகொள்ளப் பெற்றன.

ஊக்கமுடைமை

1. உடையார் எனப்படுவ தூக்கமஃ தில்லார்
   உடைய துடையரோ மற்று.
2. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
   நில்லாது நீங்கி விடும்.
3. ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
   ஒருவந்தங் கைத்துடை யார்.
4. ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா
   ஊக்க முடையான் உழை.
5. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
   உள்ளத் தனைய துயர்வு.
6. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
   தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.
7. சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
   பட்டுப்பா டூன்றுங் களிறு.
8. உள்ள மிலாதவர் எய்தார் உலகத்து
   வள்ளிய மென்னுஞ் செருக்கு.

9. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

10. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

இடுக்கணழியாமை

1. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.

2. வெள்ளத் தனைய இடும்பை யறிவுடையான்
உள்ளத்தி னுள்ளக் கெடும்.

3. இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்(கு)
இடும்பை படாஅ தவர்.

4. மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து.

5. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்க ணிடுக்கட் படும்.

6. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்(று)
ஓம்புதல் தேற்றா தவர்.

7. இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல்.

8. இன்பம் விழையான் இடும்பை யியல்பென்பான்
துன்ப முறுதல் இலன்.

9. இன்பத்து ளின்பம் விழையாதான் துன்பத்துள்
துன்ப முறுதல் இலன்.

10. இன்னாமை யின்ப மெனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.

குறிப்புரை

ஊக்கமுடைமை:—ஒரு தொழிலைச் செய்யும்போது சோர்ந்திராத மனக் கிளர்ச்சியை யுடையனாதல்.

முதல் நான்கு குறள்கள் கையிலுள்ள செல்வத்தைக் காட்டிலும் ஊக்கமே சிறந்ததென்று கூறுவன ; அடுத்த மூன்றும் ஊக்க முடையாரின் உயர்ச்சியைக் கூறுவன. இறுதியிலுள்ள மூன்றும் ஊக்கமில்லாதவரின் அழிவைக் கூறுவன.

1. உடையார் எனப்படுவது - (ஒருவர் சிறந்த பொருளை) வைத்துக் கொண்டுள்ளாரென்று சொல்லுதற்குச் சிறந்த காரணமாக வுள்ளது, ஊக்கம் - மனக்கிளர்ச்சியே. உடையது உடையரோ - (ஏற்கெனவே பெற்றுள்ள) பொருளையும் உடையவரோ?

2. உள்ளம் உடைமை - ஊக்கமுடையவராயிருத்தல். உடைமை - (நிலையுள்ள) சொத்து.

3. ஒருவந்தம் - நிலையான, ஊக்கம் - ஊக்கத்தை, கைத்து உடையார் - (தம் கைப்பொருளாகப் பெற்றவர், ஆக்கம் இழந்தேம் என்று - (செல்வத்தை இழந்தாராயினும்) கைப்பொருளை இழந்து விட்டோமென்று, அல்லாவார் - மனங்கலங்கார்.

4. அசைவு இலா - தளர்தலில்லாத, அதர்வினாய் - வழியை வினாவிக் கொண்டு, வினாய் - இறந்தகால வினையெச்சம், உழை - ஏழனுருபு.

5. வெள்ளத்து அனைய - வெள்ள நீரின் அளவின. உள்ளத்து அனையது - ஊக்கத்தின் அளவினது. (இக்குறளில் எடுத்துக் காட்டுவமை யணி வந்துள்ளது).

6. உள்ளுவது எல்லாம் - நினைப்பது எல்லாம், உயர்வு உள்ளல் - (மனிதர்) தம் உயர்ச்சியையே நினைக்கக் கடவர்; அது - அவ்வுயர்ச்சி, தள்ளினும் - (கைகூடாது) தவறினாலும், தள்ளாமை நீர்த்து - (அவ்வண்ணம்) ஒழிக்கப்படாத தன்மையை யுடையது.

7. களிறு - ஆண்யானை. புதை அம்பிற்பட்டு - தொகுதியாகிய அம்புகளால் புண்பட்டாலும், பாடு ஊன்றும் - தன் பெருமையை நிலை நிறுத்தும்; (அதுபோல) உரவோர் - ஊக்கமுடையவர், சிதைவு இடத்து - (உயர்ச்சிக்குக்) கேடு உண்டானபோதும். ஒல்கார் - மனத்தளர்ச்சியடையார்.

8. வள்ளியம் என்னும் செருக்கு - நாம் ஈகைக் குணத்தை யுடையோம் என்னும் தன்மதிப்பு.

9. யானை பரியது - யானை பெரிய உடம்பினையுடையது, கூர்ங் கோட்டது - கூரிய தந்தங்களையுடையது, ஆயினும் புலி தாக்குறின் வெரூஉம் - ஆனாலும் புலி எதிர்த்தால் அதற்கு அஞ்சும். (இக்குறளில் பிறிது மொழிதலணி வந்துள்ளது).

10. உரம் - திடமான அறிவு. உள்ளம் வெறுக்கை - ஊக்கத்தின் மிகுதி, அஃது இல்லார் மரம் - அவ்வூக்கமில்லாதார் மரங்களாவர். வேறு - (உலகத்து மரங்களுக்கும் இம் மரங்களுக்கும்) வடிவு வேற்றுமை, மக்கள் ஆதலே - மக்கள் வடிவினராயிருத்தலே (இக்குறளில் வேற்றுமை யணி வந்துள்ளது).

இடுக்கணழியாமை :—துன்பத்திற்காக மனங்கலங்கா திருத்தல், இடுங்கு + கண் = இடுக்கண். துன்பம் நேரும்போது கண் இடுங்கும்; ஆதலால் துன்பம் இடுக்கண் எனப்பட்டது.

முதலிரண்டு குறள்கள் விதியினால் துன்பம்நேரினும் மனங்கலங்கா

திருப்பதற்குரிய உபாயத்தைக் கூறும். அடுத்த மூன்றும் தெய்வத்தால் துன்பம் நேரினும் மனங்கலங்கலாகாது எனக் கூறும். ஆறும் குறள் பொருளில்லாதது பற்றி மனங்கலங்காதிருக்க வேண்டுமெனக் கூறும். இறுதியிலுள்ள நான்கு மெய்வருத்தத்தாலேற்படும் துன்பத்திற்கு மனங் கலங்கலாகாதெனக் கூறும்.

1. இடுக்கண் வருங்கால் - (விதிவசத்தால்) துன்பம் நேரிடும்போது. நகுக - மனம் மகிழ்க. அதனை அடுத்து ஊர்வது - அவ்விடுக்கண்ணை மேன்மேலும் நெருக்கியழிக்கக் கூடியது. அஃது ஒப்பது இல் - அந்த மகிழ்ச்சியை ஒத்திருப்பதன்றி (வேறொன்று) இல்லை.

2. வெள்ளத் தனைய இடும்பை - வெள்ளத்தைப் போன்ற கரையில வான துன்பங்கள் ; உள்ளத்தின் - ஊக்கத்தால், உள்ள - (அத்துன்பத் துக்கு மாறான இன்பம் என்று) நினைக்க.

3. இடும்பைக்கு - துன்பத்திற்கு, இடும்பை படாஅதவர் - துன்பப் படாதவர், இடும்பைக்கு - அத்துன்பத்திற்கே, இடும்பை படுப்பர் - துன் பத்தை உண்டாக்குவர். (இக்குறளில் வந்துள்ள அணி சொற்பொருட் பின்வருநிலையணி.)

4. மடுத்தவாய் - தடைப்பட்ட இடம். பகடு அன்னான் (வண்டியை இழுத்துச் செல்லும்) எருதை யொத்தவன். இடர்ப்பாடு உடைத்து - (தானே) துன்பப்படுதலை உடையது.

5. அழிவுஇலான் - மனவுறுதி நீங்குதலில்லாதவன், உற்ற இடுக் கண் - அடைந்த துன்பம். இடுக்கண்படும் - அழிந்துவிடும்.

6. பெற்றேம் என்று - (செல்வத்தைப்) பெற்றுள்ளோம் என்று, ஓம்புதல் தேற்றாதவர் - உலோபஞ்செய்தலை அறியாதவர். அற்றேம் என்று - (வறுமைக் காலத்து) யாம் பொருளற்றேமென்று, அல்லல்படுபவ - துன்பம் அனுபவிப்பரோ ?

7. மேல் - மேலோர் ; அறிவுடையோர். உடம்பு இடும்பைக்கு இலக்கு என்று - உடம்புகள் துன்பம் (எனப்படும் வாளுக்கு) இலக்காகும் எனத் தெளிந்து. கையாறு ஆ - இடும்பையாக.

8. விழையான் - விரும்பாதவனாகி. என்பான் - என்று தெளிந்திருப் பவன். விழையான், என்பான் - வினையாலணையும் பெயர்கள்.

9. இன்பத்துள் இன்பம் விழையாதான் - இன்பம் நேர்ந்தபோது அதனை அனுபவித்துக்கொண்டே அதில் பற்றில்லாதவன், துன்பத்துள் - துன்பம் நேர்ந்த காலத்தில், துன்பம் - அத்துன்பத்தைத் (அனுபவித்துக் கொண்டே), உறுதல் - மனத்தில் துன்புறுதல், இலன் - இலனாவான்.

10. இன்னாமை - முயற்சியால் வருந்துன்பம். ஒன்னார் - பகைவர்.

பயிற்சி

1. பொருள் கூறுக :—நீர்த்து, ஒருவந்தம், ஆக்கம், அதர், பாடு, உரவோர், கோடு, பகடு, ஒன்னார், கையாறு.

2. இப்பாக்களிலிருந்து எடுத்துக்காட்டுவமையணி, வேற்றுமை

யணி, சொற்பொருட் பின்வருநிலேயணி—இவைகளுக்கு உதாரணங்கள் தருக.

3. வினையாலணையும் பெயர், ஆகுபெயர், வினையெச்சம், எதிர்மறை வினை, வியங்கோள்வினை, வினைத்தொகை—இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் கொடு.

வினுக்கள்

1. உடையார் எனப்படுவோர் யார்? மற்றவர் ஏன் உடையரல்லர்?
2. பொருளுடைமை ஏன் உடைமையன்று?
3. எவர் கைப்பொருளை இழந்துவிட்டோமென்று மனங்கலங்கார்?
4. செல்வம் எவரிடம் வலிய வந்து சேரும்?
5. மனிதரின் உயர்ச்சி எவ்வளவினது?
6. ஏன் எப்போதும் உயர்வான எண்ணங்களையே நினைக்க வேண்டும்?
7. "சிதைவிடத்து" என்ற குறளிலுள்ள அணியை விளக்குக.
8. வள்ளியம் என்னும் செருக்கை எவர் எய்தார்? ஏன்?
9. "பரியது கூர்ங்கோட்ட தாயினும்" என்ற குறளில் வந்துள்ள அணியை விளக்கு.
10. எத்தகைய மக்கள் மரங்களாவர்? மரங்களுக்கும் அவர்க்குமுள்ள ஒற்றுமையென்ன? வேற்றுமையென்ன?
11. இடுக்கண் வரும்போது என்ன செய்யவேண்டும்? ஏன்?
12. வெள்ளத்தனைய இடும்பையையும் எவ்வகையால் அழிக்கலாம்?
13. "இடும்பைக்கிடும்பை படுப்பர்" என்ற குறளுக்குப் பதவுரை தருக. அதில் வந்துள்ள அணி யாது?
14. எவர் உற்ற இடுக்கண் தானே ஒழிந்திடும்? அவர் எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளார்? ஒப்புமையை விளக்குக.
15. எவருக்குத் துன்பம் அடுக்கிவரினும் இடுக்கண்படும்?
16. எவர் வறுமையுற்ற காலத்தும் 'அற்றேம்' எனத் துன்புறுர்?
17. 'இலக்கமுடம்பு' என்ற குறளின் கருத்து யாது?
18. இன்பத்தையும் துன்பத்தையும் எவ்வாறு கருதுபவன் துன்பம் அடையான்?
19. 'இன்பத்துளின்பம்' என்ற குறளுக்குப் பதவுரை தருக.
20. 'ஒன்னுர் விழையும் சிறப்பு' என்றுல் என்ன? அதை ஒருவன் எவ்வாறு பெறலாம்?

கட்டுரையாக்கம்

1. 'ஊக்கம்' என்பது பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.
2. 'மனங்கலங்காமை' என்பது பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

2. பழமொழி

பழமொழி யென்னுஞ் சொற்றொடர் பழமையான மொழி என விரியும். இது கடைச்சங்க காலத்து நூல்களிலொன்றாகிய பதினெண் கீழ்க் கணக்குகளில் ஒன்று; பழமொழி ஒவ்வொன்று இறுதியில் அமைந்த நானூறு வெண்பாக்களால் ஆகியது. இந் நூலில் வரும் செய்யுட்களில் சில நாலடியார் திருக்குறள் என்னும் நூலிலுள்ள பாட்டுக்களின் சொற்பொருட்களைத் தழுவி யுள்ளன.

இதன் ஆசிரியர் முன்றுறையரையனார். இவர் முன்றுரை யென்னும் ஊரையாண்ட ஒரு சிற்றரசர். இவர் சைன சமயத் தவர்.

தாம் நன்மை யடைதற்குத் தாமே காரணம்

1. எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார் தாந்தெரிதல் வேண்டா;
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ?மற் றில்லை
தமக்கு மருத்துவர் தாம்.

பெருஞ்செல்வர் தரித்திரப்பட்டாலும் தாழார்

2. நாடறியப்பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ?—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்த லில்.

பகைவரை வெல்லும் படை அரசனுடைய அன்பே

3. மறுமணத்த னல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி ஒழுகின்—செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கால் என்செய்ப?
ஆயிரங் காக்கைக்கோர் கல்.

அற்பரிடத்தில் அதிகாரம் கொடார்

4. உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமி லுள்ளத்த னாகி—நடக்கையின்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

இயற்கை மனவலி யில்லார்க்கு வலிமையை உண்டாக்க முடியாமை

5. வன்சார் புடைய ரெனினும் வலிபெய்து
தஞ்சார் பிலாதாரைத் தேசூன்ற லாகுமோ?
மஞ்சுசூழ் சோலை மலைநாட! யார்க்கானும்
அஞ்சுவார்க் கில்லை அரண்.

குறிப்புரை

1. எமக்கு - (தனியராயுள்ள) நமக்கு. தாம் தெரிதல் வேண்டா - தாம் தேடவேண்டியதில்லை. பிறர்க்குப் பிறர் - ஒருவருக்கு மற்றொருவர். 'தமக்கு மருத்துவர் தாம்' என்பது பழமொழி.

2. வாடிய - தளர்வுற்ற. வட்குபவோ - தாழ்வரோ? (தாழார்). வாடி - மெலிந்து. வலிந்து - நரம்பு இழுத்துக்கொண்டு. திரங்கி - உடல் சுருங்கி, கிடந்துஉ விடினும் - படுத்தேயிருந்தாலும். 'புலித்தலையை நாய் மோத்தலில்' என்பது பழமொழி. பிற்காலத்தில் இது வழக்கொழிந்தது போலும். நாடு - இடவாகு பெயராய் நாட்டாரைக் குறித்தது. இச்செய்யுள் எடுத்துக் காட்டுவமையணி.

3. மாநலத்த - பெரிய நன்மையையுடைய. உறு - அன்புற்ற. செறு மனத்தார் - அழிக்க வேண்டுமென்ற எண்ணமுடைய பகைவர். பாயிரம் - விருது. என் செய்ப - என்ன செய்ய வல்லார்? பகையரசர் படைகளை யோட்டக் குடிகள் மாட்டு அன்புள்ள ஒரு மன்னனே போதும் என்பது கருத்து. இச்செய்யுள் எடுத்துக் காட்டுவமையணி.

4. நடக்கையின் - நடத்தையினால். பெருமை - பெருமையை, மேன்மையை. ஒள்ளியன் அல்லான்மேல் - நல்லவனல்லாதவனிடத்தில் (ஒள் : பகுதி). கொடுத்துவிடல் - கொடுத்துவிடுவது போலும். இச்செய்யுளில் உபமேய உபமானங்கள் அபேதப்படுத்திக் கூறப்பட்டுள்ளதால் இது காட்சியணி.

5. மஞ்சு - மேகம். வல் சார்பு உடையர் எனில் உம் - வலிய சார்பை உடையவர் ஆனாலும். தம்சார்பு - தம்முடைய இயற்கையான மனவலிமை. தேசு - புகழையுண்டாக்கும் வீரம். அரண் - காவல்.

பயிற்சி

1. இப்பாடல்களில் வந்துள்ள பழமொழிகளை மட்டில் எடுத்தெழுதுக.

2. 'நாடறியப் பட்ட', 'உடைப்பெருஞ் செல்வத்து' என்ற பாடல்களில் வந்துள்ள அணிகள் யாவை?

3. பொருள் கூறுக :—திரங்கி, வட்குபவோ, பாயிரம், ஒள்ளியன், மஞ்சு.

4. பிரித்துக் காட்டுக :—வட்குபவோ, ஒள்ளியன், விடல், யார்க்கானும்.

வினுக்கள்

1. 'தமக்கு மருத்துவர் தாம்' என்னும் பழமொழியால் விளக்கப் படும் கருத்து யாது?

2. 'பெருஞ் செல்வர் வாடிய காலத்தும் வட்கார்'—எதுபோல?

3. 'ஆயிரங் காக்கைக்கோர் கல்' என்னும் உபமான முகத்தான் விளக்கப்படும் உபமேயம் யாது?

4. குரங்கின்கைக் கொள்ளி கொடுத்துவிடலாவது எது?

5. 'வன்சார் புடையர்' என்ற செய்யுளுக்குப் பொழிப்புரை கூறுக.

கட்டுரையாக்கம்

நும் பாடப் பகுதியில் வந்துள்ள பழமொழிகளில் ஒன்றை விளக்க ஒரு கதை எழுதுக.

3. அறநெறிச் சாரம்

அறநெறிச் சாரம் என்ற தொடர் தருமவழிகளுட் சாரமான வற்றைக் கூறும் நூல் எனப் பொருள்படும். திருக்குறள் முதலிய நீதி நூல்களின் சாரங்களும், ஜைநசமய நூல்களிற் கூறிய சன்மார்க்கங்களின் சாரங்களும் இதில் அடங்கியுள்ளன. இதில் 226 வெண்பாக்கள் உள்ளன.

இந்நூலை இயற்றியவர் முனைப்பாடியார். இவர் திருமுனைப் பாடி நாட்டினர் என்பவர். இவர் ஜைன மதத்தினர். சுமார் 500 ஆண்டுகட்கு முன்னர்த் திரட்டப்பட்ட புறத்திரட்டு என்னும் நூலில் இவருடைய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஆதலால், இவர் காலம் இன்றைக்கு ஐந்நூறு வருடங்கட்கு முந்தியதென்று தெரிகிறது.

நல்லற இயல்பு

1. வினையுயிர் கட்டுவீ டின்ன விளக்கித்
தினையனைத்தும் தீமையின் றாகி நினையுங்கால்
புல்லறத்தைத் தேய்த்துலகி னோடும் பொருந்துவதாம்
நல்லறத்தை நாட்டு மிடத்து.

புறங்கூறலின் இழிவு

2. முன்னின்றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்குஞ் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை.

அன்போடு தருமோபதேசஞ் செய்பவர்

3. காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய்நெரித்துப்
பாலொடு நெய்பெய்யும் தாயனையர்—சால
அடக்கத்தை வேண்டி அறன்வலிந்து நாளும்
கொடுத்துமேற் கொண்டொழுகு வார்.

மீதூணுல் வரும் கேடு

4. புகாப்பெருக வூட்டிற் புலன்கண்மிக் கூறி
அவாப்பெருகி யற்றந் தருமால்—புகாவுமோர்
பெற்றியா னூட்டிப் பெரும்பயன் கொள்வதே
கற்றறிந்த மாந்தர் கடன்.

கெடுவார் இயல்பும் அறிவார் தொழிலும்

5. தண்டாமம் பொய்வெகுளி பொச்சாப் பழுக்காறென்
றைந்தே கெடுவார்க் கியல்பென்ப ; பண்பாளா !
ஈதல்அறிதல் இயற்றுதல் இன்சொற்கற்(று)
ஆய்தல் அறிவார் தொழில்.

குறிப்புரை

1. நாட்டுமிடத்து - நிலைநிறுத்தும்போது. நினையுங்கால் - ஆராயுமிடத்து. வினை - இருவினைகளின் தன்மை. உயிர் - ஆன்மாவின் தன்மை. கட்டு - (உயிர்களுக்கு ஏற்பட்டுள்ள) பந்தங்களின் தன்மை. வீடு - விடுதலையுண்டாகும் வகை. இன்ன - (ஆகிய) இவற்றை. உலகினோடு பொருந்துவது - உலகத்தாரின் ஒழுக்கத்துடன் பொருத்தமுற நிற்பது. வினை உயிர் கட்டு வீடு - உம்மைத்தொகை.

2. சான்றோரை - பெரியோர்க்கு. (இது இகழ்ச்சிக் குறிப்பாகிய எதிர்மறையிலக்கணை). தேவர்கள் - கண்ணிமையா இயல்பினர். அவர்கள் கண்ணிமையா திருத்தற்குக் கவி சமத்காரமாகக் காரணம் கூறு முகத்தான் புறங்கூறலின் இழிவை விளக்குகிறார். இச்செய்யுள் ஏதுத் தற்குறிப்பேற்றவணி.

3. அறன் - தருமங்கள். வலிது கொடுத்து - வலிய உபதேசித்து. வாய்நெரித்து - (பாலடையை) வாயில் நெரித்து வைத்து. நெய் - மருந்தெண்ணெய். இச்செய்யுள் உவமையணி.

4. மீதூண் - பெருந்தீனி. புகா - உணவு. ஊட்டின் - உண்டால். மிக்கு ஊறி - மிகுதியாகக் கொழுத்து. அற்றம் - தீமை. ஓர் பெற்றியான் - ஒரு வகையால் (தகுந்த அளவில்). பெரும்பயன் - சிறந்த பயனாகிய மோட்சம்.

5. பண்பாளா - நற்குணத்தைக் கொள்ள விரும்புவோனே. தாண்டா- சிறப்பற்ற. மம் - மானம் (அல்லது மமதை). பொச்சாப்பு - மறதி. இயல்பு - சுபாவமாகிய தீக்குணங்கள். இயற்றுதல் - (நல்லன) செய்தல். கெடுவார்க்கு இயற்கையாய்த் தோன்றுவன சிறப்பில்லா மானம் முதலிய ஐந்து; அறிவார்க்கோ ஈதல் முதலிய ஐந்து.

பயிற்சி

1. பொருள் கூறுக :—கட்டு, புகா, அற்றம், பெற்றி, மம், பொச் சாப்பு.
2. பிரித்துக் காட்டுக :—கன்னின்று, தண்டாமம், மீதூண்.
3. தொடரிலக்கணம் கூறுக :—வினையுயிர்கட்டுவீடு, புல்லறம்.

வினாக்கள்

1. நல்லறம் என்பது யாது ?
2. தேவர் இமையாதிருப்பதற்குக் கவி கூறும் காரணம் யாது ?
3. அன்போடு தருமோபதேசம் செய்யும் பெரியோர் எவ்வாறு தாய் மாரை யொப்பர் ?
4. கற்றறிந்த மாந்தர் கடன் யாது ?
5. கெடுவார் இயல்புகள் யாவை ? அறிஞர் தொழில்கள் யாவை ?

கட்டுரையாக்கம்

' நல்லறம் ' என்பது பற்றி இருபது வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

III. தொடர்நிலைச் செய்யுள்

1. பெரிய புராணம்

'பெரிய புராணம்' என்பது பெருமை பெற்ற சிவனடியார் எழுபத்திருவருடைய பழமையான வரலாற்றை யுணர்த்தும் நூல். இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பது. இதனை இயற்றியவர் சேக்கிழார்.

சேக்கிழார் தொண்டை மண்டலத்தில் குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் சேக்கிழார் மரபில் தோன்றியவர். இவருடைய இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்பது. அநபாய சோழன் இவரைத் தம் அமைச்சராகக் கொண்டான். அரசன் சமண மதச் சார்புள்ள காப்பியங்களைப் பயின்று மகிழ்வதைக் கண்ட சேக்கிழார், அவனைச் சைவ பரமாயுள்ள நூல்களில் ஈடுபடும்படி வற்புறுத்திக் கூறினர்; அவன் விருப்பப்படி திருத்தொண்டர்களது வரலாற்றைத் 'திருத்தொண்டர் புராணம்' என்னும் காப்பியமாகப் பாடினர். சோழன் அவருக்குத் தொண்டர் சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயரை யளித்தனன். இவர் இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் என்பர்.

ஏனாதி நாத நாயனர் புராணம்

புண்டரிகம் பொன்வரைமேல் ஏற்றிப் புவியளிக்கும்
தண்டரள வெண்கவிகைத் தார்வளவர் சோணாட்டில்
வண்டறைபூஞ் சோலை வயல்மருதத் தண்பனை சூழ்ந்(து)
எண்திசையும் ஏறியசீர் எயின்மூதூர் எயினனூர். (1)

வேழக் கரும்பினொடு மென்கரும்பு தண்வயலில்
தாழக் கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மண்ணியஅப் பொற்பதியில்
ஈழக் குலச்சான்றார் ஏனாதி நாதனர். (2)

தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டின்
நன்மைக்கண் நின்ற நலமென்றுங் குன்றாதார்
மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றுந்
தன்மைத் தொழில் விஞ்சை யிற்றலைமை சார்ந்துள்ளார். (3)

வாளின் படைபயிற்றி வந்த வளமெல்லாம்
நாளும் பெருவிருப்பால் நண்ணுங் கடப்பாட்டில்
தாளும் தடமுடியும் காணுதார் தம்மையுந்தொண்(டு)
ஆளும் பெருமான் அடித்தொண்டர்க் காக்குவார். (4)

நள்ளார் களும்போற்றும் நன்மைத் துறையின்கண்
எள்ளாத செய்கை இயல்பின் ஒழுகுநாள்
தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயத்தின்
உள்ளான் அதிசூரன் என்பான் உளனுனன். (5)

மற்றவனுங் கொற்ற வடிவாட் படைத்தொழில்கள்
கற்றவர்கள் தன்னிற் கடந்துள்ளார் இல்லையெனும்
பெற்றிமையான் மாநிலத்து மிக்க பெருமிதம்வந்(து)
உற்றுலகில் தன்னையே சால மதித்துள்ளான். (6)

தானுள் விருத்திகெடத் தங்கள்குலத் தாயத்தின்
ஆனுத செய்தொழிலாம் ஆசிரியத் தன்மைவளம்
மேனுளுந் தான்குறைந்து மற்றவர்க்கே மேம்படலால்
ஏனுதி நாதர்திறத் தேலா இகல்புரிந்தான். (7)

கதிரோன் எழமழுங்கிக் கால்சாயுங் காலை
மதிபோல் அழிந்துபொரு மற்றவனுஞ் சுற்றப்
பதியோ ருடன்கூடப் பண்ணியமர் மேற்சென்(று)
எதிர்போர் விளைப்பதற்கே எண்ணியது துணிந்தான். (8)

தோள்கொண்ட வல்லாண்மைச் சுற்றத் தொடுந்துணையாங்
கோள்கொண்ட போர்மள்ளர் கூட்டத் தொடுஞ்சென்று
"வாள்கொண்ட தாயம் வலியாரே கொள்வ"தென
மூள்கின்ற செற்றத்தான் முன்கடையில் நின்றழைத்தான். (9)

வெங்கண் புலிகிடந்த வெம்முழையில் சென்றழைக்கும்
பைங்கண் குறுநரியே போல்வான் படைகொண்டு
பொங்கிப் புறஞ்சூழ்ந்து போர்குறித்து நேர்நின்றே
அங்கண் கடைநின் றழைத்தான் ஒலிகேளா, (10)

"ஆர்கொல் பொர அழைத்தார்?" என்றரியேற் றிற்கிளர்ந்து
சேர்வு பெறக்கச்சில் செறிந்தவுடை மேல்வீக்கி
வார்கழலுங் கட்டி வடிவாள் பலகைகொடு
போர்முனையில் ஏனுதி நாதர் புறப்பட்டார். (11)

புறப்பட்ட போதின்கண் போர்த்தொழில் வாள்கற்கும்
விறற்பெருஞ்சீர்க் காளையர்கள் வேறிடத்து நின்ருர்
மறப்படைவாள் சுற்றத்தார் கேட்டோடி வந்து
செறற்கரும்போர் வீரர்க் கிருமருங்குஞ் சேர்ந்தார்கள். (12)

வந்தழைத்த மாற்ருன் வயப்புலிபோத் தன்னுர்முன்
"நந்தமது வாள்பயிற்று நற்ருயங் கொள்ளுங்கால்
இந்தவெளி மேற்கை வகுத்திருவேம் பொருபடையும்
சந்தித் தமர்விளைத்தால் சாயாதார் கொள்வதென, (13)

என்றுபகைத் தோனுரைப்ப ஏனாதி நாதர் "அது
நன்றுனக்கு வேண்டுமேல் நண்ணுவன்" என் றுள்மகிழ்ந்து
சென்றவன்முன் சொன்ன செருக்களத்துப் போர்குறிப்பக்
கன்றி இருபடையும் கைவகுத்து நேர்மலைவார். (14)

வாளொடு நீள்கை துடித்தன ; மார்பொடு வேல்கள் குளித்தன ;
தோளொடு வாளி நிலத்தன; தோலொடு தோல்கள் தகைத்தன ;
தாளொடு வார்கழல் இற்றன; தாரொடு சூழ்சிரம் அற்றன;
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர்செய் களத்தினில். (15)

இம்முனைய வெம்போரில் இருபடையின் வாள்வீரர்
வெம்முனையில் வீடியபின் வீடாது மிக்கொழிந்த
தம்முடைய பல்படைஞர் பின்னாகத் தாமுன்பு
தெம்முனையில் ஏனாதி நாதர் செயிர்த்தெழுந்தார். (16)

வெஞ்சினவாள் தீயுமிழ வீரக் கழல்கலிப்ப
நஞ்சணிகண் டர்க்கன்பர் தாம்எதிர்ந்த ஞாட்பின்கண்
எஞ்சிஎதிர் நின்ற இகல்முனையில் வேல்உழவர்
தஞ்சிரமுந் தோளுரமுந் தாளுரமும் தாந்துணித்தார். (17)

தலைப்பட்டார் எல்லாருந் தனிவீரர் வாளில்
கொலைப்பட்டார்; முட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம்போ லாயினர். (18)

இந்நிலைய வெங்களத்தில் ஏற்றழிந்த மானத்தால்
தன்னுடைய பல்படைஞர் மீண்டார் தமைக்கொண்டு
மின்னொளிவாள் வீசி விறல்வீரர் வெம்புலியே(று)
அன்னவர்தம் முன்சென் றதிசூரன் நேரடர்ந்தான். (18)

மற்றவர்தஞ் செய்கை வடிவாள் ஒளிகாணச்
சுற்றிவரும் வட்டணையில் தோன்ற வகைகலந்து
பற்றியடர்க் கும்பொழுதில் தானும் படைபிழைத்துப்
பொற்றடந்தோள் வீரர்க் குடைந்து புறகிட்டான். (20)

போன அதிசூரன் போரில் அவர்கழிந்த
மானமிக மீதூர மண்படுவான் கண்படான்
ஆனசெயல் ஓரிரவுஞ் சிந்தித் தலமந்தே
'ஈனமிகு வஞ்சனையால் வெல்வன்' என எண்ணினன். (21)

சேட்டாருங் கங்குல் புலர்காலைத் தீயோனும்
'நாட்டாரைக் கொல்லாதே நாமிருவேம் வேறிடத்து
வாட்டாயங் கொள்போர் மலைக்க வருக' எனத்
தோட்டார்பூந் தாரார்க்குச் சொல்லிச் செலவிட்டான். (22)

இவ்வாறு கேட்டலுமே ஏனாதி நாதனர்
"அவ்வாறு செய்தல் அழகி" தென அமைந்து
கைவாள் அமர்விளைக்கத் தான்கருதும் அக்களத்தே
வெவ்வாள் உரவோன் வருகஎன மேற்கொள்வார். (23)

சுற்றத்தார் யாரும் அறியா வகைகடர்வாள்
பொற்பலகை யுந்தாமே கொண்டு புறம்போந்து
மற்றவன்முன் சொல்லி வரக்குறித்த அக்களத்தே
பற்றலனை முன்வரவு பார்த்துத் தனிநின்றார். (24)

தீங்கு குறித்தழைத்த தீயோன் 'திருநீறு
தாங்கிய நெற்றியினர் தங்களையே எவ்விடத்தும்
ஆங்கவருந் தீங்கிழையார்" என்ப தறிந்தானைப்
பாங்கில் திருநீறு பண்டு பயிலாதான். (25)

வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
உண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன்கொண்டு
வண்ணச் சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப் போர் வீரர்க்குச் சொன்னஇடம் புகுந்தான். (26)

வென்றிமடங்கல் விடக்குவர முன்பார்த்து
நின்றாற்போல் நின்ற நிலைகண்டு தன்நெற்றி
சென்று கிடைப்பளவுந் திண்பலகை யான்மறைத்தே
முன்தனிவீ ரர்க்கெதிரே மூண்டான் மறம்பூண்டான். (27)

அடல்விடையே றென்ன அடர்த்தவனைக் கொல்லும்
இடைதெரிந்து தாள்பெயர்க்கும் ஏனாதி நாதர்
புடைபெயர்ந்த மாற்றான் பலகை புறம்போக்கக்
கடையவன்தன் நெற்றியின்மேல் வெண்ணீறு தாங்கண்டார்.(28)

கண்டபொழு தே''கெட்டேன் முன்பிவர்மேற் காணாத
வெண்திருநீற் றின்பொலிவு மேற்கண்டேன் வேறினிஎன் ?
அண்டர்பிரான் சீரடியார் ஆயினார்'' என்றுமனங்
கொண்(டு) ''இவர்தங், கொள்கைக் குறிவழிநிற் பேன்''என்று(29)

கைவா ளுடன்பலகை நீக்கக் கருதியது
செய்யார் 'நிராயுதரைக் கொன்றார் எனுந்தீமை
எய்தாமை வேண்டும் இவர்க்(கு)' என்(று) இரும்பலகை
நெய்வா ளுடனடர்த்து நேர்வார்போல் நேர்நின்றார். (30)

அந்நின்ற தொண்டர் திருவுள்ள மாரறிவார்?
முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்
இந்நின்ற தன்மை அறிவார் அவர்க்கருள
மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளிநின்றார். (31)

மற்றினிநாம் போற்றுவதென்? வானோர் பிரான்அருளைப்
பற்றலர்தங் கைவாளால் பாசம் அறுத்தருளி
உற்றவரை என்று முடன்பிரியா அன்பருளிப்
பொற்றொடியாள் பாகனார் பொன்னம் பலமணைந்தார். (32)

குறிப்புரை

1. புண்டரிகம் - புலிக்கொடி. பொன்வரை - பொன்மையான இமய மலை. வளவர் - சோழவரசர். தண்தரளம் வெண்கவிகை - குளிர்ந்த முத்துக் களினாலாகிய வெண்குடை. புண்டரிகம் - புலி; புலியின் உருவமெழுதிய கொடிக்குத் தானியாகு பெயர்.

2. வேழம் கரும்பு - நாணற் கரும்பு. சாலி - செந்நெற் பயிர். ஏனாதி யென்பது வேந்தனாற் கொடுக்கப்படும் பட்டப் பெயர்களிலொன்று. இச் சொல்லுக்குப் படைத்தலைவன் என்ற பொருளும் உண்டு.

3. வடி - கூரிய. பயிற்றும் - கற்பிக்கின்ற. விஞ்சை - வித்தை. குன்றாதார் : எதிர்மறை வினையாலணையும் பெயர்.

4. வந்த - கிடைத்த. தாளும் தடமுடியும் காணாதார் - (சிவபிரா னுடைய) அடியையும் பெரிய முடியையும் காணமாட்டாதவரான திருமா லும் பிரமனும், தொண்டாளும் - அடிமையாகக் கொண்டருளிய. கடப் பாடு - கடமை. தடம் : உரிச்சொல்.

5. நள்ளார் - பகைவர். துறை - (சிவபக்தி) மார்க்கம். எள்ளாத - பழிக்காத. தள்ளாத - தவறுதலில்லாத. தாயத்தின் உரிமை - பங்காளி யுரிமை. நள்ளார் × நட்டார்.

6. கொற்றம் - வெற்றி (கொன்று அடைவது கொற்றம்). பெற்றிமை - தன்மை. பெருமிதம் - கருவம்.

7. விருத்தி - பிழைப்பு. ஆனுத - குறைவில்லாத. ஏலா - (நீதிக்கு) ஏற்காத ; (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்). இகல் - பகை.

8. மழுங்கி - ஒளி குறைந்து. கால் சாயும் - அழிவடைகின்ற. அமர் - போர்.

9. கோள்கொண்ட - வலிமையைக் கொண்டுள்ள. மள்ளர் - வீரர். செற்றம் - சினம். முன்கடை - தலைவாயில்.

10. வெம் முழை - கொடிய குகை. பைங்கண் - பசுமையான கண். பொங்கி - கோபித்து. அழைத்தான் ஒலி கேளா - அறை கூவின அதிசூர னுடைய குரலைக் கேட்டு.

11. அரிஏறு - ஆண் சிங்கம். வீக்கி - கட்டி. பலகை - கேடகம்.

12. விறல் - வலிமை. காளையர் - காளை போன்ற வீரர். மறம் படை - கொடுமையையுடைய படை. செறல் - அழித்தல்.

13. வயம்புலி போத்து - வலிமையையுடைய ஆண் புலி. தாயம் - பங்குப் பொருள். கைவகுத்து - அணிவகுக்கப் பெற்று. சாயாதார் கொள் வது - தோலாதவரே பெற்றுக் கொள்ள வேண்டியது. பொருபடை : வினைத் தொகை.

14. போர் குறிப்ப - போர் செய்யலாமென்று தெரிவிக்க. கன்றி - சினங்கொண்டு. மலைவார் - போர் செய்வாராயினர். ஏல்—' எனில் ' என் பதன் மரூஉ.

15. நாளொடு சீறி - (தம்) வாழ்நாளைக் கோபித்து (இலட்சியஞ் செய் யாமல்) துடித்தன - (அறுபட்டுத்) துடித்தன. குளித்தன - முழுகின. வாளி - அம்பு. தோல் பரிசை - கேடகம்.

16. வீடியபின் - இறந்த பின்பு. தெவ் + முனை = தெம்முனை - போர்க் களம்.

17. நஞ்சு அணி கண்டர் - விடத்தையுண்டு அதனாலான நீலநிறத் தைக் கழுத்தில் அணியாகக் கொண்ட சிவபெருமான். ஞாட்பு - போர்க் களம். வேல் உழவர் - வேற்படையேந்திய வீரர். உரம்உம் - மார்பையும்.

18. முட்டாதார் - எதிர்த்துப் போர் செய்யாதவர். கொல்களம் - கொல் லப்படுகின்ற போர்க்களம். மெய்யுணர்வு தோன்றும்போது காமம் முதலிய குற்றம் நீங்கிவிடுவதுபோல நாயனாரைக் கண்டதும் பகைவர் ஓடினர் என்பது கருத்து. இது உவமையணி.

19. ஏற்று - எதிர்த்து. நேர் அடர்ந்தான் - போர் செய்தான். ஏற்று - 'ஏல்' என்னும் பகுதியினடியாகப் பிறந்த இறந்தகால வினையெச்சம்.

20. வட்டணையில் - கேடகத்தினால். கலந்துபற்றி - எதிர்த்துப் பிடித்து. பிழைத்து - உயிர் தப்பி- உடைந்து - தோற்று.

21. மீது ஊர - அதிகமாகத் தோன்ற. மண்படுவான் - வெறுந் தரையிற் படுப்பவனுய். ஈனம் - அழிவு. மண்படுவான் கண்படான் - முரண்தொடை.

22. சேடுஆரும் - நீடித்தல் பொருந்திய. கங்குல் - இரவு. வாள் தாயம் கொள் போர் - வாள் வித்தையால் பங்குரிமையைப் பெற்றுக்கொள் வதற்குக் காரணமான போர். செலவிட்டான் - (ஆளைப்) போக்கினுன்.

23. வெம் வாள் உரவோன் - வெவ்விய வாளையுடைய வலிமை மிக்க அதிசூரன். மேற்கொள்வார் - உடன்படுவரானுர்.

24. பற்றலன் - பகைவன். வரவு - தொழிற்பெயர்.

25. பாங்கின் - நன்மையையுடைய. பயிலாதான் - தரியாதவனு யிருந்தும்.

26. வஞ்சம் கறுப்பு - வஞ்சமாகிய களங்கம்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வண்ணம் - அழகு.

27. மடங்கல் - ஆண் சிங்கம். விடக்கு - மாமிசவுணவுக்குரிய மிருகம் (ஆகுபெயர்). மறம் - பாவச் செயல். கிடைப்பு அளவும் - எதிர்க்கத் தொடங்கும் வரையிலும். இச்செய்யுளில் உவமையணி வந்துள்ளது.

28. அடல் - வலிமை. விடைஏறு - சிறந்த காளை. தாள் - பாதம். கடையவன் - அதமன்; கீழோன்.

29. இவர்தம் கொள்கை குறி வழி நிற்பேன் - இவருடைய எண்ணம் குறிக்கும் வழியில் நான் ஒழுகுவேன்.

30. இரு பலகை - பெரிய கேடகம். நெய்வாள் - நெய் பூசிய வாள். அடர்ந்து நேர்வார் போல் - எதிர்த்துப் பொருபவர் போல.

31. முற்றுவித்தான் - நிறைவேற்றினுன். மின்நின்ற - மின்னலைப் போல் விளங்குகின்ற.

32. பாசம் - இருவினைப் பந்தம். பொன் தொடியாள் பாகனுர் - பொன்னுலாகிய தொடி யென்னும் ஆபரணத்தைப் பூண்ட உமாதேவியைத் தம் வாம பாகத்திலே கொண்ட சிவபெருமான். பொன்னம்பலம் - சிதம் பரத்திலுள்ள கனகசபை.

பயிற்சி

1. பொருள் கூறுக:—சாலி, நள்ளார், ஏலா, இகல், முழை, தோல், வட்டணை, விடக்கு.

2. ஆகுபெயர், வினையாலணையும் பெயர், வினைத்தொகை, பண்புத் தொகை, இருபெயரொட்டு—இவற்றிற்கு இப்பகுதியிலிருந்து ஒவ்வோ ருதாரணம் தருக.

3. பிரித்துக் காட்டுக:—பொற்பதி, வாட்படை, பைங்கண், தெம் முனை, ஞாட்பின்கண், வெண்ணீறு.

வினுக்கள்

1. சோழுடும் எயினனூரும் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளன ?

2. ஏனுதி நாதனர் எந்த நலங் குன்ருதவர் ? என்ன தொழில் செய்துவந்தார் ?

3. நாயனர் தாம் ஈட்டிய பொருளை எவ்வாறு செலவிட்டார் ?

4. அதிசூரன் என்பான் யார் ? எத் தன்மையினன் ? ஏன் நாயனர் மீது பகைமை கொண்டான் ?

5. அதிசூரன் நாயனரை எவ்வாறு அறைக்கூவிப் போருக்கழைத்தான் ?

6. 'வெங்கண் புலி கிடந்த' என்ற செய்யுளில் வந்துள்ள அணியினை விளக்குக.

7. ஏனுதி நாயனர் போர்க்கோலம் பூண்டதை விவரி.

8. " இருவேம் பொருபடையும் சந்தித் தமர்விளைத்தால் சாயாதார் கொள்வது "—இதனை சந்தர்ப்பங் கூறி விளக்குக.

9. நாயனர் படைக்கும், அதிசூரன் படைக்கும் நிகழ்ந்த போரை விவரித்துக் கூறுக.

10. " தலைப்பட்டார் எல்லாரும் " என்ற செய்யுளில் வந்துள்ள அணியினை விளக்குக.

11. " ஈனமிகு வஞ்சனையால் வெல்வன் " எனக் கருதியவன் யார் ? ஏன் அவ்வாறு கருதினன் ?

12. அதிசூரன் நாயனருக்கு என்ன செய்தி சொல்லியனுப்பினன் ?

13. ஏனுதி நாயனரை வெல்ல அதிசூரன் செய்த சூழ்ச்சி யாது ?

14. அதிசூரன் திருநீறணிந்திருந்தமையைக் கண்ட நாயனர் என்ன எண்ணினர் ?

15. " இவர்தம் கொள்கைக் குறிவழி நிற்பேன் "—சந்தர்ப்பங் கூறுக.

16. நாயனர் படைக்கலங்களைக் கைவிடாமல் அதிசூரனை எதிர்ப்பவர் போல் நடிக்கக் காரணம் என்ன ?

17. " முன்னின்ற பாதகனுந் தன் கருத்தை முற்றுவித்தான் "— பாதகன் யார் ? அவன் கருத்து யாது ? அதனை எவ்வாறு முற்றுவித்தான் ?

18. மின்னின்ற செஞ்சடையார் செய்தது யாது ?

கட்டுரையாக்கம்

ஏனுதி நாதரின் வரலாற்றை ஒன்றறைப் பக்க அளவில் வரைக.

2. வில்லிபாரதம்

வில்லிபுத்தூரராற் செய்யப்பட்ட பாரதம் வில்லிபாரதம் எனப்படும். பாரதம் என்பதற்கும் பரதனது வமிசத்தாரைப் பற்றிய நூல் என்பது பொருள். பரதனது வமிசத்திலுதித்தோர் பாண்டவரும் துரியோதனுதியருமாவர். இந்நூலே வேத வியாசமாமுனிவர் முதலில் வடமொழியில் இயற்றினர். அதன் வழி நூல் வில்லிபாரதம். இதிகாசங்கள் இரண்டனுள் பாரதம் ஒன்று. மற்றது இராமாயணம்.

வில்லிபுத்தூரார் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். இவர் மதம் வைணவம். இவர் வரபதியாட் கொண்டான் என்ற சிற்றரசனிடம் ஆஸ்தான பண்டிதராயிருந்தார். அவன் வேண்டுகோளின்படி தமிழில் பாரதத்தை (முதல் பத்துப் பருவங்களை)ப் பாடினர். இவருடைய காலம் 14-ம் நூற்றுண்டு. இவர் வடமொழிச் சொற்களைத் தம் செய்யுட்களில் மிகுதியாகவும், நயத்துடனும் உபயோகித்திருக்கிறர். இவர் பாடல்களில் பலவகை அணிகளும் அமைந்துள்ளன.

கதைத் தொடர்ச்சி : பாரதப்போர் மூண்டது. துரியோதனுதியர் பக்கத்தில் பீஷ்மர் பத்து நாள் வரையில் சேனைத் தலைவராயிருந்தார். பின்னர் துரோணர் ஐந்து நாள் சேனுபதியாயிருந்து மாண்டார். பிறகு கர்ணன் சேனுபதியானன். பதினேழாம்நாள் நடந்தபோரில் அவன் வலிகுறைந்தவனுனன்.

கன்னபருவம்

கண்ணன் கன்னனிடம் வருதல்

1. அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போ
யாதவன்சாய்தல்கண் டருளி
முத்தருக் கெல்லா மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய முதல்வன்
சித்திரச் சிலைக்கை விசயனைச் 'செருநீ
யொழி' கெனத் தேர்மிசை நிறுத்தி
மெய்தவப் படிவ வேதிய னுகி
வெயிலவன் புதல்வனை யடைந்தான்.

இயைந்ததொன்று அளிக்க வேண்டுதல்

2. " தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன் ;
மேருவி னிடைத்தவம் பூண்டேன் ;
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
கடர்தரத் தோன்றிய தோன்ருல்."

கன்னன்பாற் கண்ணன் விரும்பிய பொருள்

3. என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப,
இருசெவிக் கமுதெனக் கேட்டு,
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையான்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்
நன்றென நகைத்துத் "தரத்தகு பொருணீ
நவில்" கென நான்மறை யவனும்
"ஒற்றிய படிநின் புண்ணியம் அனைத்தும்
உதவு'கென் றலுமுள மகிழ்ந்தான்.

கன்னன் கூறுதல்

4. " ஆவியோ நிலையிற் கவங்கிய தியாக்கை
யகத்தோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெல்லாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்ருற்
புண்ணியம் இதனினும் பெரிதோ !"

கன்னன் தன் இதய இரத்தங்கொண்டு தானம் அளித்தல்

5. என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
விறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினல் நோக்கிக்
" கைப்புன லுடன்றரு"கென்ன,

அன்னவன் இதயத் தம்பின்வாய் அம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்ருன்
முன்னமோ ரவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன்.

வரங்கேட்குமாறு கண்ணன் கன்னனுக்குக் கூறுதலும் கன்னன் கேட்டலும்

6. மல்லலந் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்து " நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக வுனக்குத் தருதும் என்றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான் ;
" அல்லல்வெவ் வினையால் இன்னமுற் பவமுண்
டாயினு மேழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயம்நீ யளித்தருள் " என்ருன்.

கண்ணன் வரம் அளித்தல்

7. மைத்துனன் உரைத்த வாய்மை கேட்டையன்
மனமல ருகந்துகந் தவனைக்
கைத்தல மலரான் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணை நீ ராட்டி
" எத்தனை பிறவி யெடுக்கினும் அவற்றுள்
ஈகையுஞ் செல்வமு மெய்தி
முத்தியும் பெறுதி முடிவில் " என் றுரைத்தான்
மூவரும் ஒருவனும் மூர்த்தி.

கண்ணன் அளித்த தரிசனம்

8. போற்றிய கண்ணன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்முன் அன்று
தோன்றிய படியே தோற்றினன் முடிவுந்
தோற்றமு மிலாதபைந் துளவோன்.

கன்னன் அடைந்த மகிழ்ச்சி

9. அமரரா னவரும் அமரயோ னிகளும்
அமரருக் கதிபனு னவனும்
கமலநான் முகனும் முனிவருங் கண்டு
கனகநாண் மலர்கொடு பணிந்தார் :
" சமரமா முனையிற் றனஞ்சயன் கணையாற்
சாய்ந்துயிர் வீடவுஞ் செங்கண்
அமலநா ரணனைக் காணவும் பெற்றேன் "
என்றுதன் னகமிக மகிழ்ந்தான்.

வேறு

கண்ணன் கூறுதல்

10. " தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ டமர்மலைந்து தறுக ணுண்மைக்
செருவிலென துயரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர் கோனுக்(கு)
உரைபெறுநற் கவசமுங்குண் டலமும் ஈந்தேன்
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் தவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே,
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே."

குறிப்புரை

1. அத்தவெற்பு - அஸ்தமனகிரி (இருபெயரொட்டு). விற்கிடை - வில் கிடக்குந்தூரம். முத்தர் - முத்தியடைந்தோர். வெயிலவன் புதல்வன் - கன்னன்.

2. தாண்டிய - மோதுகிற. ஈண்டிய - மிகுந்த. இயைந்தது - கொடுக்கக்கூடியது. தளர்ந்தவர் - வினையாலணையும் பெயர். தூண்டிய - (அருணனுற்) செலுத்தப்படுகிற. கவனம் - கதி. துரகதம்-குதிரை. சுடர் - சூரியன்.

3. விசயம் வெம் கணை - விசேஷ வெற்றியைத் தருகிற கொடிய அம்புகள். விழுவோன் - விழும் நிலையிலுள்ள கன்னன். ஒன்றிய படி - உள்ளபடியே.

4. நிலையின் - நிற்குமிடத்தினின்றும். யாக்கை - உடம்பு. வேண்டும் பொருள் - (வேண்டுவோர்) வேண்டும் பொருள். ஒவு இலாது - ஒழிதல் இல்லையாம்படி. அயன் - பிரமன். இதனினும் -(தானம் செய்து உன்னைக் கைக்கொள்கின்ற) இத் தொழிலைக் காட்டிலும்.

5. இறைஞ்ச - வணங்க. எழிலி ஏறு அனையான் - மேகத்தில்

தோன்றும் பேரிடியை ஒப்பவனுகிய கண்ணன். புனல் - நீர். அம்பு -(நீர்) இரத்தம். முன்னம் - முன்பு வாமனுவதாரத்தில். அங்கை - அகம்+கை - உள்ளங்கை.

6. மல்லல் - வளப்பம். தொடையல் - மாலே. சூரன் மதலே - சூரிய குமாரனுகிய கர்ணன். சொல்வான் - சொல்பவனுய். உற்பவம் - பிறப்பு.

7. மைத்துனன் - தன் அத்தை மகனுகிய கர்ணன். கண்மலர்: முன் பின்னுகத் தொக்க உவமைத் தொகை.

8. புணரி - கடல் நீர். மாற்றிய - (ஒப்பாகாதென்று) நீக்கிய. பஞ்சாயுதம் - ஐம்படை: சங்கு, சக்கரம், கதை, வாள், வில் என்பன. உறழ் - ஒத்த. கரா - முதலே. குஞ்சரராசன் - கஜேந்திரன். பைந்துளவோன் - பசிய துளவ மாலேயை அணிந்த கண்ணன்.

9. அமர யோனிகள் - தேவசாதியிலுள்ளவர்கள். நாள் மலர் - அன்று அலர்ந்த கற்பகமலர். சமரம் முனே - போர்க்களம். அமலன் நாரணனே - குற்றமற்ற மகாவிஷ்ணுவை.

10. தறுகண் - அஞ்சாமை. செம்சோறு கடன் - செவ்வையாகப் போட்டு வந்த சோற்றுக்குப் பிரதியுபகாரம். மருதிடை - இரட்டை மருத மரங்களினிடையிலே.

பயிற்சி

1. பொருள் கூறுக :—ஆதவன், தரங்கம், கவனம், இறைஞ்சலர், அம்பின் வாயம்பு, உற்பவம், புணரி, தறுகண்.

2. பிரித்துக் காட்டுக :—விற்கிடை, வெங்கணே, அங்கை, செங்கை, பைந்துளவோன்.

3. இப்பகுதியிலிருந்து உரிச்சொல், உவமைத் தொகை, இரு பெயரொட்டு, வினையாலணேயும் பெயர்—இவைகட்கு உதாரணங்கள் தருக.

4. கர்ணன், சூரியன், மகாவிஷ்ணு இவர்களேக் குறிக்க இப்பகுதியில் வந்துள்ள வேறு பெயர்கள் யாவை ?

வினுக்கள்

1. வேதிய உருவங்கொண்ட கண்ணன் கர்ணனே எவ்வாறு விளித்தனன் ? என்ன கூறினன் ?

2. வேதியன் கன்னனே யாசித்தது என்ன ?

3. வேதியனது வேண்டுகோளேக் கேட்ட கர்ணன் என்ன கூறினன் ?

4. "கைப்புனலுடன் தருக" என யார் கூறினர் ? அதைக் கேட்ட கன்னன் என்ன செய்தான் ?

5. கன்னன் கேட்ட வரம் யாது ?

6. கண்ணன் கன்னனுக்கு என்ன வரம் அளித்தான் ?

7. கண்ணன் எவ்வாறு கன்னனுக்குக் காட்சியளித்தான் ?

8. கர்ணன் எக்காரணங்களுக்காக மகிழ்ந்தான் ?

9. தம் சுய உருவைக் காட்டியருளிய கண்ணனிடம் கன்னன் யாது கூறினன் ?

கட்டுரையாக்கம்

'கன்னன் கொடைத்திறம்' என்பதுபற்றி ஒன்றரைப் பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.

3. பாகவத புராணம்

பழைய வரலாறுகளை உலகத்தின் தோற்றம் முதலிய பல செய்திகளுடன் விவரித்துக் கூறும் நூல் 'புராணம்' எனப்படும். இவ்வகைப் புராணங்களுள் பழமையானவை பதினெட்டு. அவற்றுள் பாகவத புராணம் ஒன்று. 'ஸ்ரீமத்' என்பது 'பொலிவையுடையது' எனப்பொருள்படும் அடைமொழி. பாகவதம் என்னும் பெயர் பகவானைக் குறித்துச் சொல்வது என்ற பொருளது. இதனை வடமொழியில் இயற்றியவர் வியாச முனிவர். இதனைச் சொல்லியருளியவர் சுகமுனிவர். கேட்டவர் பரீட்சித்து மன்னர். இந்தத் தமிழ்ப் பாகவத புராணம் அந்த வடமொழி நூலின் வழிநூலாகச் செய்யப்பட்டது.

பாகவதத்தைத் தமிழில் ஆக்கியவர் செவ்வைச் சூடுவார் என்பவர். இவர் பிறந்து வாழ்ந்த இடம், வேம்பத்தூர். இது பாண்டிய நாட்டிலுள்ளது. செவ்வைச் சூடுவார் என்பது செவ்வையாகச் சூடும் பாமாலையையுடையவர் என்ற காரணம் பற்றி இவர் பெற்ற சிறப்புப் பெயர். இவரது இயற்பெயர் மாதவபண்டிதர் என்பது. இவர் அந்தண குலத்தினர். காலம்: முந்நூறு வருடங்கட்கு முன்.

துருவன் பதம்பெற்ற அத்தியாயம்

உத்தானபாதன் அரசியற்றுதல்

முத்தார மார்பன் முடிமன் னவர்வந் திறைஞ்சப்
பைத்தா டரவஞ் சுமைகூர் கடற்பார் பரித்தான்
கொத்தா ரலங்கற் குளிர் வெண்குடைக் கோதை வெள்வேல்
உத்தான பாதனென வோது முலங்கொள் தோளான். (1)

உத்தானபாதன் சுநீதி, சுருசி என்பவரை
மணஞ் செய்து கொள்ளுதல்

வெடிக்கும் புதுநாள் மலர்வேய்ந்(து) அகில்விம்மி வேலை
குடிக்குங் கமஞ்சூற் குலமாமுகில் வென்ற கூந்தல்
தொடிக்கைச் சுநீதி சுடற்பொற் குழைமேல டர்க்கும்
வடிக்கண் சுருதி யெனுமங்கை யர்தோள் மணந்தான். (2)

சுநீதி வயிற்றில் துருவனும், சுருசி வயிற்றில் உத்தமனுந் தோன்றுதல்

வரையுற்ற சாயன் மயிலன்ன சுநீதி யென்னும்
தெரிவைக் குதித்தான் துருவன் : செருவென்ற செவ்வேல்
அரசர் கமுதாய் அலர்தாமரை யன்ன மொத்த
சுருதிக்கு மன்றல் தொடையுத் தமன்தோன்றி ஞனல். (3)

தனது தொடைமீது உத்தமன் ஏறியிருக்க, அரசன் சிங்காதனத்தில் வீற்றிருத்தல்

மத்தமாக் களிற்று மன்னன் மாமணித் தவிசின் மீது
கத்திகைக் கருமென் கூந்தல் கன்னியர் கவரி வீசத்
தித்தியா நின்ற தெய்வத் தெள்ளமு தனைய தீஞ்சொல்
உத்தமன் குறங்கின் வைக உவந்துவீற் றிருந்தா னன்றே. (4)

துருவன் உத்தமனைப் போலவே தானும் அரசன் மடிமீது ஏற எண்ணிச் சேர, சுருசி தடுத்துக் கூறுதல்

வண்டுளர் தெரியல் வேந்தன் மாமணிக் குறங்கின் ஏறி
ஒண்டொடி யுடுத்த செங்கை யுத்தம னுறைந்த செவ்வி
கண்டனன்; துருவன் தானும் ஏறுவான் கருதி நண்ணத்
தொண்டையங் கனிவாய் வேற்கண் சுருதியாங் கியம்பு வாளால் : (5)

சுருசி துருவனை நோக்கிக் கூறுவன

'கோற்றொடிப் புதல்வ ! நீயெங்
கோவிளங் குமர னென்று
மாற்றவள் வயிற்றின் வந்தாய் ;
வரத்தினென் வயிற்றின் வந்து
தோற்றுதல் புரிநோன் பில்லாய் ;
சொரிமதக் களிறு சாய்க்கும்
ஏற்றிளஞ் சிங்க மன்னன்
குறங்கினென் ஏறு மாறே. (6)

" காதல ! வுலக மெல்லாங் கவிக்கும்
வெண் கவிகைச் செங்கோற்
கோதைவேற் றடக்கை வேந்தன்
குறங்கின்நீ யேற வேண்டில்

தாதலர் கமலச் செல்வி
தலைவனை நோக்கி நின்று
மாதவம் புரிந்து வந்தென்
வயிற்றிடைப் பிறத்தி'' என்றாள். (7)

அது கேட்ட துருவன் தந்தையின் முகத்தை நோக்குதல்

இழைபுரை மருங்குல் தேய்க்கும்
இருங்குழல் மடந்தை மாற்றம்
அழல்விட முகுத்தா லென்ன
அஞ்செவி நுழைதலோடும்
விழிமலர் சிவப்ப, நெஞ்சின்
வெகுளிவந் தரும்ப, மைந்தன்
மழைமதக் களிற்று மன்னன்
வாண்முகம் நோக்க லுற்றான். (8)

துருவன் தன் தாயிடம் செல்லல்

செஞ்சிலைத் தடக்கை வேந்தன்
திருமுகத் தருளுங் காணான்
அஞ்செவி வெதும்ப நங்கை
யறைந்தசொற் காற்ற ளுகிக்
கஞ்சநாண் மலரை வெல்
செங் கண்ணிணை மாரிகால
மஞ்சனுங் கன்னை பாற்போய்
மணியிதழ் துடிப்ப நின்றான். (9)

சுநீதி துருவனது துயர்க்காரணத்தை வினவுதல்

தன்னிளங் குழவி செங்கெண்
தாமரை தழைத்த முத்தம்
பொன்னணிந் திலங்கு மார்பிற்
பொழிதர நிற்றல் நோக்கி
"என்னுயிர் என்கண் ஏந்தால் !
என்னை நீ யழுங்கல்'' என்னு
மின்னுயிர்த் தொளிரும் பைம்பூண்
மெல்லியல் வினவி னாளால். (10)

துருவனது துயர்க் காரணத்தை யறிந்து சுநீதி வருந்துதல்

பட்டமை கண்டோர் கூறப்
பசுஞ்சிறைக் கிள்ளை யன்னாள்
விட்டெரி கின்ற காட்டு
வெங்கனல் படர்ந்து முற்றிச்
சுட்டவெப் புண்ட பொன்னந்
துணர்க்கொடி போலவாடி,
நெட்டுயிர்ப் பெறிந்து செங்கண்
நித்திலஞ் சிந்தி நின்றாள். (11)

"திருமால் அருளால் நற்பதவி பெறுவாய்" என்று கூறி சுநீதி துருவனைத் தேற்றுதல்

"குதலைதெள் ளமுதில் தேனில்
கொண்டமென் பவளச் செவ்வாய்
மதலை! நல் வினையி லேன்புல்
வயிற்றகம் பொருந்தி வந்தாய்;
விதலையுற் றிரங்கல் வேண்டா
விளைந்ததண் ணளியிற் காக்கும்
முதலைவாய் உம்பல் காத்த
முழுமுதற் கடவுள் மாதோ. (12)

ஐதெழி லமுதின் சாயல்
ஆயிழை யுரைத்த வாறே
மைதப மனத்தி னேர்ந்து
வழுத்தினர் விழைந்த நல்கும்
நெய்தவழ் நேமி யானை
நினைத்தனை தவம்நின் றாற்றி
எய்தரும் பதமே மைந்த!
எய்துதி கலங்கல்' என்றாள். (13)

சுநீதி பின்னும் கூறுதல்

"பனிமல ரண்ண லோங்கு
பதத்தினை யடைந்த வாறும்,
மனுமிகச் சிறந்த வாறும்
மாயனைக் கருதி யன்றே?

தனய ! நீ கங்கை பூத்த
தாமரைத் தாளி ணூனே
நினையினென் எய்தா து''என்று
நெஞ்சகந் தெருட்டி னூளால். (14)

துருவன் மனந்தேறி, தவஞ்செய்யச் செல்லுதல்

கிளிக்குலங் கடந்து தேனிற்
கிளைத்ததீங் குதலை யன்னை
தெளிக்கவம் மைந்தன் நெஞ்சு
தெள்ளிதின் தெளிந்தா னூகி
நளிச்சினைக் குரவங் கோங்கு
நாகமு மகரு மோங்கிக்
கனிச்சுரும் பிமிர்பூங் கானங்
கலந்தனன் தவஞ்செய் கிற்பான். (15)

துருவன் தவஞ்செய்யத் தொடங்குதல்

விண்ணுலாம் பரிதி யீன்ற விரிதிரை நதிநீ ராடி
மண்ணெலா மளந்த பொற்று மரைமல ரன்ன பொற்றூள்
கண்ணனைக் கண்ணுள் வைத்துக் களியளி சிலம்ப விள்ளும்
தண்ணனைக் கழம்பூங் காவில் தவஞ்செயத் தொடங்கினூனால்.(16)

துருவன் தவநிலை

ஒருமதி யிரண்டு வைக லொழிந்துதீங் கனிநு கர்ந்தான்
ஒருமதியாறு வைகல் ஒழிந்துவீழ் சருகு தின்றூன்
ஒருமதி வைக லொன்பான் ஒழிந்துதண் துறைநீ ருண்டான்
ஒருமதி வைக லீரா றெழிந்துகால் பருகி னூனால். (17)
திங்கள்நான் கிவ்வா றேகத் திங்களிற் றிகழா நின்ற
அங்கலுழ் முகத்தா னென்றும் அருந்தலன் ஐந்தாந் திங்கள்
பொங்குமூச் சடக்கி மென்பூப் பொருவுதாள் விரலொன் றூன்றிக்
கங்கைசூழ் கழற்பெம்மானைக் கருதினன் தவம்பு ரிந்தான். (18)

திருமாலினைத் தியானித்தலால் துருவனுக்கு
உண்டான மகிமை

திருவயிற் றுலகெ லாமாழ் செல்வனெஞ் சுறலான் மைந்தன்
ஒருவிர லூன்றி நின்று னயினும் உரவுத் தெண்ணீர்
இருநிலம் பொறுக்க லாற்று தெறிகதிர் முத்தஞ் சிந்து
பொருதிரைப் புனலிற் பட்ட புணையென அலைந்தன் றம்மா! (19)

துருவனது தவக்கனலின் சிறப்பு

ஊழிவெம் பரிதி யுட்க ஒளிசெய்செங் கதிரா லொற்றை
ஆழியந் தடக்கை யம்மான் அகமிசை யமர்ந்த வாற்றால்
தாழிருந் தடக்கை நம்பி தவக்கனல் தவாது பொங்கி
ஏழிரும் பரவை வேலி இருநிலங் கனன்ற தாமால். (20)

துருவனது தவக்கனலைப் பொறுக்கமாட்டாது தேவர்கள் திருமாலைச் சரணமடைதல்

ஆவயிற் றுருவன் மூச்ச டக்கிய திறத்தி னுலெத்
தேவரும் உயிர்க்க லாற்றுர் தெருமந்தார் தெருண்டு மொய்த்துக்
"காவல! காத்தி" என்று கண்ணனை யடைந்து கூறப்
பூவுரை விரிஞ்சன் தன்னைப் பூத்தவன் புகல லுற்றுன்: (21)

திருமால் தேவர்களைத் தேற்றி, துருவன் தவஞ் செயுமிடத்திற்குச் செல்லுதல்

"விட்டிலன் துருவன் மூச்சு விழுத்தவம் புரித லானே
முட்டிய துமக்கு மாங்கே மூச்சுநாங் காத்தும்" என்னு
மட்டறு வேத மேனி வரிச்சிறைப் புள்ளின் மேற்றிக்
கெட்டுநல் லுருவக் காந்தி யெறிதர வேகி னுனல். (22)

திருமால் துருவனுக்குக் காட்சி தருதல்

நெடியவன் முன்னம் வந்து நிற்பது நிகழ்த்தலாக
ஓடிவரு தவத்தின் மைந்தன் காண்கல னுகவுள்ளம்
சுடர்தன துருவுத் தண்ணந் துளவினுன் கரத்த லோடும்
கடிகமழ் கமல மன்ன கண்மலர் விழித்தான் மன்னே. (23)

மண்டல நிறைந்த திங்கள் வதனமும், கமலக் கண்ணும்,
குண்டலஞ் சுடருங் காதும் குறுநகைப் பவள வாயும்
தண்டுழாய் அலங்கல் மார்பும் தடக்கையொர் நான்குமாகக்
கண்டனன் மறையுங் காணுக் கரியவன் உருவம் அம்மா! (24)

திருமாலைத் தரிசித்த துருவனது பெருமகிழ்ச்சி

பருகுவான் போல நோக்கும்
பங்கயக் கண்ணெம் மானை
இருகையாற் புல்லு வான்போல்
எய்திடும் இறைஞ்சா நிற்கும்,

உருகுநெஞ் சுவக்குங் கண்ணீ ருகுக்கும் ;
உள் அழுங்கும் ; துள்ளும்
முருகனு னுவகை வேலை
மூழ்கினன் துளைவான் மன்னே. (25)

துருவன் துதி செய்தல்

" மூவா முதலே! முத்தொழிலு
மூவ ராகி இனிதியற்றும்
தேவா ! தேவர் சிகாமணியே !
சிந்தா மணியே ! தெள்ளமுதே !
நாவால் நின்சீர் எங்ஙனம்யா
னவில்கோ " வென்ன நகைமுகிழ்த்துப்
பூவாற் பொழில்பூத் தருளுந்திப்
பூவை வண்ணன் புகலு கிற்பான்: (26)

திருமால் துருவனுக்கு வரம் தருதல்

" மின்னுஞ் சுடர்கான் றழல்குடுமி
வெள்வே லரச குமர ! வுணர்ந்(து)
இன்னும் பொலந்தார் முடியமரர்
எய்தற் கேக்கற் றிருப்பதுயர்
பொன்னங் கிரியி னுச்சிமிசைப்
பொலிவ துலகின் மேலதென்றும்
மன்னப் படுவ தொருபதம்யாம்
தருதும் வாழி மற்றுனக்கே. (27)

கரடம் கவிழ்க்கும் கலுழிமதக்
கடவுட் களிறு மொளிருகதிர்
சொரியு மருமா மணிச்சூட்டுத்
துத்தி யரவும் சுமந்தநிலம்
இருபத் தாறு யிரம்மருவ
எழில்வெண் கவிகை தனிநிழற்றித்
துருவப்பதம் நீ யடைதி "எனத்
தொன்மை முதல்வன் அகன்றனல். (28)

திருமாலிடத்து முத்தியை வேண்டாத குறையொடு துருவன் தன் நகர் சார்தல்

“ நஞ்சு சூழும் யெழுவேற்க ணங்கை
யுரைத்த உரைகிடந்து
நெஞ்சு சுட, நீள்பதம் வேட்டுநின்றேன் ;
நெகிழ்ந்த தாமரைக்கண்
மஞ்சைக் கண்டுங் கேட்டிலாமல்
முத்தி” என்று மகிழ் கூரான்
துஞ்ச லில்லாச் சுடர்மணிப்பூண்
தொடிக்கைத் துருவன் நகர்சார்ந்தான். (29)

குறிப்புரை

1. மார்பன் - சினையடியாகப் பிறந்த பெயர். பைத்து - படத்தை யுடையது. ஆடு அரவம் - வினைத்தொகை. சுமை - தொழிற்பெயர். அலங்கல் - மாலை : தொங்கியசைவது : காரணப் பெயர்.

2. நாள் மலர் - அன்றலர்ந்த மலர். விம்மி - நிரம்ப ஊட்டப்பெற்று. வேலை குடிக்கும் கமம் சூல் குலம் மாமுகின் - கடலின் நீரைக்குடித்த நிறைந்த கருப்பத்தையுடைய கூட்டமான பெரிய காளமேகம். தொடி - கைவளை. அடர்க்கும் - மோதுகின்ற. வடிகண் - மாவடுவின் பிளவைப் போன்ற கண். கமம் - நிறைவுப் பொருளை உணர்த்தும் உரிச்சொல்.

3. தெரிவை - பெண். அமுது ஆய் - அமுதம்போல இனியவளாகிய. மன்றல் - மணம். தொடை - மலர்மாலை. சுநீதியைக் காட்டிலும் சுருசியி னிடத்தில் உத்தானபாதன் அன்பு வைத்திருந்தான் என்பதை ‘அரசற் கமுதாய்’ என்பதனுல் விளக்கினுர். சாயல் - மென்மைப் பொருள் தரும் உரிச்சொல்.

4. மத்தம் - மதம். களிறு - ஆண் யானை. கத்திகை - ஒருவகை மலர் மாலை. தித்தியாநின்ற - தித்திக்கின்ற. தெள் தெய்வம் அமுது - தெளிந்த தேவாமிர்தம். தீம்சொல் - இனிய குதலைச் சொற்கள். குறங்கு - தொடை.

5. உளர் - ஒலிக்கப்பெற்ற. செவ்வி - அழகு. நண்ண - அருகிற் சேர. அம் தொண்டை கனிவாய் - அழகிய தொண்டைக் கனிபோன்ற சிவந்த வாய். வேல்கண் - வேற்படை போன்ற கண் : உவமைத்தொகை. ஏறுவான் - எதிர்கால வினையெச்சம்.

6. கோல்தொடி - அழகிய வளையல். மாற்றவன் - சக்களத்தி. நோன்பு - நல்வினை. மதம் சொரி களிறு சாய்க்கும் இளசிங்கம் ஏறு அன்னுன் - மதம் சொரிகின்ற ஆண்யானைகளை அழிக்கவல்ல இளைய ஆண்சிங்கம் போன்ற அரசனது. புரிநோன்பு, சொரிமதம் - வினைத் தொகைகள்.

7. வெண் கவிகை - வெண்கொற்றக் குடை. தட - பெருமை உணர்த்தும் உரிச்சொல். "தடவும் கயவும் நளியும் பெருமை" என்பது தொல்காப்பியம்.

8. இழைபுரை - நூலிழையை யொத்த. மருங்குல் - இடை. அகம்+செவி=அஞ்செவி - காதினுள்ளே. வெகுளி - கோபம். வாள் முகம் - ஒளி பொருந்திய முகம். புரை - உவம உருபு. அழல் விடம் - உவமைத் தொகை. வாள் - ஒளி என்னும் பொருள் தரும் உரிச்சொல்.

9. மஞ்சள் - சிறுவனாகிய துருவன். நங்கை - பெண்: சுருசி. நாள் கஞ்சம் - அன்று மலர்ந்த தாமரை. கால - பொழிய. மணி இதழ் - அழகிய உதடுகள்: காணுன் : முற்றெச்சம்.

10. தழைத்த - சொரிந்த. முத்தம் - முத்துப்போன்ற கண்ணீர்த் துளிகள். ஏந்தால் - சிறந்தோனே : 'ஏந்தல்' என்னும் ஆண்பாற் சிறப்புப் பெயர் ஈறு திரிந்து விளியாயிற்று. நீ அழுங்கல் என்னே - நீ வருந்துவது எக்காரணத்தால்? அழுங்கல் அழுங்கு—பகுதி.

11. பட்டமை - நிகழ்ந்ததை : தொழிற்பெயர். பசுமை சிறை கிள்ளை - பசுமையான இறகுகளையுடைய கிளி. பொன் அம் துணர் கொடி - மிக அழகிய பூங்கொத்துக்களையுடைய கொடி. நெடு உயிர்ப்பு - பெருமூச்சு. கண்டோர் - வினையாலணையும் பெயர். வெப்பு - 'பு' விகுதி : தொழிற் பெயர்.

12. விதலை உற்று - நடுக்கம் கொண்டு. உம்பல் - யானை : கஜேந்திரன். தண் அளி - இனிய அருள். மதலை - அண்மை விளி.

13. ஐது எழில் - வியக்கத்தக்க அழகு. மைதப - குற்றம் நீங்க. வழுத்தினர் - (தன்னைத்) துதித்தவர். விழைந்த - விரும்பியவற்றை. எய்துதி - முன்னிலை ஒருமை முற்று.

14. பனிமலர் அண்ணல் - குளிர்ந்த தாமரை மலரில் வாழுகின்ற பிரமதேவன். தெருட்டினுள் - தெளியச் செய்தாள் : தெருட்டு - பகுதி. மாயமாவது, கூடாததையும் கூட்டுவிக்குந் திறம்.

15. கிளி குலம் கடந்து - கொஞ்சிப் பேசுந் தன்மையுள்ள (கிளிக் கூட்டத்தைத் தனது இனிமையால்) வென்று. நளி சினை - பெரிய கிளை. குரவு - குராமரம். நாகம் - சுரபுன்னை. அகர் - அகில். இமிர் - ரீங்காரம் செய்கின்ற.

16. பரிதி - சூரியன். விரிதிரை நதி - பரந்த அலைகளையுடைய யமுனை நதி. அளி - வண்டு. சிலம்ப - ஒலிக்க. விள்ளும் - மலர்கின்ற. நனை - பூ அரும்புகள். ஈன்ற : 'ஈன்' பகுதி. விரிதிரை - வினைத்தொகை.

17. ஒரு மதி - முதல் மாதம். இரண்டு வைகல் ஒழிந்து - இரண்டிரண்டு நாள் இடைவிட்டு (மூன்று நாளைக்கொருமுறை). ஒரு மதி - அடுத்த மாதத்தில். ஆறு வைகல் ஒழிந்து - இடையே ஆறு நாட்கள் விட்டு (ஏழு நாளுக்கு ஒரு தரம்).

18. திங்களில் திகழா நின்ற அம் கலுழ் முகத்தான் - பூரண சந்திரன்

போல விளங்குகின்ற அழகு ததும்புகின்ற முகத்தையுடைய துருவன். கங்கை சூழ் கழல் பெம்மான் - கங்கை பிறத்தற் கிடமாகி (வீரக்கழல்) சூழ்ந்த திருவடிகளையுடைய திருமால். அருந்தலன் - எதிர்மறை முற்றெச்சம்.

19. நெஞ்சு உறலால் - மனத்தில் தங்குவதனால். உரவு தெள்நீர் இரு நிலம் - வலிய தெளிந்த நீரையுடைய கடல் சூழ்ந்த இந்தப் பெரிய நில வுலகம். புணை - தெப்பம்.

20. அகம் மிசை - மனத்தில். உட்க - அஞ்சும்படி. ஊழி - யுகத்தின் முடிவுக்காலம். தவாது - குறையாமல். பரவை-கடல். கனன்றது - எரித்தது. வேலி - சுற்றெல்லை.

21. உயிர்க்கல் ஆற்றார் - மூச்சுவிட மாட்டாதவராய். தெருமந்தார் - (முதலில்) மனம் கலங்கி. தெருண்டு - (ஒருவாறு) தேறி. விரிஞ்சன் - பிரம்மா.

22. முட்டியது - தடைப்படலாயிற்று. மட்டு அறுவேதம் - அளவில்லாத வேதம். காத்தும் - தன்மைப்பன்மை எதிர்காலமுற்று: 'தும்' விகுதியே காலங்காட்டும்.

23. ஒடிவு அறு - இடைவிடாத. கரத்தலோடும் - மறைத்த அளவிலே. கடி - உரிச்சொல்.

24. குறுநகை - புன்சிரிப்பு. குண்டலம் - காதணி. அம்மா - வியப்பிடைச் சொல்.

25. முருகு அனன் - குமாரக் கடவுளை யொத்த துருவன். உவகை வேலை - களிப்புக் கடல்.

26. மூவா - மூப்படையாத. சிந்தாமணியே - (நினைத்தவர் நினைத்ததை யெல்லாம் கொடுக்கவல்ல) சிந்தாமணி யென்னும் தேவமணியைப் போன்றவனே. பூவை வண்ணனன் - காயம்பூப் போன்ற திருமேனி நிறத்தையுடைய திருமால்.

27. குடுமி - நுனி. பொலம் தார் - பொன்மயமான மாலை. ஏக்கற்று இருப்பது - ஏக்கங்கொண்டிருப்பது. மன்னப்படுவது - அழியாமல் நிலை நிற்பது. தருதும் - கொடுப்போம். கான்று - இறந்தகால வினையெச்சம்: கால் - பகுதி. அழல் குடுமி - வினைத்தொகை.

28. கரடம் கவிழ்க்கும்-கன்னத்திலிருந்து கீழ்நோக்கிப் பெருகுகின்ற. கடவுள் களிறு - திக்கு யானைகள். துத்தி - (பாம்பின்) படப்புள்ளி. அரவு - ஆதிசேடன். பருவம் - வருஷம்.

28. துஞ்சல் இல்லா - ஒளி மங்குதலில்லாத. நீள்பதம் - உயர்ந்த பதவி. மஞ்சு - உவமையாகுபெயர். மகிழ் - முதல் நிலைத் தொழிற்பெயர்.

பயிற்சி

1. பொருள் கூறுக :—அலங்கல், தெரிவை, கத்திகை, குறங்கு, கஞ்சம், கிள்ளை, விடுதலை, உம்பல், மகர், நனை, புணை, பரவை, விரிஞ்சன், கரடம், துத்தி.

2. பகுதி கூறுக :—வெகுளி, அழுங்கல், தெருட்டினுன், ஈன்ற, மூவா, கான்று, தெருண்டு.

3. பிரித்து எழுதுக :—பைத்தாடரவம், ஒண்டொடி, வேற்கண், கோற்ருெடி, வேற்றடக்கை, அஞ்செவி, வாண்முகம், மெல்லியல், வயிற்றகம், வேற்கணங்கை.

4. தீஞ்சொல், வேற்கண், சொரிமதம், வெண்கவிகை, பிரிதிரை, குறுநகை—இவை என்ன தொடர் ?

5. இப் பகுதியில் துருவன், உத்தானபாதன், சுருசி, சுநீதி, திருமால், பிரம்மா இவர்களுக்கு வழங்கப்பெற்றுள்ள பெயர்களையும் தொடர்களையும் கூறுக.

6. முற்றெச்சம், தொழிற்பெயர், உரிச்சொல், உவமை உருபு, வினையெச்சம், வினையாலணையும் பெயர்—இவைகளுக்கு இப்பகுதியிலிருந்து ஒவ்வொருதாரணம் தருக.

7. யானைக்கு வழங்கும் பெயர்களாக நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.

8. குரங்கு, குறங்கு ; பரவை, - பறவை பொருள் வேறுபாடு யாது ?

9. கதைக் குறிப்பு வரைக :—முதலைவாய் உம்பல் காத்தது, மண்ணெலா மளந்தது.

வினுக்கள்

1. தமிழில் பாகவதம் இயற்றியவர் யார் ? அவர் வாழ்ந்த காலம் யாது ?

2. சுநீதி, சுருசி என்பவர்களை ஆசிரியர் எவ்வாறு சிறப்பிக்கின்ருர் ?

3. சுருசியிடம் உத்தானபாதன் மிக்க காதலுள்ளவன் என்பதை ஆசிரியர் குறிப்பாக உணர்த்தும் இடங்கள் எவை ?

4. அரசன் மடிமீது ஏறியுட்காரச் சென்ற துருவனை நோக்கிச் சுருசி கூறியது என்ன ?

5. மன்னன் துருவனைத் தடுத்தபோது அவன் அடைந்த மனநிலை யாது ?

6. சுநீதி துருவனை என்ன கூறித் தேற்றினுள் ?

7. துருவன் தவஞ்செய்த கானகம் எவ்வாறு வருணிக்கப் பட்டுள்ளது ?

8. துருவன் இயற்றிய தவத்தைப் பற்றிப் பத்து வரியில் எழுதுக.

9. துருவன் தவச்சிறப்பால் தேவர்கள் அடைந்த நிலை யாது ?

10. தம்மைச் சரணமடைந்த தேவர்களை நோக்கித் திருமால் கூறியது என்ன ?

11. துருவன் கண்ட திருமாலின் உருவத்தைக் கவி எவ்வாறு கூறுகிருர் ?

12. திருமாலைத் தரிசித்ததும் துருவன் அடைந்த இன்பநிலை எத்தகையது ?

13. திருமாலைத் துருவன் எவ்வாறு துதித்தான்?

14. திருமால் துருவனுக்கு வரமளித்துக் கூறியது யாது?

15. துருவன் மகிழ்ச்சியற்றவனாய் நகரம் சார்ந்ததன் காரண மென்ன?

16. (a) " விட்டெரிகின்ற காட்டு வெங்கனல் படர்ந்து முற்றிச் சுட்ட வெப்புண்ட பொன்னந் துணர்க்கொடி " (b) " பொருதிரைப் புனலிற் பட்ட புணை "—பொருள்கூறி உவமைகளை விளக்குக.

கட்டுரையாக்கம்

1. ' துருவன் தவநிலை ' என்பது பற்றிப் பதினைந்து வரியில் எழுதுக.

2. ' துருவன் கதையால் இளைஞர் அறிதற்குரியவை ' என்பதுபற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

IV. சிறுநூற் கோவை

தமிழில் 'பிரபந்தம்' என வழங்கும் சிறு நூல்கள் பல உண்டு. அவை கலம்பகம், மாலை, பிள்ளைத்தமிழ், தூது, பரணி முதலாகப் பலவகைப்படும். இவற்றுள் சொற் சுவை, பொருட்சுவை ததும்பும் பாடல்கள் பல உள. அவற்றுள், சில இன்சுவைப் பாடல்களைக் கோவைசெய்து இப்பகுதியில் தருகின்றோம்.

1. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

சேக்கிழாரைப் பற்றிய பிள்ளைத்தமிழ் என்பது இதன் பொருள். பிள்ளைத்தமிழ் என்பது தேவரையும் மக்களிலே சிறந்தவர்களையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவர் களது பிள்ளைப்பருவ நிகழ்ச்சிகளை வருணித்துப் பாடப்படும் ஒருவகைப் பிரபந்தம். இச் சிறுநூல் சேக்கிழார் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றது.

இந்நூலை இயற்றியவர் திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள். இவர் சமீபகாலத்தில் (1815–1876) விளங்கிய ஒரு பெரும் புலவர்; பல காவியங்களும் பிரபந்தங் களும் பாடியவர். மகாமகோபாத்யாய டாக்டர், உ. வே. சாமி நாத ஐயரவர்கள் பிள்ளையவர்களுடைய மாணாக்கருள் ஒருவர்.

பின்வருவது பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவங்களுள் ஒன்றாகிய செங்கீரைப் பருவத்தில் உள்ளது. செங்கீரைப் பருவ மாவது செவ்விய கீரை (சொற்களைப்) பேசும் பருவம். இது ஐந்தாம் மாதத்திற்குரியது. குழந்தை ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டி, இரு கைகளையும் நிலத்தில் ஊன்றிய வண்ணம் தலை நிமிர்ந்து முகமசைத்து ஆடுவது செங்கீரை யாட்டம் எனப்படும்.

ஒண்கொண்ட பொதுவகத் துலகெலாம் உய்யநா(று)
'உலகெலாம்' என்ற தீஞ்சொல்
உவந்தே டெழுத்தாணி கொண்டெழு திரண்டுகை
யும்புவி யுறப்பதித்து,

வண்கொண்ட ஒருதாள் மடித்தூன்றி யொருதாள்
வயங்குற எடுத்தூன்றி ஒண்
வாய்கவிச் சுவையொழுக் கறிவிப்ப தெனவமுத
மாட்சிமை ஒழுக்கெடுப்ப,
வெண்கொண்ட நெற்றிநீ றிளநிலவும் ஒண்கா
திருங்குழை இருங்கதிரும் விட்
டெரிப்பஇள முடுவலும் தோன்றமலர் திருமுகம்
எடுத்துவான் அளவுநொச்சித்
திண்கொண்ட குன்றையம் பதியருள் மொழித்தேவ!
செங்கீரை யாடியருளே!
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக!
செங்கீரை யாடுயருளே!

குறிப்புரை

பொதுவகம் - சிதம்பரத்திலுள்ள நடனசபை. உய்ய - பிழைக்கும்படி. 'உலகெலாம்' என்று சேக்கிழாருக்கு நடராசப் பெருமான் அசரீரியாக அடியெடுத்துக் கொடுத்தார் என்பது வரலாறு. அமுதம் - சொள்ளுநீர். நெற்றியிலணிந்துள்ள திருநீறும், காதில் உள்ள குழையும் முறையே நிலவையும் சூரிய கிரணத்தையும் எரித்தன என்பது. நொச்சி - மதிள். அருண்மொழித் தேவர் என்பது சேக்கிழார் இயற்பெயர். குன்றை அம்பதி- குன்றத்தூர்; சேக்கிழார் பிறப்பிடம். மலர்முகம் - வினைத்தொகை. தீஞ்சொல் - உரிச்சொற்றொடர். இளநிலவு - பண்புத்தொகை.

பயிற்சி

1. பொருள் கூறுக :—குழை, முறுவல், நொச்சி, நீறு, வயங்கு.
2. தீஞ்சொல், இளநிலவு, மலர்முகம்—இவை என்ன தொடர்?

வினாக்கள்

1. பிள்ளைத்தமிழ் என்ற நூலின் இலக்கணம் என்ன?
2. செங்கீரைப் பருவம் என்பதன் பொருளை விளக்குக.
3. இச்செய்யுளில் வந்துள்ள செய்தியை நும் சொந்த நடையில் தொகுத்தெழுதுக.

2. மதுரைக் கலம்பகம்

மதுரையைப் பற்றிய கலம்பகம் என்பது இதன் பொருள். கலம்பகம் என்பது தமிழில் வழங்கும் பிரபந்த வகையில் ஒன்று. பலவகைப் பாக்களும், துறைகளும் கலந்து பாடப்படு வதால் கலம்பகம் எனப் பெயராயிற்று.

இந்நூலை இயற்றியவர் குமரகுருபர சுவாமிகள். இவர்

திருநெல்வேலியைச் சார்ந்த ஸ்ரீவைகுண்டம் என்னும் நகரின் ஒரு பகுதியான கைலாசபுரத்தில் தோன்றியவர்; சைவ வேளாள மரபினர். இவர் இயற்றிய அரிய பிரபந்தங்கள் பல. விளங்கியிருந்த காலம் முந்நூறுண்டுகட்கு முன்.

சம்பிரதம் : இந்திரசாலம் முதலிய மாயவித்தை வல்லவர் தமது சிறப்பைத் தாமே எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது. மேல்நோக்கில் அருஞ்செயல்கள் செய்வேன் என்ற பொருளும், சற்று உற்று நோக்கின் இயல்பான பொருளும் இதில் அமைந்திருக்கும்.

மட்டறு கடற்புவி யனைத்துமொ ரிமைப்பினில்
மறைத்துடன் விடுத்திடுவன் மற்று
எட்டுவரை யைக்கடலை முட்டியு ளடக்கிடுவன்
இத்தனையும் வித்தை யலவால்;
துட்டமத னைப்பொடி படுத்திமது ரைக்குளுறை
சொக்கர்குண மெட்டி னெடுமச்
சிட்டர்கள் துதித்திடு மகத்துவ மனைத்துமொரு
செப்பினுள் அடக்கிடு வனே.

குறிப்புரை

மட்டு அறு - அளவில்லாத. எட்டு வரையை - அஷ்டகுல பருவ தங்களையும். முட்டி - கைப்பிடி (முஷ்டி) மதனை - மன்மதனை. சொக்கர் - சொக்கநாதர். சிட்டர்கள் - அடியார்கள். மகத்துவம் - மகிமை. செப்பு - சிமிழ்.

முதலடியில் கடல்சூழ்ந்த பூமியைக் கண்ணைமூடுங் காலத்து மறையச் செய்து, உடனே விழிக்குங் காலத்துத் தெரியச் செய்வேன் என்றும், இரண்டாம் அடியில் எள்ளையும் துவரையையும் கடலையையும் கைப்பிடியில் அடக்கி விடுவேன் என்றும், மூன்று நான்காம் அடிகளில் சொக்கருடைய அஷ்ட குணங்களோடும் கூடிய மகிமை முழுவதையும் பஞ்சாக்ஷரம் என்னும் ஒரு சொல்லில் அடக்கிவிடுவேன் என்றும் சாமானியப் பொருள் தோன்றுதல் காண்க.

பயிற்சி

1. இரு பொருள் கூறுக :—எட்டுவரை, கடலை, செப்பு.
2. கடற்புறவி, உறைசொக்கர்—இவை என்ன தொடர் ?

வினுக்கள்

1. நுமக்குத் தெரிந்த சில கலம்பங்களின் பெயர்களைக் கூறுக.
2. சம்பிரதம் என்ற உறுப்பின் இலக்கணம் என்ன ?
3. மாயவித்தைக்க ரன் தன் சிறப்பை எவ்வாறு கூறுகிருன் ?
4. இதில் தோன்றும் பொருள் நயம் யாது ?

3. தமிழ் விடுதூது

தமிழ் விடுதூது என்பது தமிழை (த்தூதாக) விடுத்த தூது என்று பொருள்படும். தூது என்பது பிரபந்த வகைகளுள் ஒன்று. ஒருவன் அல்லது ஒருத்தி தன் காதலைப் பாணன் முதலிய உயர்திணைப் பொருளோடேனும், கிள்ளை முதலிய அஃறிணைப் பொருளோடேனும் சொல்லித் தூது போய்வருமாறு கூறுவது, இதன் இலக்கணம். மதுரைச் சோம சுந்தரரிடத்துக் காதல்கொண்ட ஒரு தலைவி தமிழை அக்கடவுளிடத்துத் தூது விடுத்ததாக இது அமைந்துள்ளது. இது 268 கண்ணிகளால் ஆகியது.

இதனை இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இவர் தமிழ்மொழிப் பயிற்சி மிக்கவரென்பதும், சைவ மதாபிமானம் மிகுந்தவரென்பதும் விளங்குகின்றன.

1. மண்ணிற் புகழுறுவாய் வாழ்வதற்கும் வாழுநர்
விண்ணிற்போய்த் தேவுருவாய் மேவுதற்கும்—எண்ணி

2. கொண்டுபுகழ் கொண்டவர்க்கே கூடுமுனைக் கூடாத
தொண்டருக்குத் தென்பாலேதோன்றுமால்—தண்ட

3. ஈங்குனது சங்கத்தா லீச ருயர்ந்தாரோ [மிழே!
ஓங்குமவ ரானீ யுயர்ந்தாயோ !—பூங்கமல

4. வீடாளும் வாணியங்கை மேலே யிருந்தாயோ
ஏடாக வுன்மே லிருந்தாளோ—ஆடரவத்

5. தாழ்பாய லாளரை நீ தானே தொடர்ந்தாயோ
சூழ்பாயோ டுன்னைத் தொடர்ந்தாரோ-வாழ்வேயென்

6. றோதிமுனி கேட்க வுனைமுருகர் சொன்னாரோ
சோதி யவரை நீ சொற்றனையோ—பேதியா

7. நேசருனக் கேபொருளாய் நின்றாரோ நீண்மதுரை
வாசருக்கு நீபொருளாய் வந்தாயோ—பாசமுறும்

8. என்செய்தி நீகண் டிரங்குவது நீதியல்லால்
உன்செய்தி நானோ வுரைசெய்வேன்—இன்சொல்லால்

9. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தகவென்ற—சொற்குள்ளே

10. எல்லார்க்கும் புத்தி பியம்பிக் கரையேற்ற
வல்லா யுனக்குரைக்க வல்லேனே—சொல்லியவுன்
11. ஈரடிக்குள் ளேயுலக மெல்லமடங்கு மெனின்
நேரடிக்கு வேறே நிலனுண்டோ ?

குறிப்புரை

தண்டமிழே - விளி.

1, 2. வாழுநர் - (புகழுருவினராய்) வாழ்பவர். தேஉரு ஆய் மேவு தற்கும் - தேவருருவத்தைப் பெற்றிருப்பதற்கும். எண்ணி - ஆராய்ந்து. உனைக்கொண்டு - உன்னால். புகழ்கொண்டவருக்கே கூடும் - (தமிழ்ப் பாடல்களால் பாடப்பெற்ற) புகழுள்ளோர்க்கே முடியும். தென்பாலே தோன்றும் : தென்திசைப் பகுதியே (நரகமே) காணப்படும்.

3, 4. சங்கம்—(1) வித்துவான்களின் கூட்டம். 2. சேர்க்கை, பற்று. சிவபிரான் தமிழ் சங்கத்தில் ஒருவராக (இறையனாராக) இருந்ததா லுயர்ந் தாரா அல்லது தமிழிடத்தில் பற்று வைத்ததா லுயர்ந்தாரா ? வீடு ஆளும் - (தான் வாழும்) மனையாகக் கொண்டுள்ள. அம்கை மேலே இருந்தாயோ - அழகிய கையில் (ஏட்டுப் புத்தகமாய்) தங்கியிருந்தாயோ ? ஏடு ஆக - பனையோலை (தன் கையில்) இருக்க. ஆடு அரவம் - படமெடுத்தாடும் அநந்தன்.

5. தாழ் பாயல் ஆளரை - தங்கும் பாயாகக் கொண்டுள்ள திருமாலை. நீ தொடர்ந்தாயோ - நீ பின் சென்றாயோ ? சூழ்பாயோடு உன்னைத் தொடர்ந்தாரோ - (அல்லது திருமால்) படுக்கையோடு உன்னைத் தொடர்ந்து சென்றாரோ ? (கச்சிப் பதியில் வாழ்ந்த கணிகண்ணன் என்னும் திருமாலடியாரைப் பல்லவ அரசன் நாட்டை விட்டுச் செல்லுமாறு உத்தரவிட, அது கேட்ட திருமழிசைப்பிரான் பகவானை நோக்கிப் 'பைந் நாகப் பாய் சுருட்டிக் கொள்' என்று கூறலும், திருமால் அப்பதியை விட்டுச்சென்றாரென்பதும், பிழை பொறுக்குமாறு அரசன் அவரை வேண்டிக் கொண்டதும் "பைந்நாகப்பாய் படுத்துக் கொள்" என அவர் மாற்றிப்பாடத் திருமால் மீண்டும் கச்சிக்கு எழுந்தருளினர் என்பதும் இங்குக் குறிக்கப்பட்டுள்ளன.) வாழ்வே - வாழ்வைத் தரும் பொருளே. என்றோதி - என்று கொண்டாடிச் சொல்லி.

6. முனி - அகத்திய முனி. உனை முருகர் சொன்னாரோ - உன்னை முருகக் கடவுள் அம்முனிவருக்கு உபதேசித்தாரோ ? சொற்றனையோ - புகழ்ந்து பாடினாயோ ? பேதியா - மாறுபடாதே.

7. நேசர் - அன்புடைய சொக்கநாதர். பொருளாய் - அர்த்தமாய். வாசர் - வாசம் செய்யும் சொக்கர். பாசம்உறும் - (உன்னிடம்) பற்றுக் கொண்டுள்ள.

8. உன் செய்தி - உனக்குச் சொல்லவேண்டிய செய்தியை (நீ எனக்குச் செய்ய வேண்டிய காரியத்தை).

9, 10. ‘கற்க......தக.’—குறள். தக - ஏற்றபடி. சொல்லிய - யாவ ராலும் புகழ்ந்து சொல்லப்படுகின்ற.

11. ஈரடி - ஈரடியாலான குறள். நேரடி - நான்கடிப்பா. வள்ளுவர் ஈரடிக் குறளினுல் உலகத்தார் நினைப்பன எல்லாவற்றையும் அளந்து ஓர்ந்து கூறினர். அவர் போன்ருர் ஈரடிக்கு இருமடங்காகிய நான்கடிப் பாவினுல் கூறத் தொடங்கினுல், அளந்து ஓர்ந்து கூற வேறு உலகு இல்லையே என்பது கருத்து.

பயிற்சி

1. பொருள் கூறுக :—தென்பால், ஏடு, பாயல், ஈரடி, நேரடி.
2. பிரித்துக் காட்டுக :—தென்பால், சொற்றனை, தண்டமிழ், ஈரடி.
3. சிவபிரானைக் குறிப்பதற்கு இக்கண்ணிகளில் பயின்றுள்ள சொற் களையும், சொற்றொடர்களையும் கூறுக.

விஞக்கள்

1. ‘எண்ணியுனைக் கொண்டு பகழ் கொண்டவர்க்கு’ எவை கூடும்?
2. ‘உனைக் கூடாத தொண்டர்’ எனப்பட்டோர் யார்?
3. “ஈங்குனது......உயர்ந்தாயோ”—இதன் பொருளை விளக்குக.
4. “வாணியங்கை மேலே யிருந்தாயோ? ஏடாகவுன் மேலிருந் தாளோ?” இதன் நயத்தை விளக்குக.
5. ஐந்தாங் கண்ணியில் குறிக்கப்பட்டுள்ள வரலாறு யாது?
6. ‘முனிகேட்கவுனை முருகர் சொன்னரோ? சோதியவரை நீ சொற்றனையோ?” இதன் பொருளை விளக்குக.
7. ஏழாங் கண்ணியின் பொருள் நயத்தை விளக்கிக் கூறுக.
8. “ஈரடிக்குள்ளே......நிலனுண்டோ?” இக்கண்ணியின் கருத்தை விளக்குக.

கட்டுரையாக்கம்

ஆசிரியர் தமிழை முன்னிலைப்படுத்திப் புகழ்ந்து கூறுவனவற்றைத் தொகுத்து ஒரு பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.

4. கலிங்கத்துப் பரணி

கலிங்க நாட்டில் நடந்த செய்தியைக் கூறும் பரணியென் னும் நூல் கலிங்கத்துப் பரணி எனப்படும். பரணி என்பது ஒருவகைப் பிரபந்தம். பரணியென்ற சொல், யானைப்போர் வெற்றியினைக் குறிக்கும்; மேலும் பரணி நட்சத்திரத்திற்குரிய காளியை வழிபட்டுக் கூறும் ஒரு வகை நூலையும் குறிக்கு மென்பர். கருணுகரத் தொண்டைமான் என்னும் படைத்தலை வன் விசயதர சோழனிடம் விடைபெற்றுக் கலிங்க நாட்டிற்

சென்று யானைப் போர் வென்ற செய்தியை இந்த நூல் கூறுகிறது.

இந்நூலை இயற்றியவர் சயங்கொண்டார் என்னும் புலவர். இவர் பிறந்த ஊர் தீபங்குடி. இவரைப்பற்றிய வேறு விவரங்கள் தெரியவில்லை. இவர் சைவ சமயப் பற்றுடையவர். இவரைச் சைன ரென்றும் கூறுவர். இவர் காலம் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதி. 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என இவர் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளார்.

கலிங்கப்போரின் வரலாறு: கலிங்க நாட்டு அரசனை அனந்தபன்மன் தனக்குரிய திறைப்பொருளைச் செலுத்த வில்லையென அறிந்த விசயதர சோழன் தன் தானத்தலைவரைக் கலிங்கத்தின் மீது படையெடுக்குமாறு கட்டளையிட்டான். உடனே தலைமைச் சேனாதிபதியாகிய கருணாகரன், 'யான் ஏழு கலிங்கங்களையும் அழித்து வருவேன்' என்று கூறி மூன்று உப சேனாதிபதிகளுடனும், யானைச் சேனையுடனும் பிற சேனையுடனும் புறப்பட்டுச் சென்று கலிங்க நாட்டை முற்றுகையிட்டான். கலிங்கவரசனும் பெருஞ் சேனையுடன் வந்து எதிர்த்தான். கருணாகரன் இப் போரில் ஆயிரக்கணக்கான யானைகளை அழித்து, எழுவகைக் கலிங்க நாட்டரசரையும் வென்று திரும்பினன்.

போர்

1. எடுமெடு மெடுமென வெடுத்ததோ
   ரிகலொலி கடலொலி யிகக்கவே
   விடுவிடு விடுபரி கரிக்குழாம்
   விடும்விடு மெனுமொலி மிகைக்கவே

2. வெருவர வரிசிலை தெறித்த நாண்
   விசைபடு திசைமுகம் வெடிக்கவே
   செருவிடை யிளையவர் தெழித்ததோர்
   தெழியுல குகள்செவி டெடுக்கவே,

3. எறிகட லொடுகடல் கிடைத்தபோ
   லிருபடை களுமெதிர் கிடைக்கவே
   மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
   வருபரி யொடுபரி மலைக்கவே.

4. கனவரை யொடுவரை முனைத்தபோற்
கடகரி யொடுகரி முனைக்கவே
யினமுகி லொடுமுகி லெதிர்த்தபோ
லிரதமு மிரதமும் மெதிர்க்கவே,

5. பொருபுலி புலியொடு சிலைத்தபோற்
பொருபட ரொடுபடர் சிலைக்கவே
யரியினே டரியின மடர்ப்பபோ
லரசரு மரசரு மடர்க்கவே.

குறிப்புரை

1. எடும் - படை யெடுத்துச் செல்லுங்கள். இகல் ஒலி - மாறுபட்டுச் செய்யும் ஒலி. கடல் ஒலி இகக்க - கடலொலியினும் மேம்பட்டு ஒலிக்க. விடு விடு விடு - விரைந்து செல்லுகின்ற (விரைவுக் குறிப்பு). பரி, கரிக் குழாம் - குதிரைக் கூட்டம், யானைக் கூட்டம். விடும் - செலுத்துங்கள். மிகைக்க - மேம்பட (மிகைக்கப் போர் நடந்தது என்று வினை கொடுத்து முடிக்கவும். பிற விடங்களிலும் இவ்வாறே கொள்க.)

2. வெருவர - அஞ்சும்படி. தெறித்த நாண் - விரலினலெறியப்பட்ட நாணெலி. வெடிக்க - வெடிப்பது போல் ஒலிக்க. தெழி - அதட்டலொலி. வரிசிலை - வினைத்தொகை.

3. கிடைத்த போல் - எதிர்ப்பட்டதுபோல. எதிர் கிடைக்க. (பொறு மாறு) எதிராக நிற்க. மறி - மடங்குகின்ற.

4. கனம்வரை - பருத்தமலை., முனைத்தபோல் - மாறுபட்டுப்பொருததுபோல. கடம்கரி - மதயானை. இனமுகில் - திரளாகிய மேகங்கள்.

5. பொரு - போர் செய்கின்ற. ,சிலைத்தபோல் - ஒலி செய்துகொண்டு பொருததுபோல. படர் - வீரர். அரி - சிங்கம்.

பயிற்சி

1. பொருள் கூறுக :—இகல், கரி, வெருவர, கடம், அரி, படர்.

2. கரிக்குழாம், வரிசிலை, எறிகடல், கனவரை :—இவை என்ன தொடர் ?

வினக்கள்

1. எவ்வொலி கடலொலியினும் மேம்பட்டிருந்தது ?
2. "விடு விடு......மிகைக்க" :—இதன் பொருள் யாது ?
3. நாணெலியும், இளையோர் அதட்டலொலியும் எவ்வாறிருந்தன ?
4. படைகளெதிர்த்ததும், பரிகள் மலைந்ததும் எவற்றுடன் ஒப்பிடப் பட்டுள்ளன ?
5. படரொடு படரும், அரசருடன் அரசரும் எவ்வாறு எதிர்த்தனர் ?

கட்டுரையாக்கம்

இச்செய்யுட்களின் திரண்ட கருத்தைத் தெளிவாக வரைக.

V. பல்சுவைப் பகுதி

1. தனிப்பாடல் திரட்டு

கதையைத் தெரிவித்து வரும் தொடர்நிலைச் செய்யுளைப்போலல்லாமல், பல புலவர்களால் அவ்வப்போது பாடப்பட்ட பாடல்களையுடைய நூல் தனிப்பாடல் திரட்டு எனப்படும். பின்வரும் செய்யுளை இயற்றியவர் காளமேகப் புலவர். இவர் திருவரங்கத்தில் கோயில் பரிசாரகராயிருந்து, பின் மோகனாங்கி என்பவள் தூண்டுதலால், திருவானைக்காவில் சிவாலயப் பரிசாரகராகிக் கலைமகள் திருவருளால் ஆசுகவியானவர். இவர் பாடிய பாடல்கள் பல. இவர் காலம்: கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு.

பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை

ஆடிக் குடத்தடையும், ஆடும்போ தேயிரையும்,
மூடித் திறக்கில் முகங்காட்டும்—ஓடிமண்டை
பற்றில் பரபரெனும்: பாரில்பிண் ணாக்கு முண்டாம்;
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது.

2. பாரதியார் பாடல்

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார் எட்டையபுரத்தில் 1882-ஆம் ஆண்டில் பிறந்தவர்; ஆங்கிலம், தமிழ், ஹிந்தி முதலிய பல மொழி அறிந்தவர்; தமிழன்பு ததும்பப் பெற்றவர்; சுதந்திர வேட்கையும், சமத்துவ உணர்ச்சியும், தேசப்பற்றும் கொண்டவர்.

நாட்டு வணக்கம்

(ராகம்—காம்போதி. தாளம்—ஆதி)

1. எந்தையும் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்

சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்திலிருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ—இதை

பல்லவி

வந்தேமாதரம், வந்தேமாதரம்
என்று வணங்கேனோ—இதை

2. இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த்தரு
ளீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்தது மிந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடியில்
போந்ததுமிந் நாடே—இதை

பல்லவி

வந்தேமாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

3. மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்தது மிந்நாடே—அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே—இதை

(பல்லவி)

வந்தேமாதரம், வந்தேமாதரம்
என்று வணங்கேனோ?

குறிப்புரை

1. ஒரு சொல் அல்லது சொற்றொடர் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் தருமாறு அமைப்பது, சிலேடை. இரையும் - பெருமூச்சுவிடும், ஒலி செய்யும். முகம் - பாம்பினுடைய தலை, பார்த்தவருடைய முகம். பிண்ணுக்கு - (பிள் + நாக்கு) பிளவுபட்ட நாக்கு, பிண்ணுக்கு என்னும் எள் சக்கை.

2. முந்தையர் - முன்னோர். வந்தனை - வணக்கம், வழிபாடு. வந்தே மாதரம் - தாய்நாட்டை வணங்குகின்றேன். மதலை - குழந்தை. பூம்துகள் - மென்மையான சாம்பல். ஆர்ந்தது - நிறைந்தது.

பயிற்சி

1. இருபொருள் கூறுக :—இரையும், பிண்ணுக்கு.

2. அடையும், இரையும், வணங்கேனே—இவை என்ன வினை முற்றுக்கள் ?

3. முகங்காட்டும், பொன்னுடல்—இவை என்ன தொடர் ?

வினாக்கள்

1. காளமேகப் புலவர் பாடல் பாம்புக்கும் எள்ளுக்கும் ஆகித்தரும் சிலேடைப் பொருளை விளக்குக.

2. தாய்நாட்டின் பெருமையைப் பாரதியார் எவ்வாறு கூறுகின்றார் ?

3. நம் நாட்டு மங்கையர் சிறப்பினைப் பாரதியார் கூறுவது எங்ஙனம் ?

கட்டுரையாக்கம்

பாரதியார் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு ‘ தமிழ் நாட்டுப் பெண்பாலார் ’ என்பது பொருளாக ஒரு சிறு கட்டுரை வரைக.

உரைநடைப் பகுதி

1. சிறை நீக்கிய செய்யுள்

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்

திருச்சிராப்பள்ளியில் சொக்கநாத நாயக்கர் அரசாட்சி செய்துவந்தகாலத்தில், திருநெல்வேலிச் சீமையை வட மலையப்பப் பிள்ளையென்பவர் (கி. பி. 1620-1676) பிரதிநிதியாக இருந்து ஆண்டுவந்தார். அவருடைய அதிகாரத்தின் பெருமையினல் தென்பாண்டிநாட்டில் குடிகள் யாவரும் சுகமாக வாழ்ந்து வந்தனர். அவரைப் பிள்ளையன் என்றே பெரும்பாலும் வழங்குவர். அவர் தெய்வ பக்தி மிக உடையவர். அவரால் இயற்றப்பட்ட தருமங்களும், தேவாலயத் திருப்பணிகளும், பிற அருமைச் செயல்களும் பல புலவர்களுடைய செய்யுட்களில் மணியைப்போல அமைக்கப்பட்டு, அவருடைய புகழை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. அவர் சிறந்த கல்விமாளுக இருந்தார். தமிழிலே நிறைந்த புலமையுடையவர். மச்சபுராணம், நீடூர்த்தல புராணம் முதலிய சில நூல்களை அவர் இயற்றி யிருக்கிருர். தமது சிறந்த புலமைக்கேற்பப் புலவர்களுடைய பெருமையையும், அவர்கள் இயற்றும் செய்யுட்களின் அருமையையும் அறிந்து, அவர்களை மதித்துப் போற்றிப் பாதுகாக்கும் தன்மையுடையவர். புலவர்களிடத்தில் பேரன்புடையவராக அவர் இருந்தமையால், அவரைச் சார்ந்த பலருக்கும் அங்ஙனமே புலவர்களிடத்தில் அன்பு உண்டாயிற்று. அவர் காலத்து உத்தியோகஸ்தர்களிற் பலர் சிறந்த தமிழ்க் கல்விமான்களாக விளங்கினுர்கள்; 'மன்னவனெப்படி மன்னுயிரப்படி' என்பது உண்மையன்றோ?

அக்காலத்தில் தென்திருப்பேரை என்ற விஷ்ணுஸ்தலத்தில் உள்ள தலவகார ஸாமவேதிகளாகிய ஸ்ரீவைஷ்ணவர்களுள் நாராயண தீக்ஷிதரென்னும் ஒரு வித்து

வான் இருந்தார். பல வருஷங்களுக்குமுன் சுந்தர பாண்டியரென்னும் அரசர் பல ஊர்களில் வசித்த நூற்றெட்டுத் தலவகார ஸாமவேதிகளாகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் குடும்பத்தைத் தென் திருப்பேரையில் அமைத்து, அக்குடும்பத்தினருக்கு வீடுகளும் நிலங்களும் வழங்கினரென்பர்; அந் நூற்றெட்டுக் குடும்பத்தின் வழிவந்தவர்கள் இன்றும் அவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

முற்கூறிய நாராயண தீக்ஷிதரென்பவர் அப்பரம்பரையில் வந்தவரே. அவருக்கு நிலம் வீடு முதலிய சொத்துக்கள் இருந்தன. அவர், தம்முடைய குலவொழுக்கத்திற்கேற்ற கடமைகளைச் செய்தும், தமிழ் நூல்களைப் படித்து இன்புற்றும், செய்யுளியற்றியும், தென் திருப்பேரையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மகர நெடுங்குழைக்காதரென்னுந் திருநாமமுள்ள திருமாலைத் தரிசித்து மகிழ்ந்தும் வாழ்ந்துவந்தார்.

இங்ஙனம் இருந்த காலத்தில், வரி வசூலிக்கும் பொருட்டு வடமலையப்பப் பிள்ளையனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுள் ஒரு வன்னெஞ்சர், தென் திருப்பேரையிலிருந்த வைஷ்ணவர்களிற் சிலர் வரி செலுத்தவில்லையென்ற காரணத்தால் அவர்களைத் திருநெல்வேலிக்குக் கொணர்ந்து சிறையிலிட்டார். அவர்களுள் நாராயண தீக்ஷிதரும் ஒருவர். அவர்கள் தாம் வரிகொடாமைக்குக் காரணங்களை மிகவும் பணிவாகக் கூறி, இயன்ற காலத்திற் செலுத்திவிடுவதாக நயந்து கேட்டுக்கொண்டும் அவ்வதிகாரியின் மனம் இளகவில்லை. ஒரே பிடிவாதமாகச் சிறையிலிட்டுக் காவல் வைத்துவிட்டார். அச்சிறைக்கூடம் இருந்த தெருவிற்கு இப்போதும் **காவற்புரைத்** தெரு என்னும் பெயர் வழங்கி வருகிறதாம்.

சிறைப்பட்ட நாராயண தீக்ஷிதர், 'நம்முடைய பிராரப்த வினையின் பயனாக இந்தத் துன்பம் வந்தது' என்று எண்ணி ஏங்கினர். சுதந்திரமான வாழ்க்கையும், நாள்தோறும் அதுவரை செய்துவந்த குழைக்காதர் தரிசனமும் அவருக்கு அப்பால் இல்லாதனவாயின. நாம் எவ்வளவோ நயந்து கல்லும் கரையும்படி கேட்டுக்கொண்

டும் இந்தக் கொடியவன் இரங்கவில்லையே! இனி என் செய்வோம்! எல்லாத் துன்பத்தையும் நீக்கிப் பாதுகாக்குங் குழைக்காதரே நமக்குக் கதி. இந்தக் கொடியவனிடம் செய்துகொண்ட விண்ணப்பம் இவன் காதில் சிறிதும் ஏறவில்லை; இனிமேல் குழைக்காதர் காதில் ஏறும்வண்ணம் விண்ணப்பித்துக் கொள்வதுதான் முறை' என்று தெளிந்தார். அதுமுதல் ஒவ்வொருநாளும் குழைக்காதர் விஷயமாக மனமுருகிச் செய்யுட்கள் சிலவற்றை இயற்றித் திருப்பித் திருப்பிவாயாரச் சொல்லிப் பிரார்த்திக்க ஆரம்பித்தார். அவரைப் பார்த்து உடன் இருந்தவர்களும் சில செய்யுட்களை இயற்றத் தொடங்கினர்கள்.

நாராயண தீக்ஷிதர் "குழைக்காதர் பாமாலை" என்று பெயரிட்டு, தம்முடைய செய்யுட்களை முறையாக அமைத்து வந்தார். 'குழைக்காதரைப் பிரிந்திருக்கும் கொடிய காலமும் வந்ததே!' என்று அவர் எண்ணி எண்ணி நைந்தார்.

"கன்றுக் கிரங்கிய கற்றுவைப் போலக் கருணையுடன்
என்றைக் கிரங்குவ ரோவறி யேனெழு பாருமுய்யக்
குன்றைக் கவிகை யெனத்தரித் தோர்குழைக் காதரையான்
சென்றெப் பொழுது தொழுவதும் பாவங்கள் தீர்வதுமே"

என்பது பாமாலையிலுள்ள முதற் பாட்டு. இதில், 'குழைக்காதரை யான் சென்று தொழுவதும் பாவங்கள் தீர்வதும் எப்பொழுது!' என்று அவர் உள்ளந் துடித்துப் பாடியிருக்கின்றர்.

சிறை வாழ்க்கையை மேற்கொண்டு ஒரு மாதகாலம் ஆயிற்று. ஒருவழியும் தோன்றவில்லை;

"திங்களொன் ருகச் சிறையிருந் தோமிச் சிறையகற்றி
எங்கட்கம் பாலிரங் காததென் னேவிசை நான்மறையின்
சங்கமுங் கீதத் தமிழ்ப்பாட லுஞ்சத்த சாகரம் போற்
பொங்குதென் பேரைப் புனிதா கருணைப் புராதனனே"

என்று குழைக்காதரை நினைந்து இரங்கினர். தம்முடைய ஊரில் பெருமாள் சந்நிதியில் நான்மறை முழக்கமும், திவ்யப் பிரபந்த முழக்கமும் கடல் முழக்கம்போல நிறைந்து விளங்குமென்பதை அவர் எண்ணிக்கொண்டு,

'அந்தத் திவ்ய சப்தங்களைக் கேட்டு ஈடுபடாமல் இங்கே அழுகையொலியும், சிணுங்குஞ் சப்தமும், அதிகாரத் தொனியும் கேட்டுத் துன்புறுந் தலைவிதி நமக்கு வாய்த் ததே!' என்று புலம்பினர். 'குழைக்காதர் அருள் செய் வார், அருள் செய்வார்! இன்றைக்குள் ஏதாவது நன்மை ஏற்படும்; நாளைக்குள் அநுகூலம் உண்டாகும் என்று எண்ணி ஏமாந்தார்; பிறகு,

" இன்றுகும் நாளைக்குள் நன்றுகும் என்றிங் கிருப்பதலால்
ஒன்ரு கிலும்வழி காண்கில மேயுன் உதவியுண்டேல்
பொன்ருமல் நாங்கள் பிழைப்போம் கருணை புரிந்தளிப்பாய்
அன்ரு ரணந்தொழ நின்ருய்தென் பேரைக் கதிபதியே"

என்று குழைந்து நைந்தார்.

வடமலையப்பப் பிள்ளையன் நல்ல நீதியுடையவரென் றும், தமிழ் அன்புடையவரென்றும் அறிந்தவராதலின், தாமும் பிறரும் சிறையில் இருப்பதை அவர் அறிந்தால், அவரால் நன்மையுண்டாகுமென்ற நினைவு தீக்ஷிதருக்கு உண்டாயிற்று; அப்பொழுது, 'அவருக்குத் தெரிவிப்ப வர் ஒருவருமில்லையே!' என்ற எண்ணம் அடுத்தாற் போல் தோற்றியது; உடனே,

" வள்வார் முரசதிர் கோமான் வடமலை யப்பன்முன்னே
விள்வாரு மில்லை யினியெங்கள் காரியம் வெண்டயிர்பாற்
கள்வா அருட்கடைக் கண்பார் கருணைக் களிறழைத்த
புள்வாக னுவன்பர் வாழ்வேதென் பேரைப் புராதனனே"

என்று கதறினர்.

இப்படிச் சிலநாள் கழிந்தன. புதிய செய்யுள் இயற்றி மனங்கரைந்து பாடுவதும், முன்பே இயற்றியுள்ள பாடல் களைப் பாடிப் புலம்புவதும் நாராயண தீக்ஷிதர் வழக்க மாயின. அந்தச் சிறைக்கூடக் காவலதிகாரி தமிழறி வுடையவர். ஒருநாள் நாராயண தீக்ஷிதர், 'வள்வார் முரசதிர் கோமான்' என்ற செய்யுளைமட்டும் சொல்லிக் கொண்டிருந்தபோது, அவ்வதிகாரியின் காதில் அது பட்டது. நம்முடைய எசமான் பெயர் இந்தப் பாட்டில் அமைந்திருக்கிறதே! உள்ளே இருப்பவர் தமிழ் வித்து வான்போலத் தோற்றுகிறது என்று எண்ணினர். தமிழ்ப்

புலவர்களுக்கு மரியாதை செய்வதும், அவர்களுக்குக் குறைவு வராமற் பாதுகாப்பதும் பிள்ளையனுக்கு உவப்பான காரியங்களாதலின், அதிகாரி உடனே சென்று தமிழ் வித்துவானொருவர் சிறையில் இருப்பதையும், அவர் பிள்ளையன் பெயரைப் பாட்டிற் கூறிப் புலம்புவதையும் எசமானிடம் சொன்னார்.

அவர் சொன்னதுதான் தாமதம்; தண்டமிழ் வாணர் துயரத்தைக் கேட்கப்பொறாத வடமலையப்பப் பிள்ளையன் எல்லாக் காரியங்களையும் விட்டுவிட்டு, உடனே தம் குதிரைமீதேறிக்கொண்டார்; சிறைக்கூடத்தை நோக்கி விரைந்து வரலானார்.

சிறிது நேரத்திற்குள் குதிரை சிறை வாயிலில் வந்து நின்றது. பிள்ளையன் சிறைக்கூடத்தைத் திறக்கச்செய்து உள்ளே சென்றார்; அப்பொழுதும் குழைக்காதர் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு பாட்டுப் பாடிய வண்ணமாய்க் கண்ணுங் கண்ணீருமாக அங்கேயிருந்த புலவரைக் கண்டார். அவருடைய நிலை, பிள்ளையன் நெஞ்சில் உருக்கத்தையும் கண்ணில் நீரையும் உண்டாக்கின; 'குழைக்காதரை நினைந்து தமிழ்க்கவியால் முறையிடும் இந்தப் புலவர் பெருமானைப்பற்றி இதுகாறும் அறிந்துகொள்ளவில்லையே. நாம் தமிழறிந்ததனால் என்ன பயன்? இவர் எவ்வளவு நாட்களாக இங்ஙனம் துன்புறுகின்றாரோ?' என்று மனம் வருந்தினார்; அவரை நோக்கி அவர் வரலாற்றை வினவினார்; அவரது வாய்மொழியால் எல்லாம் தெளிந்தார்.

பிள்ளையன் உத்தரவினால் பல வண்டிகள் சிறைவாயிலில் வந்து நின்றன. நாராயண தீக்ஷிதரும் அவருடன் இருந்த வேறு தமிழறிஞர்களும் அவற்றில் ஏறிக்கொண்டனர். பிள்ளையன் தீக்ஷிதரையும் பிறரையும் தம் அரண்மனைக்கு அழைத்துச்சென்று உபசரித்தார்; அவர் கொடுக்கவேண்டிய வரியை நீக்கியதோடு அவர் நிலங்களை என்றும் வரியில்லாத இனும் நிலங்களாகச் செய்துவிட்டார்.

தீக்ஷிதர் பாடிய பாமாலையைப் பிள்ளையன் கேட்டார்.

அப்புலவருடைய மனம் எவ்வளவு வருந்தி நைந்திருக்க வேண்டுமென்பதை அச்செய்யுட்கள் நன்ருக எடுத்துக் காட்டின. அதுகாறும் அறுபத்தைந்து பாடல்கள் இயற் றப்பட்டிருந்தன. பிள்ளையன் தீக்ஷிதரைப் பார்த்து, 'இந்நூலை முற்றும் பாடி முடிக்கவேண்டும்' என்று விரும்பினர். அப்படியே அப்புலவர் பின்னும் முப்பத் தைந்து செய்யுட்களை இயற்றி நூறு பாடலாகப் பூர்த்தி செய்தனர்.

தாம் சிறைக்கூடத்திலிருந்து முறையிட்ட முறையீடு குழைக்காதர் காதில் விழுந்தமையால் அப்பெருமாள், பிறர் காதுகளிலும் விழும்படி செய்து சிறைத்துன்பத்தை நீக்கியருளினரென்று தீக்ஷிதர் உறுதியாக நம்பினர். அதனல் சிறையிலிருந்து விடுதலைபெற்ற பின்பு பாடிய செய்யுட்களில் குழைக்காதர், தம் துன்பத்தைப் போக்கி யருளியதாகச் சொல்லியிருக்கிருர். விடுதலை பெற்ற நிலை யில் பாடிய முதற் பாட்டிலேயே,

" ஆடகச் சேவடி யாலெம தாவி யளித்தனை கார்க்
கோடகப் பாவிகள் வாராமற் காத்தனை "

என்று குறிப்பித்திருக்கின்ருர். இதில், 'கார்க்கோடகப் பாவிகள்' என்றது தம்மைச் சிறையிட்ட அதிகாரியை யும் அவரைச் சார்ந்தவைகளையுமே யென்று தோன்று கிறது.

இந்தப் பாமாலை தென்திருப்பேரை முதலிய இடங் களில் பலரால் மிக்க பக்தியோடு பாராயணம் செய்யப் பட்டு வருகிறது. அங்ஙனம் செய்வதனுற் சில துன்பங் கள் நீங்கி இன்பம் உண்டாவதாகச் சிலர் கூறக் கேட் டிருக்கிறேன். பள்ளிக்கூடத்திலும் முன் காலத்திலே இது பாடமாக இருந்துவந்தது.

குறிப்புரை

தலவரம் - இது சாமவேதத்தின் ஒரு பிரிவு. மகர நெடுங்குழைக் காதர் - சுருமீன் வடிவமாகச் செய்யப்பட்ட நீண்ட குழையை யணிந்த காதையுடையவர். குழை - காதணி. நயந்து - கெஞ்சி. காவற்புரைத் தெரு - சிறைக்கூடமுள்ள தெரு. நைந்தார் - வருந்தினர்.

"கன்றுக்கு": எழு பார் உம் - ஏழு தீவுகளைக் கொண்ட பூமியி லுள்ளார் யாவரும். குன்றை - கோவர்த்தன மலையை. கவிகைஎன - குடையாக.

"திங்களொன்ருக": திங்கள் ஒன்று ஆக - ஒரு மாத காலமாக. எங்கள் தம்பால் - எங்களிடத்தில்.

"இன்ருகும்": பொன்ருமல் - அழியாமல். அன்று - வெகுகாலந் தொடங்கி. ஆரணம் - வேதம்.

"வள்வார்": வள்வார் முரசு - வலிய தோல்கயிற்றினுற் கட்டப் பட்ட பேரிகை. விள்வார் - வாய் திறந்து சொல்லுபவர். புள் - கருடன்.

முறையீடு - நீதிவேண்டிக் குரையிரத்தல்: ஆடகச் சேவடி - பொன் போல் அருமையான சிவந்த திருவடிகள். ஆவி அளித்தனே - உயிரைப் பாதுகாத்தாய்.

பயிற்சி

1. பொருள் கூறுக: மகரம், கவிகை, ஆரணம், புள், ஆடகம்.
2. பிரித்துக் காட்டுக: வன்னெஞ்சர், வெண்டயிர், நான்மறை, கற்ரு, சேவடி.

வினுக்கள்

1. பிள்ளையன் என்ற பெயர் யாருக்கு வழங்கியது?
2. பிள்ளையனுடைய குணங்களைப்பற்றிச் சுருக்கிக் கூறுக.
3. பிள்ளையன் இயற்றிய நூல்கள் எவை?
4. 'மன்னவனெப்படி மன்னுயிரப்படி'—சந்தர்ப்பங் கூறி விளக்குக.
5. நாராயண தீக்ஷிதர் என்பவர் யார்? அவர் சிறைப்படக் காரண மென்ன?
6. இவர் இயற்றிய நூல் யாது? அதனை இயற்றக் காரணமென்ன?
7. புலவர் சிறைநீக்கம் பெற்றது எவ்வாறு?
8. தீக்ஷிதர் விடுதலை பெற்றபோது பாடிய பாட்டில் தமது நம்பிக்கையை எப்படி வெளியிட்டிருக்கிருர்?
9. 'கார்க்கோடகப்பாவிகள்' என்றது யாரைக் குறிக்கும்? ஏன்?
10. சிறு குறிப்பு வரைக: தலவகாரம், காவற்புரைத் தெரு.

கட்டுரையாக்கம்

'பிள்ளையன் தமிழ்ப் பற்று' என்பதுபற்றி இருபது வரியில் ஒரு சிறு கட்டுரை வரைக.

2. ராடார்

திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, பி. ஏ., பி. ஓ. எல்.,

சென்ற இரண்டாவது உலக மகாயுத்தத்தின் நன்மை யான விளைவுகளில் ராடார் சாதனம் கண்டுபிடிக்கப் பட்டதும் ஒன்றாகும். எதிரி விமானங்கள் தாக்க வரும் போது அவை எங்கிருந்து வருகின்றன, எத்திசையில் இருக்கின்றன, எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்று கண்டு பிடிப்பதற்கு இச்சாதனம் உதவுகிறது. கண்டு பிடித்த பிறகு விமான எதிர்ப்புப் பீரங்கிகளைக் கொண்டு அவற்றைச் சுட்டு வீழ்த்தித் தற்காப்பு செய்து கொள்ள லாம். இவ்வளவு உபயோகமான இச்சாதனத்தைக் குறித்துச் சிறிது தெரிந்து கொள்ளுவோம்.

ராடார் என்பது ரேடியோவினால் திசையறிதல். இது ஆகாயத்தில் விமானங்களின் திசையையும், இருப்பிடத் தையும், கடலில் கப்பலின் திசையையும் இருப்பிடத்தை யும் அறிய உதவுகிறது. இதில் உள்ள விசேஷம் என்ன வென்றால் ஆகாயத்திலுள்ள விமானங்கள் அல்லது கடலில் உள்ள கப்பல்களின் உதவி அல்லது ஒத்துழைப்பு இன்றியே, இது அவற்றின் திசையை அறியும் சக்தி வாய்ந்தது.

இந்த ரேடியோவுக்கு உபயோகிக்கப்படும் ஏரியல் (Aerial) ஒரு செங்குத்தான இருசின்மீது சுழலும் சட்டம் ஆகும். இது எத்திசையிலிருந்து 'செய்தி' வருகிறதோ அத்திசைக்கு நேர்க்குத்தாக (அதாவது 90°) இராமல், ஒரே, தளத்தில் இருக்கும்படி வைக்கப்பட்டால், அச் செய்தியை இது பெற்றுக்கொள்ளும்; நேர்க்குத்தாக இருந்தால் பெற்றுக் கொள்ளாது. நேர்க்குத்துக்கும் சம தளத்திற்கும் இடையில் ஏதேனும் ஒரு கோணத்தில் பொருத்தி வைக்கப்பட்டால் அக்கோணத்தின் அளவுக்கு ஏற்றபடி செய்தியைப் பதிவு செய்து கொள்ளும். எனவே, பதிவு செய்யப்பட்ட செய்தியின் தன்மை அல்லது, தீக்ஷண்யத்திலிருந்து அச்செய்தி தரும் மூலத்தின்

(Source) திசையை அறியலாம். இதுதான் ராடாரின் சுருக்கமான தத்துவம்.

முதலில் ராடார் சாதனத்திலிருந்து ரேடியோ செய்தி அனுப்பப்படுகிறது. அச்செய்தி ஒரு விமானத்தின் மீதோ, கப்பலின் மீதோ பட்டவுடன் அங்கிருந்து எதிரொலிபோலப் பதில் செய்தி திரும்பி வருகிறது. அப்படித் திரும்பிவரும் செய்தியின் திசையைத்தான் ராடார் கருவி பிறகு கண்டு பிடிக்கிறது. இரண்டு அல்லது, பல ராடார் கருவிகளிலிருந்து தனித்தனியாக ரேடியோ செய்திகள் அனுப்பப்பட்டால் அவை ஒரு கப்பலின்மீது மோதித் திரும்பி வரும் திசைக் கோடுகளைப் படத்தில் வரைந்து நீட்ட, அக்கோடுகள் சந்திக்கும் இடமே அக் கப்பல் உள்ள இடமாகும்.

ஆகவே, கண்டுபிடிக்கப்பட வேண்டிய பொருளின் உதவி யில்லாவிட்டாலும் மற்றொரு ராடார் ஸ்தாபனத்தின் உதவி இதற்குத் தேவையாக இருக்கிறது. இவ்வுதவி எதிர்பாராத விதத்தில் கூடக் கிடைக்கலாம். எவ்வாறெனின், கள்ளத்தனமாகச் செய்தியனுப்பும் ஸ்தாபனம் எங்காவது இருந்தால் அதன் மூலம் கூட இவ்வுதவி கிடைத்துவிடும். ஆகவே, கள்ளத்தனமான ஸ்தாபனமும் தன்னைத்தானே காட்டிக் கொடுத்து விடுகிறது. இதுவும் ஓர் எதிர்பாராத பலன்! இவ்வாறாக ராடார் அல்லது ரேடியோவினால் திசையறிவதற்குப் புறம்பான பொருளின் ஒத்துழைப்பும் தேவையில்லை. அது தானாகவே காரிதைச் சாதித்து விடுகிறது.

ராடாரினால் விமானம் அல்லது கப்பலின் தூரத்தை அறிவதற்கு, அதிலிருந்து பதில் செய்தி வருவதற்கு ஆகும் நேரம் கணக்கிடப்பட வேண்டும். பிறகு அந்த நேரத்தையும் ரேடியோ அலைகளின் வேகத்தையும் பெருக்கினால், அக்கப்பல் அல்லது விமானத்தின் தூரம் தெரியும். ரேடியோ அலைகளின் வேகமும், ஒளி அலைகளின் வேகமும் ஏறக்குறைய ஒன்றே; அதாவது ஒரு செகண்டுக்கு 1,86,000 மைல்.

ரேடியோ அலைகள் இவ்வளவு வேகமாகச் செல்வதால்

அவை போய்த் திரும்பும் நேரத்தைக் கணக்கிடுவதற்கு வெகு நுட்பமான கால அளவுக் கருவி வேண்டும். அது லக்ஷத்தில் ஒரு பாகம் செகண்டையும் அளக்கக் கூடிய தாக இருக்க வேண்டும். இதற்கு குறைக்கதிர்க் குழாய் 'ஆசிலோகிராப்' (Cathode Ray Tube Oscillograph) என்ற கருவியை உபயோகிக்கிருர்கள். இதில் காற்று நீக்கப்பட்ட கூருருளையான கண்ணுடிப் பாத்திரம் ஒன்றில் இரண்டு மின்முனைகள் (Electrodes) வைக்கப் பட்டிருக்கும். அவை ஒரு பாட்டரியுடன் இணைக்கப்பட் டிருக்கும். குறுகிய பகுதியில் வைக்கப்பட்டுள்ள குறை அல்லது எதிர்மின் முனை (Negative electrode) மற்ருெரு பாட்டரியிலிருந்து வரும் மின்னருவியால் சூடாக்கப்பட்டு ஒரு எலெக்ட்ரான் பிரவாகத்தை வெளிவிடுகிறது. இது மிகை அல்லது நேர் மின் முனை (Positive electrode) யில் உள்ள ஒரு துவாரத்திலும் குழாய் நெடுகிலுமாக நுழைந்து அகன்ற பகுதியைத் தாங்குகின்றது. இப்பகுதியில் ஓர் ஒளிரும் திரை (Fluorescent screen) வைக்கப்பட்டிருக் கிறது. எலெக்ட்ரான்கள் அதன்மீது மோதும்போதெல் லாம் அதில் ஒரு பிரகாசமான புள்ளி தோன்றும். இப்போது மிகை முனைக்கும் ஒளிரும் திரைக்கும் இடையில் இரண்டு உலோகத் தகடுகள் வைக்கப்பட்டு, அவற்றில் ஒன்றை நேர் மின்னேற்றமும் மற்ருென்றை எதிர் மின்னேற்றமும் உடையதாகச் செய்தால், குறை முனையிலிருந்து வரும் எலெக்ட்ரான் பிரவாகம் நேர் மின்னேற்றமுள்ள தகட்டி னிடம் இழுக்கப்படும். இப்போது அத்தகடுகளை மாறி மாறி நேர் மின்னேற்றமும் எதிர் மின்னேற்றமும் உடை யவையாகச் செய்து கொண்டே இருந்தால் † அவற்றுக் கிடையில் எலெக்ட்ரான் கற்றை மாறி மாறி ஊசலாடிக் கொண்டிருக்கும். இப்படி இது ஊசலாடும் வேகமும் செய்தி அனுப்பும் ரேடியோ ஸ்தாபன அலைகளின் வேக மும் ஒன்ருக இருக்கும்படி செய்யப்படும். இப்படிச் செய்யப்படுவதனுல் இத்தகடுகளுக்கிடையே எலெக்ட்ரான்

† அனுபவத்தில் இதற்காக மின்னேற்றப்பட்ட 'கண்டென்ஸர்' ஒன்றுடன் இத்தகடுகளில் ஒன்றை இணைத்து விடுவார்கள்.

கற்றை இருக்கும் தூரத்தைக் கொண்டு ரேடியோ அலை களின் தூரத்தைக் கணக்கிடலாம். தகடுகளுக்கிடையே உள்ள தூரத்தை அளவு கோடுகள் இட்டுப் பிரித்திருப் பதால் அதைக் கண்டவுடன் செய்தியைப் பிரதிபலிக்கும் பொருள் (கப்பல் அல்லது விமானம்) எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்று தெரிந்துவிடும்.

வானத்தில் உள்ள அயனமாக்கப்பட்ட * (Ionised) வாயுக்களின் அடுக்குகளிலிருந்தும் ரேடியோ அலைகள் பிரதிபலிக்கப்படுகின்றன. வானத்தில் செல்லும் எரி நட்சத்திரங்களாலும் (Meteors) ரேடியோ அலைகள் அடிக்கடி பிரதிபலிக்கப்படுகின்றன. இவை ஆகாயத்தில் $12\frac{1}{2}$ மைல் உயரத்தில் இருக்கும்போதும் கண்ணுக்குத் தெரிகின்றன. இவை காற்று மண்டலத்தில் பயங்கரமான வேகத்துடன் நுழைவதால், காற்றை உஷ்ணப்படுத்தி அயனமாக்கி விடுகின்றன. அதனுல் அப்போது வானத் தில் நீண்ட கீற்றுப் போன்ற ஒளி தெரிகிறது. இதிலிருந்து-தான் ரேடியோ அலைகள் பிரதிபலிக்கப்படுகின்றன. இவ் வொளி நம் கண்ணுக்கு இரவில்தான் தெரியும்; பகலில் தெரிவதில்லை. ஆனுல் ராடார் சாதனமோ இதைப் பக லிலும் கண்டுபிடித்து விடுகிறது.

1943-ல், அதிக சக்தியுள்ள ராடார் சாதனங்களால் ஆகாயத்தில் நம் கண்ணுக்குத் தெரியாமல் எங்கெங்கோ பறக்கும் பறவைகள் கூடக் கண்டுபிடிக்கப் பட்டுவிட்டன. இவை ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த எதிரொலிகளைக் கண்டுபிடிப்பதற்கு இடையூருக இருந்தன. ஆகையால், பறவைகளிடமிருந்து வரும் எதிரொலிகளையும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த எதிரொலிகளையும் பிரித்தறிவ தற்குத் தனிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பறவை களிலிருந்து வந்த எதிரொலி பல தடவை எதிரிகளின் E— படகுகளிலிருந்து வந்த எதிரொலியோ என்னும் அச்சத்

---

* அதாவது வாயு அணுக்கள் நேர் மின்னேற்றமும் எதிர் மின்னேற் றமும் உள்ள இருவகை அணுக்களாகப் பிரிக்கப்பட்டிருத்தல். இயற்கை யாகவே ஆகாயத்தில் உயரமான இடங்களில் இவ்வாறுதான் இருக்கிறது.

தையும் எதிரிகளின் கப்பற்படை எடுப்பு அச்சத்தையும் உண்டாக்கிவிட்டது.

கனத்த மழையும் எதிரொலியை உண்டாக்குகிறது. ஆகாயத்தில் மேகங்கள் உள்ள தூரத்தைக் கணக்கிடவும் ராடார் சாதனம் உபயோகப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக சந்திரன், செவ்வாய் முதலிய கோளங்களுக்குச் செய்தியனுப்பிப் பதிலைப் பெறவும் ராடார் உபயோகப் படுகிறது. சமீபத்தில் சந்திரனிடமிருந்து ரேடியோ பதில் செய்தி வந்ததாகச் சில விஞ்ஞானிகள் அறிவித்தார்கள். உண்மையில் அங்குள்ள அல்லது இல்லாத எவ்வித உயிரினின்றும் அப்பதில் வரவில்லை; வெறும் பிரதிபலனச் செய்திதான் வந்தது. 1946 ஜனவரி 10-ம் தேதி இவ்வதிசயம் நிகழ்ந்தது. சந்திரனிடமிருந்துதான் பிரதிபலனம் கிடைத்ததென்பதற்கு ருசு, விஞ்ஞானிகள் ஏற்கெனவே, கணக்கிட்டிருந்தபடி ஒரு குறிப்பிட்ட அதிர்வு எண் (Frequency) உள்ள அலையும், சந்திரனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரத்தை உத்தேசித்து. 2, 4 செகண்டு இடைவெளியிட்டுப் பதில் கிடைத்ததும் ஆகும். எனவே, இதை விஞ்ஞானத் துறையில் ஒரு புது சகாப்த சிருஷ்டி என்றே சொல்லவேண்டும்.

குறிப்புரை

விளைவு - பலன். புறம்பான - வேறான. கோளம் - கிரகம்.

பயிற்சி

1. வாக்கியங்களில் அமைக்க:—சாதனம், பயிற்சி, தளம், தத்துவம், நுட்பமான.
2. பகுபத உறுப்புக் கூறு:—கொள்ளும், வரைந்து, தோன்றும்.
3. பிரித்துக் காட்டுக :—கீற்றுப்புள்ளி, எதிரொலி, தற்காப்பு.

வினாக்கள்

1. ராடார் சாதனம் எவ்விதத்தில் உதவுகிறது ?
2. ராடாரின் தத்துவம் யாது ?
3. ராடாரினால் ஏற்பட்ட எதிர்பாராத பயன் யாது ?
4. 'குறைக்கதிர்க் குழாய் ஆசிலோகிராப்' என்ற கருவியின் உபயோகம் யாது ?
5. ராடார் கருவியைச் சமீப காலத்தில் எதற்குப் பயன்படுத்தினார்கள் ?

கட்டுரையாக்கம்

"ராடார்" என்பது பொருளாக 25 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

3. இந்திய சிற்பங்கள்

எல்லோராக் குகைக் காட்சிகள்

திருமதி ஆர். எஸ். ருக்மிணி அம்மாள், எம். ஏ.

எல்லோராக் குகைக் கோயிலேப் பார்க்கச் செல்கின்ற வர்கள் நிஜாம் அரசாங்கத்தார் கட்டியிருக்கும் முஜாபரி பங்களாவில் தங்கலாம். யாத்திரிகர்களே அழைத்துக் கொண்டு போய்க் குகைக்கோயில்களேக் காட்டுவதற்கு அதிகாரி ஒருவரைச் சமஸ்தான அரசாங்கத்தார் நியமித் திருக்கின்றனர். இவர் பண்டைப்பொருள் பாதுகாப்பிலா காவைச் சார்ந்தவர். இந்த அதிகாரியே எல்லோராக் குகைகளேப் பாதுகாக்கும் 'க்யுரேட்டர்' (Curator) என்னும் பதவியைத் தாங்குபவர். எல்லோராக் குன்று களில் முப்பத்து நான்கு குகைகள் உள்ளன. இவற்றைத் தென் கோடியினின்று ஒவ்வொன்ருகப் பார்த்துக் கொண்டே போவது நலம். இக் குகைகளேத் தென் கோடியிலிருக்கும் குகையிலிருந்து வடகோடியிலிருக்கும் குகை வரையில் வரிசையாக, ஒன்று இரண்டு, மூன்று என்று இலக்கமிட்டு எண்களால் குறிப்பிடுவது வழக்கம். தென்கோடியிலிருந்து பார்த்து வருங்கால் முதல் பன்னி ரண்டு குகைகள் பௌத்த சமயத்தைச் சார்ந்தவைகளாக இருக்கின்றன. அவை கயிலாய ஆலயத்தை விடப் பழமை யானவை.

பௌத்தர்களது குகைகளே இரண்டு விதமாகப் பாகு பாடு செய்யலாம். ஒருவகையான குகைகள் விகாரங்கள் எனப்படும். மற்ருெரு வகையான குகைகள் சைத்தியங் கள் எனப்படும். விகாரங்களின் நடுவில் பிக்ஷுக்கள் தியானத்திற்காகவும் வழிபடுதலுக்காகவும் கூடுகிற ஒரு நடுக் கூடமும், இதனேச் சூழ அவர்கள் தங்கும் அறை களும் இருக்கும். சைத்தியம் என்னும் குகைகளில் தூண்களோடு கூடிய சுற்றுப் பிரகாரமும், நடு மண்டப மும், அதன் கோடியில் குடை கவிழ்த்தாற் போன்ற மூலத் தானமும், மூலத்தானக்கோடியில் புத்த ஸ்தூபமும்

இருக்கும். முதல் பன்னிரண்டு பௌத்தக் குகைகளில் பத்தாவது குகை நீங்கலாக மற்றவை யாவும் விகாரங்களே யாகும். பத்தாவது குகை ஒன்றுதான் சைத்தியமாக அமைந்துள்ளது.

முதல் ஐந்து குகைகளை இரண்டாவது நூற்றாண்டிலும் மூன்றாவது நூற்றாண்டிலும் செய்திருக்கவேண்டும் எனச் சரித்திராசிரியர்கள் துணிகின்றனர். இரண்டாவது குகையில் இருக்கும் தூண்களின் போதிகைகள் அஜந்தாவின் 24-வது குகையிலுள்ள தூண்களிற் காணும் போதிகைகளைப்போல் அமைந்துள்ளன. சிற்பி, குகையில் சிங்காதனத்தின்மேல் அமர்ந்திருக்கும் புத்தரை வெகு அழகாகச் செதுக்கியிருக்கிறான்; புத்தருக்குப் பின்பக்கத்தில் நிற்கின்ற போதி சத்துவர்களைப் பக்கத்துச் சுவர்களில் மிகப் பெரிய உருவத்தில் செதுக்கியிருக்கிறான். மூன்றாவது குகையில், சிற்ப வேலை முற்றுப் பெறாத சில தூண்கள் உள்ளன. இக்குகையிலும் நான்காவது குகையிலும் உள்ள தூண்களின் போதிகைகளைப் போன்றவை, அஜந்தாவில் சில குகைகளிற் காணப்படுகின்றன. ஐந்தாவது குகையில் தூண்களுக்கு மத்தியில் பிக்ஷுக்கள் படுத்து இளைப்பாறுவதற்காக அகலமான கட்டில்களைக் கல்லில் வெட்டி யமைந்திருப்பதைக் காணலாம். இங்கே இருபது பிக்ஷுக்கள் தங்க இருபது அறைகள் இருக்கின்றன. சிற்பி ஆறாவது குகையில் மூலத்தானத்தின் வாசலிலே துவாரபாலகர்களாகப் போதிசத்துவர்களையே செதுக்கி வைத்திருக்கிறான்.

ஏழாவது குகை முதல் பத்தாவது குகை வரைக்கும் தனிக் காட்சிகள் ஒன்றும் இல்லை. இவை யாவும் பாறையைக் குடைந்து செய்த சாதாரணக் குகைகளே யாம். அங்கங்கே சில அழகிய சிற்ப வேலைகள் காணப்படுகின்றன. பதினோராவது குகையைத் 'தோதால்' (இரட்டை அடுக்கு மாடி) என்றும், பன்னிரண்டாவது குகையை 'தீன்தால்' (மூன்று அடுக்கு மாடி) என்றும் கூறுகிறார்கள். பதினோராவது குகையில் மூன்று அடுக்கு மாடிகளாகக் குகைகள் அமைந்திருந்த போதிலும்,

அதனைமட்டும் ஏன் இரண்டு அடுக்கு மாடிகள் என்று குறிப்பிடுகின்றனரோ தெரியவில்லை.

தீன்தால் வெகு அழகான சிற்ப வேலைப்பாடுகளோடு விளங்குகின்றது. தரைமட்டத்திலிருக்கும் கூடத்தில் வழக்கமாக மூலத்தானம் அமைந்திருக்கும் இடத்தில் மிகப் பெரிய புத்த விக்கிரகம் ஒன்று வெகு அழகாக அமைந்துள்ளது. புத்தரைச் சூழப் போதி சத்துவர்கள் நிற்கின்றனர். தீன்தாலில் திறந்த வெளியான திண்ணையும் தூண்களோடு அமைந்த கூடமும் காணப்படுகின்றன. கூடத்தின் பின்கோடிச் சுவர் மிகவும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளோடு மூலத்தானமும் அமையப்பெற்றுள்ளது. மேல்மாடியில் நாற்பத்திரண்டு தூண்களோடு அமைந்த கூடம் வெகு அழகாக இருக்கின்றது. தூண்கள் யாவும் சதுரமாக அமைந்துள்ளன. இவை அளந்து வைத்ததைபோலச் சமசதுரத்தில் இருக்கின்றன. தீன்தாலைக் கட்டிய சிற்பி கூடத்தின் கோடியில் புத்தர் பெருமான் அரியணையில் வீற்றிருக்கும் முறையில் சித்திரித்திருக்கிறுன் : புத்தரின் அரியணையோடு இரண்டு மான்களையும் செதுக்கியிருக்கிறுன்.

பத்தாவது குகை விச்வகர்மாவின் குகை எனப்படும். இதில் காணப்படுகின்ற சிற்ப வேலைகள் ஏழாவது நூற்றுண்டைச் சரர்ந்தவை எனச் சிற்பக்கலைஞர் துணிகின்றனர். சிற்பிகள் இக்குகைக்குள் வெளிச்சம் வருவதற்காகச் சாளரங்கள் அமைத்திருக்கிறுர்கள். இதில் உள்ள ஸ்தூபம் மற்றைக் குகைகளில் இருக்கும் ஸ்தூபங்களைவிடப் பெரிதாக இருக்கின்றது. இங்குள்ள புத்த விக்கிரகமும் மிகப் பெரியது. மரத்திலே சிற்றுளித் தச்சர்கள் செய்யும் வெகு நுட்பமான சிற்ப வேலைகளையெல்லாம் கல்லுளித் தச்சர்கள் குகையின் கற்களில் செய்து காட்டியிருக்கிறுர்கள். இதில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் யாவும் பிற பௌத்தக் குகைகளில் காணப்படுகின்றவைகளைவிட அதிசயமாகவே இருக்கின்றன.

பதின்மூன்றுவது குகை முதல் எட்டுக் குகைகள் இந்து சமயத்தைச் சார்ந்தவை. இவற்றுள் மிகவும்

பெரியவை கயிலாயக் கோயிலும், 'டுமார்லேனு' என்ற குகைக் கோயிலுமேயாம். முப்பதாவது குகையிலிருந்து முப்பத்துநான்காவது குகை முடிய ஐந்து குகைகள் சமண சமயத்தைச் சார்ந்தவை. எல்லோராவிலுள்ள குகைக் கோயில்களை நன்ருக ஆராய்ந்து காணவிரும்பினுல், முதல் நாளில் பன்னிரண்டு பௌத்தக்குகைகளையே பார்க்கமுடியும். ஒரு நாள் முழுவதும் கயிலாயக் கோயிலைப் பார்க்கச் செலவிடவேண்டும்.

இரவிலே எல்லோராவின் அமைதி மனிதரைத் திடுக்கிடச் செய்யும். எல்லோரா என்ற சிறிய குக்கிராமந்தான் இன்று அங்கே எஞ்சி இருக்கிறது. முன்ஞெரு காலத்தில் இங்கே இருந்த மாட்சிமையான நகரம் மறைந்து போயிற்று. நெடுந்தொலைவில் உள்ள குன்றுகளில் வாழும் நரிகள் தாலாட்ட, முஜாபரி பங்களாவில் அயர்ந்து உறங்கலாம். மறுநாள் உதயத்தில் எழுந்ததும், நாட்கடன்களை முடித்துக் கொண்டு, காலை உணவருந்திய பின்பு கயிலாயக் கோயிலைக் காணப் போவதே நலம். எல்லோராவில் அகலியாபாய் என்னும் அரசி கட்டிய கோயில் ஒன்று உளது. அதில் பூசாரியாக இருக்கின்றவனிடம் முன்னரே சொல்லி ஏற்பாடு செய்துகொண்டால், அவன் வேளை தோறும் உணவு ஆக்கிக் கொடுப்பான்.

இரண்டாவது நாள் பார்வையிடப்போகும் பதினேழு குகைக் கோயில்கள், ஏழாவது நூற்ருண்டு முதன் ஒன்பதாவது நூற்ருண்டிற்குள் ஆக்கப்பட்டவை எனத் துணியலாம். இவை இந்து சமயத்தைச் சார்ந்தவை; இராட்டிரகூட மன்னரின் ஆதிக்கம் ஓங்கியிருந்த காலத்தில் உருவாக்கப் பட்டவை. இவ்வரசர் பரம்பரையைச் சார்ந்த ஒரு மன்னனைப் பற்றிய சிலாசாசனங்கள் தசாவதாரம் என வழங்குகின்ற பதினைந்தாவது குகைக் கோயிலிலும், பதினுருவது குகைக்கோயிலாகிய கயிலாயத்திலும் காணப்படுகின்றன. இப்பதினேழு குகைக்கோயில்களிலும் அம்மையப்பரின் உருவங்களைச் சிற்பிகள் செய்து வைத்திருக்கின்றனர். இச்சிலை உருவங்கள் யாவும் அக்

காலத்துச் சிற்ப நூல் இலக்கணத்திற்குப் பெரிதும் பொருத்தமானவை.

பதினன்காவது குகைக் கோயிலில் தூண்களோடு அமைந்த பெரிய கூடம் ஒன்றுளது. இக்கூடத்தின் சுவர்களில் நடராசர், கயிலையங்கிரியைப் பெயர்த்த இராவணன், மாகாளி, திருமால், இலக்குமி முதலிய சிறந்த உருவங்களைச் சிற்பிகள் சிறப்புறச் செதுக்கி யிருக்கிறார்கள். கானகத்தில் உலவுகின்ற கொடிய வேங்கைப் புலியும் தான் ஈன்ற குட்டிக்கு இடர் உறும்பொழுது தன் நிலை மறந்து தன் உயிரைத் துரும்பாய்க் கருதிக் குட்டிகளைக் காக்கத் துணியும். இவ்வாறே உலகிலுள்ள எவ்வுயிரும் தன்னினத்தைக் காக்கும் தாயுள்ளம் பெற்று விளங்குகின்றது. இத்தகைய தாயுள்ளத்தையே நம் முன்னோர் காளி என்னும் சகுணமூர்த்தியாகச் சித்திரங்களிலும் சிற்பங்களிலும் அமைத்துக் காட்டியுள்ளனர். பராசக்தி தன் மக்களுக்குத் தீங்கிழைக்கின்றவைகளை ஒழிக்கும் பொருட்டு மிகக் கொடிய உருக்கொண்டு தோன்றித் தீமையோடு போராடுவாள்.

பதினைந்தாவது குகைக் கோயிலாகிய தசாவதாரக் கோயிலின் சிறு மூலத்தானங்களை உடைய நடுக்கூடம் ஒன்று உளது. இக்குகைக் கோயில் இரண்டு மாடிகளை உடையது. இதில் சைவ வைணவச் சிற்பங்களைக் காணலாம். ஈங்குச் சிவபெருமானைக் காலபைரவனுக் காட்டியிருக்கும் சிற்பம் வெகு கவர்ச்சியானது. இத்தொகுதியைச் சார்ந்த குகைக் கோயில்களில் இராவணனது கோயில் எனப் பெயர்பெறும் இருபத்தோராவது குகைக் கோயிலும், 'டுமார்லேனு' எனப்படும் இருபத்தொன்பதாவது குகைக்கோயிலுமே சிறந்த பொலிவுடையவை. இருபத்தைந்தாவது குகையும், இருபத்தெட்டாவது குகையும் இந்து சமயக் குகைக்கோயில்களில் வெகு புராதனமானவை. இவைகளிலும் இந்த புராணச் சிற்பங்கள் வெகு அழகாக அமைந்திருக்கின்றன. ஈரைந்தலையானது குகைக் கோயிலின்கண் அமைந்துள்ள சிற்பங்கள் நுண்ணிய வேலைபாடுகளோடு திகழ்கின்றன. 'டுமார்

லேணு' என்னும் குகைக்கோயில் நூற்றைம்பது சதுர அடி உடைய பெரிய கூடமாக அமைந்துள்ளது. இதில் தூண் கள் வரிசையாக அமைந்துள்ளன. இதற்குச் செல்லும் மூன்று மணிவாயில்களும் வெகு அழகான சிற்ப வேலைப் பாடுகளோடு திகழ்கின்றன. இக் கோயிலுள் மிகவும் அழகாக அமைந்த மூலத்தானமும் இருக்கின்றது. இதன் இருமருங்கிலும் ஆறு அறுத்த மலைப் பக்கங்கள் காணப் படுகின்றன. இப்பக்கங்களில் கோயிலுக்குள் செல்லும் படிக்கட்டுகளும் வாசல்களும் அமைந்திருக்கின்றன. படிக்கட்டின் வழியாக இறங்கினல் கீழே ஓடும் புண்ணிய நதிக்குச் செல்லலாம். கல்லில் செதுக்கிய சிங்கங்கள் வாசல்களில் காவலாக அமைந்திருப்பதைக் காணலாம். அம்மையப்பர் தம் திருமண விழாவைச் சிற்பி வெகு அழகாக உட்பக்கச் சுவரில் செதுக்கியிருக்கிருன்.

எல்லோராக் குகைக் கோயில்களின் நடுநாயகமாய்த் திகழ்வது கயிலாயக் கோயிலேயாம். இதனைப் பதினாரு வது குகைக் கோயிலாக வரிசை இலக்கம் இட்டுக் குறிப் பிடுவது வழக்கம். இக்கோயில் திருப்பணி முடிவுற்றுப் பதினொரு நூற்றாண்டுகள் கடந்து விட்டன. பூமத்திய ரேகையில் எழுகின்ற கதிரவனின் கொடிய ஒளியாலும் மழைகளாலும் பல்லாண்டுகளாகத் தாக்குண்டபோதி லும், இக்கயிலாயக் கோயில் பழுதுருது இன்றளவும் இருப்பதே இயற்கை அதிசயம் எனலாம்.

எல்லோராவின் குகைக்கோயிலுள், தனி மாண் புடையதாய்க் கம்பீரமான தோற்றத்தோடு திகழ்கின்ற கயிலாயக் கோயிலின்கண் ஆயிரக்கணக்கான சிற்பப் பொலிவுகளைப் பார்க்கலாம். ஈங்குள்ள காட்சிகள் யாவும் காணுந்தோறும் காணுந்தோறும் வியப்பைத் தருபவை. ஒவ்வொரு சிற்ப வேலைப்பாடும் தனித்தனிச் சிறப்போடு அமைந்தது. இவற்றை ஆக்கிய சிற்பியின் ஆர்வத்தை யும் சிற்பக் கலையில் அவர்தமக்கு இருந்த பக்தியையும் ஈங்குள்ள சிற்பங்கள் தெளிவாக எடுத்துக் காட்டு கின்றன.

நாம் கைலாயக் கோயிலில் நுழைந்ததும், முதன்

முதலில் இரண்டு மாடிகளோடு விளங்கும் நந்தி விமானத்தைக் காண்போம். இந்த விமானம் முழுவதும் வெகு உயர்ந்த சிற்ப வேலையின் நுட்பங்கள் நிறைந்துள்ளன. செதுக்கு வேலையும், பிறவும் வெகு கவர்ச்சியாக அமைந்துள்ளன. இந்த விமானத்தின் அடியில் சிவபெருமானது ஊர்தியாகிய நந்தியின் சிலை உருவம் வெகு அழகாக அமைந்துள்ளது. அந்த விமானத்தின் ஒரு பக்கத்தில் நிற்கும் கோபுரத்தையும், மற்றொரு பக்கத்தில் இருக்கும் தலைமைக் கோயிலையும் சேர்த்து இணைக்கின்ற கற்பாலம் ஒன்று அமைந்துள்ளது. கூடத்தின் இருமங்கிலும் ஒரே அளவில் ஒரே அமைப்பாகச் செய்யப்பெற்றிருக்கும் இரண்டு கற்றூண்கள் அழகிய சிற்ப வேலைப்பாடுகளோடு விளங்குகின்றன. இக் கற்றூண்கள் நாற்பத்தொன்பது அடி உயரம் உடையவை. இவற்றின் வடிவ அமைப்பு வெகு நேர்த்தியாக இருக்கின்றது. இவற்றின்மீது சிவபெருமானின் முத்தலைச் சூலங்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு தூணின் அடியிலும் முழு அளவிலே செய்த கல்யானையொன்று நிற்கின்றது. இவை இமய மலையின் கண் இடையறுது கவிகின்ற கார்முகிலைக் குறிக்கின்றதெனச் சிலர் கருதுகின்றனர். இக் கம்பங்களின் இடது பக்கத்தில் கங்காதேவியின் ஆலயம் முற்றுப்பெருதிருக்கின்றது. இவ்வாலயத்ினுள் பலவகைச் சிற்பமாகச் செதுக்கு வேலையுடன் சரஸ்வதி, கங்கை, யமுனை ஆகிய மூன்று நீர்த்தேவியரின் சிலையுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மூன்று திருநதிகளும் இமயக்குன்றுகளினின்று எழுகின்றவையாதலின் தூய நதிகளாக விளங்குபவை. சிற்பி, இத்தூயநதித்தேவியின் சிற்பத்தைச் சூழ்ந்திருக்கும் நெற்றி மாடங்களில் தண்ணீர்த் தொட்டிகளை வெகு அழகாய்ச் செதுக்கியிருக்கிருன்.

சூழவுள்ள சிற்ப அலங்காரக் குவியல்களின் நடுவண் தொண்ணூற்ருறு அடி உயரமுள்ள விமானத்தோடு அமைந்த கயிலாச நாதரது ஆலயம் அமைந்துளது. அக்கோயிலின் விமானத்திற்கு அமைந்த அடிப்பீடம் இருபத்தேழு அடி உயரமுடையது. இந்தப் பீடத்தின் பக்கங்

களில் தந்தங்களையும், துதிக்கைகளையும், தலைகளையும், பாதி உடலையும் வெளியே நீட்டிக்கொண்டு தோளோடு தோள் பொருந்த நிற்கின்ற கல் யானைகள் வரிசையாக அமைத்துள்ளன. கயிலாய விமானம் முழுவதையும் நாற்புறமும் வரிசையாக நிற்கின்ற கல் யானைகளின் முதுகின் மேல் தூக்கி வைத்திருப்பது போன்ற காட்சியைச் சிற்பி காட்டியிருக்கின்றான். இந்த மதகரிப் பீடத்தின் மேல் அமைந்துள்ள கயிலாய விமானம் உலகத்தின் எட்டாவது அதிசயமெனப் புகழ்பெற்றது.

கைலாயக் கோயிலுள் ஐம்பத்து மூன்று சமசதுர அடி அளவுடைய மணிக்கூடமும் கூடத்தின் கூரையைத் தாங்கும் பதினாறு தூண்களும் இடையரு வியப்பை விளைக்கின்ற அரிய பெரிய சிற்ப வேலைப்பாடுகளோடு விளங்குகின்றன. இக்கூடத்தினின்று மூலத்தானத்திற்குச் செல்கின்ற மணிவாயில் முழுவதும் சந்தன மரத்தில் செதுக்கிக் காட்டுகின்ற சித்திர வேலைப்பாடுகளை யெல்லாம் சிற்பி வெகு திறமையாகச் செதுக்கிக் காட்டியிருக்கின்றான்.

அந்த மணிவாயிலைக் கடந்ததும் ஆறு படிகள் இறங்கினால் கயிலாயப் பெருமானார் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் உட்கோயிலின்கட் புகலாம். இந்து சமயக் கோயில்களின் மூலத்தானம் இருள் மிகுந்த சிறு அறையாகவே யிருக்கும். அவ்வாறே இவ்விடத்திலும் மூலத்தானம் அமைந்துளது. இதனுள் சிவலிங்கம் இருப்பதைக் காணலாம். உட்கோயிலின் திண்ணிய ஒற்றைக் கற்சுவர்களின் மீது நடுவிமானம் வெகு மாட்சியான சிற்பப் பதுமைகளோடு அமைந்துள்ளது. கர்ப்பக் கிருகத்தைச் சூழச் சுற்று மண்டபம் அமைந்திருக்கின்றது. இதன்கண் பிள்ளையார், உமையம்மையார், முருகன் முதலியோர் ஆலயங்களும், அவற்றோடு வேறு இரு கோயில்களும் காணப்படுகின்றன. கைலாயக் கோயிலின்கண் சிற்ப நுணுக்கங்களோ, சிலை உருவங்களோ இல்லாத தூணையும் சுவரையும் காணமுடியாது. புராணக் கதைகளைச் சித்திரித்துக் காட்டுகின்ற சிற்பங்களும் தாமரை மலரும், அன்னமும், கிளியும், மயிலும், பல்வகைக் கொடி

களும், தளிர்களும் அமைந்த பொதிகைகளும், தூண் களும், தூண்களின் அடிப்பீடங்களும் உத்தரங்களும் முடிவிலா அலங்காரக் குவியலாக இக்கயிலாயக் கோயிலில் விளங்குகின்றன.

வான்மீகி இராமாயணத்தின் உத்திர காண்டத்தில், பதினாறுவது சருக்கத்தில் இராவணனது திக்குவிசய வர லாற்றின் ஒரு பகுதி சைவசித்தாந்தத்தின்கண் மிகப் பெரிய உண்மையை விளக்கும் திருட்டாந்தமாக அமை வது. இராவணன் கயிலையங்கிரியைப் பெயர்க்க முயன் றதும் சிவபெருமான் காற்கட்டைவிரலால் கயிலையங் கிரியை அழுத்தி அரக்கனது செருக்கை அடக்கியதும் அரக்கனது செயலால் கயிலைக் குன்று குலுங்கியதும் அப் பொழுது ஊடிப் பிரிந்த உமையம்மையார் அஞ்சி ஓடி வந்து இறைவனைத் தழுவியதும், இராவணன் தன் கரங்களில் ஒன்றைப் பெயர்த்து அதில் தன் உடல் நரம்பை இழுத்துக் கட்டி வீணை ஒன்றைச் செய்து சிவபெருமானைப் போற்றிப்பாடி அருள் பெற்றதுமாகிய நிகழ்ச்சிகள் சிற்ப ஓவியக் கலைஞருக்குச் சிறந்த செய்தி களாயின. இந் நிகழ்ச்சிகளைக் கயிலாயக் கோயிலை ஆக் கிய சிற்பியும் இராவணேச்வரனது ஆலயத்தில் வெகு அழகான பலகைச் சித்திரமாகச் செதுக்கி வைத்திருக் கின்றான். இது கண்ணாரக் கண்டு களித்தற்கேற்ற அழகே யன்றிப் புத்தக வாயிலாய்த் தெளிவதற்கமைந்த அழ கன்று.

குறிப்புரை

போதிகைகள் - தூண்மேல் வைக்கும் தாங்கு கட்டை. பிக்ஷுக்கள் - பௌத்தத் துறவிகள். துவார பாலர் - வாயில் காப்போர். ஸ்தூபம் - கோபுரம். ஈரைந்தலையான் - பத்துத் தலைகளுடைய இராவணன். அம்மை யப்பர் - உயிர்கட்குத் தாயுந்தந்தையுமாயுள்ள சிவபெருமான். ஊர்தி - வாகனம். நடுவண் - நடுவில். இடையரு - இடைவிடாத. நெடுந்தொலை - வெகுதூரம்.

பயிற்சி

1. சிற்றுளி, கற்பாலம், கற்றூண்—பிரித்துக் காட்டித் தொடர் இலக் கணமும் கூறுக.

2. இரு மருங்கிலும், தரைமட்டம் நெடுந்தொலை, தன்னினத்தைக் காக்கும் தாயுள்ளம், நடுக்கூடம்—இத்தொடர்களை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

வினுக்கள்

1. எல்லோராக் குகைக் கோயில்களைப் பார்க்கச் செல்பவர் அவ்விடத்தை அடைவது எப்படி?
2. பௌத்தர்களது குகைகளை எவ்வாறு பாகுபாடு செய்யலாம்?
3. சைத்தியங்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன?
4. முதல் ஐந்து குகைகளைப்பற்றி நீவிர் அறிந்ததைக் கூறுக.
5. ஏழு முதல் பத்து வரையுள்ள குகைகளில் காணத்தக்கவை எவை?
6. தீன்தாலின் காட்சிகளைச் சுருக்கி வரைக.
7. விசுவகர்மாவின் குகையின் அமைப்பு எவ்வாருனது?
8. டுமார்லேனு, தசாவதாரக் கோயில், கயிலாயக் கோயில் உலகத்தின் எட்டாவது அதிசயம்—இவைகளின் சிற்பச் சிறப்பைக் கூறுக.

கட்டுரையாக்கம்

'இந்திய சிற்பமும் எல்லோராவும்' என்னும் பொருள் பற்றி ஒன்றரைப் பக்க அளவில் கட்டுரை வரைக.

4. தமிழகத்துக் கோவில்கள்

டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை,
எம்.ஏ., எம்.ஓ.எல்., எல்.டி.

'தமிழகத்தில் இன்றுள்ள கோவில்கள் எப்போது தோன்றின? அவற்றிற்கு மூலம் என்ன? கோவிற்கலை உணர்வு தமிழர்க்கே உரியதா? பண்டைக் காலத்தில் கோவில்கள் எவற்றிற்குப் பயன்பட்டன? நமது கடமை என்ன?' என்பன போன்ற கேள்விகட்கு விடை காணலே இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் நோக்கமாகும்.

கோவிலும் கல்வெட்டும்

"செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவை இல்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திர சித்தன் (மகேந்திர பல்லவன்-அப்பர் காலத்தவன்) அமைத்த கோவில் இது" என்னும் கல்வெட்டு, மண்டபப்பட்டு என்னும் இடத்துக் கோவிலிற் காணப்படுகிறது. இதன் காலம் கி. பி. 615–630 ஆகும். இக் கல்வெட்டால் அறியத்தக்க செய்திகளாவன :

(1) மகேந்திரன் காலத்திற்குமுன் தமிழகத்தில் கற்கோவில்கள் இல்லை. இருந்த கோவில்கள் செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவற்ருல் ஆனவை.

(2) மகேந்திரன் காலத்திற்கு முன்னரே தமிழர் கோவில் கட்டத் தெரிந்திருந்தனர். ஆயின் அவை மண், மரம் முதலியவற்ருலாகி அழியத்தக்கன.

(3) இங்ஙனம் அழியத்தக்க பொருள்களால் அமைத்த கோவில்களையே மகேந்திரன் கற்களில் செதுக்கி அமைத்தனன்.

தரையும் சுவர்களும் செங்கற்களால் ஆனவை. மேற்கூரை மரத்தால் ஆயது. அங்கங்கு இணைப்புக்காக ஆணிகள் முதலியன பயன்பட்டன. இங்ஙனம் இயன்ற கோவில்களை இன்று மலையாள நாட்டிற் காணலாம். இங்ஙனம் கோவில்களை அமைப்பதில் தமிழர் பண்பட்டிராவிடில், திடீரெனக் கி. பி. 7-ஆம் நூற்ருண்டிலிருந்து பல

கோவில்கள் தமிழ் நாட்டில் தோன்றிவிட்டன எனல் பொருளற்றதாய்விடும்.

விமானங்கள், 'தூயது, கலப்பு, பெருங்கலப்பு' என மூவகைப்படும். கல், செங்கல், மரம் முதலியவற்றில் ஒன்றைக் கொண்டே அமைக்கும் விமானம் 'தூய விமானம்' எனப்படும். பல பொருள்களால் அமைவது 'பெருங் கலப்பு விமானம்' ஆகும். இது கட்டடக் கலைநூற் கூற்றுகும். இதனுலும், பண்டைக் காலத்திற் கோவில்கள் இருந்தமையும் விமானங்கள் உண்மையும் அறியலாம்.

இனி, தமிழகத்தில் மகேந்திரனுக்கு முன்பே கோவில்கள் இருந்தமைக்குக் கல்வெட்டுக்களே சான்றுதல் காண்க.

திருக்கழுக்குன்றத்துக்குக் கோவிற் பெருமானுக்குக் கந்த சிஷ்ய பல்லவன் (கி. பி. 436–460) நிலம் விட்டதாகவும் அதனை நரசிம்மவர்மன் தொடர்ந்து நடத்தியதாகவும் ஆதித்தசோழன் கல்வெட்டுக் கூறுகிறது.

'தென்னவனுய் உலகாண்ட' கோச்செங்கணுன் (கி. பி. 450–500) திருவக்கரையில் பெருமானுக்கு ஒரு கோவில் கட்டியிருந்தான்; அதிராசேந்திரன் அதனைக் கல்லாற் புதுப்பித்தான்; செம்பியன் மாதேவியார் திருவக் கரைக் கோவிலைக் கல்லாற் புதுப்பித்தார்; திருக்கோடி காவில் இருந்த செங்கல் விமானத்தையும் கருங்கல் விமான மாக அமைத்தார்.

சங்க காலத்துக் கோவில்கள்

பண்டைத் தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்திலே வீரர் வணக்கத்துக்குரிய கோவில்கள் இருந்தன. முருகன், திருமால், காடுகிழாள் முதலிய தெய்வங்கட்குக் கோவில்கள் இருந்தன. தொகை நூல்களில் சிவபெருமான், முருகன், திருமால் பலராமன் இவர்கள் சிறப்புடைக் கடவுளாகக் கூறப்படுவதை நோக்குக. ஆலமர் செல்வற்கு நீல நாகம் நல்கிய கலிங்கத்தை, ஆய்வேள் அளித்தனன் என்று புறநானூறு புகலல் காண்க. இதனுல் அக் காலத்தில் கோவிலும் கடவுள் உருவச் சிலையும் இருந்

தமை நன்கறியலாம். கி. பி. 2-ஆம் நூற்றுண்டில் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரத்தும் மணிமேகலையிலும் காணப்படும் கோவில்கள் பல. மணிமேகலையில்,

“ காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்
அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
இறந்தோர் மருங்கில் சிறந்தோர் செய்த
குறியவும் நெடியும் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும் ”

என வரும் அடிகள் வீரர், அருத்தவர், அரசர், பத்தினி மார் இவர்க்குக் கோயில்கள் இருந்தமையை வலியுறுத்து கின்றன. சுடுமண் ‘செங்கல்’ கோயில்கள் குன்றுகள் போல உயர்ந்திருந்தன என்பது அறியத்தக்கது.

அற்புத வேலைப்பாடு

இக்கோயில்களும் அரசர் மாளிகைகளும் மண்டபங் களும் சிற்பநூல் வல்லுநரால் நாள் முறித்து, நாழிகை பார்த்து, நேரறி கயிறிட்டுத் திசைகளையும், அத்திசை களில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி வகுக்கப்பட்டன என்பது,

“ ஒருதிறம் சாரார் அரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர் கொப்ப மனைவகுத்து ”

என வரும் ‘நெடுநல்வாடை’ அடிகளாலும்,

“ அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடு சென்று
மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம் ”

என வரும் சிலப்பதிகார அடிகளாலும் நன்குணரக்கிடைத் தல் காண்க.

‘ அரசர் கோயில்களும் தெய்வங்களின் கோயில்களும் சுற்றுமதில் உடையன ; உயர்ந்த வாயில்களைப் பெற்றன; அவ்வாயில்கள்மீது உயர்ந்த மண்ணீடுகள் (கோபுரங்கள்)

உடையன ; அம்மண்ணீடுகளில் வண்ணம் தீட்டப்பெற்ற வடிவங்கள் அமைந்திருந்தன' என்பது மணிமேகலை, மதுரைக்காஞ்சி முதலிய நூல்கள் நுவலும் செய்தியாகும்.

இக்கோயில்கள் அனைத்தும் செங்கற்களால் அமைந்தவை. மேலே உலோகத்தகடுகள் வேயப்பட்டிருந்தன; சாந்து பூசப்பட்டிருந்தது. இங்ஙனமே உயர்ந்த மாட மாளிகைகளும் இருந்தன.

"விண்பொர நிவந்த வேயா மாடம்"
"சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பு"
"நிறைநிலை மாடத்து அரமியந் தோறும்"

இவ்வாறு அமைந்த பெரிய கட்டிடங்களைச் சுற்றியிருந்த சுவர்கட்கு உயர்ந்த கோபுரங்களையுடைய வாயில்களும், அவ்வாயில்கட்குத் துருப்பிடியாதபடி செந்நிறம் பூசப்பட்ட இரும்புக் கதவங்களும் பொருத்தப்பட்டிருந்தன என்பது நெடுநல்வாடை அடிகள் (76, 88) அறிவிக்கும் அரிய செய்தியாகும். சிதம்பரத்தில் பதஞ்சலி முனிவர்க்கு இறைவன் நடன கோலத்தைக் காட்டி அருளினன் என்பது புராணச் செய்தி. பதஞ்சலி முனிவர் காலம் கி. மு. 150 என்று ஆராய்ச்சியாளர் அறிவர். எனவே, கோயில் எனச் சிறப்புப் பெயர் பெற்ற சிதம்பரத்தில் உள்ள திருக்கோவில் கி. மு. 150-க்கு முற்பட்டதாதல் அறிக. அங்குள்ள நடராசர் மண்டபம் மரத்தால் கட்டப்பட்டிருத்தலும் அதன் பழமைக்குச் சான்றாகும்.

கி. பி. 200 முதல் 250-க்குள் தமிழகத்தை யாண்ட கோச்செங்கட் சோழன் 70 கோவில்கள் கட்டியதாகத் திருமங்கையாழ்வார் கூறியுள்ளார். அவர்க்கு முன்னரே அப்பரும் சம்பந்தரும் இதனைத் தம் பதிகங்களிற் குறித்துள்ளனர்.

தேவார காலத்துக் கோயில்கள்

தேவார காலத்தில் தமிழகத்தில் ஏறத்தாழ 200 கோவில்கள் இருந்தன. அவை அனைத்தும் மரம், செங்கல், மண், உலோகம் இவற்றால் ஆனவை. அவை (1) பெருங்கோவில் (2) இளங்கோவில் (3) மணிக்கோவில்

(4) கரக்கோவில் (5) தூங்கானை மாடம் முதலிய பல வகைப்படும். இவற்றுள் தம் காலத்தில் பெருங்கோவில்கள் 78 இருந்தன என்று அப்பரே அறைந்துள்ளார். பெரிய கோவில்களைப் பழுது பார்க்குங்கால் மூர்த்தங்களை எழுந்தருளச் செய்து வந்துள்ள (பெரிய கோவில் திருச்சுற்றில் உள்ள) சிறிய கோவிலே இளங்கோவில் எனப்படும். பெரிய கோவிலுக்கு அண்மையில் உள்ள சிறிய கோவிலும் இளங்கோவில் எனப் பெயர் பெறும். எனவே, தேவார காலத்திற்கு முன்பே பல கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன என்பது தெளிவாகிறதன்றோ? தேவார காலத்தில் விமானம் கொண்ட கோவில்கள் இருந்தன என்பது பெண்ணுடகம், தூங்கானை மாடம் கோவில்களின் அமைப்பைக் கொண்டு நன்கறியலாம். விமானம் 'தூங்கும் யானை' வடிவில் அமைந்ததாகும். திரு இன்னம்பர், திருத்தணிகைக் கோவில் விமானங்கள் இம்முறையில் அமைந்தவை. திரு அதிகைக் கோவில், திருக்கடம்பூர் (இவற்றின் உள்ளறைகள் மூலஸ்தானம்) தேர் போன்ற அமைப்பு உடையவை; உருளைகளும் குதிரைகளும் பூட்டப் பெற்றவை. திருச்சாய்க்காட்டுக் கோவிலை ஒட்டித் தேர் போன்ற விமானம் ஒன்று உருளைகளுடன் உள்ளது.

பழைய கோவில்கள்

இந்த விமான அமைப்புடைய தேர் போன்ற கோவில்களே பழையவை. இன்று காணப்படும் கோவில்களை அடுத்துள்ள தேர்கள் மிகப்பழைய காலத்தில் மரக் கோவில்களாக இருந்தவை. மனிதன் மரக்கோவில்களைப் போலச் செங்கற்களைக் கொண்டு பிற்காலத்தில் கோவில்களை அமைத்தான். சான்றாக, நகரியில் உள்ள சில கோவில்களைக் காணலாம். அவை கி. மு. 250-இல் ஆக்கப்பட்டவை. அவற்றைச் சுற்றிக் கற்சுவர்கள் உள்ளன. ஆயின், கோவில்கள் மரத்தால் கட்டப்பட்டவையேயாகும்.

மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் கோவில்கள் எல்லாம் பல்லவர் காலத்தில் இருந்த தமிழ்நாட்டுக்

கோவில்களைப் போன்றவையே என்பதைப் பார்த்தவுடன் கூறிவிடலாம் என அறிஞர் லாங்ஹர்ஸ்ட் குறித்தல் காண்க.

திராவிடக் கலை

கோவில் கட்டுதல் திராவிடரது பழக்கம் ஆகலாம். அதனைப் பிற்காலத்தில் ஆரியர் கைக்கொண்டனர். தூபி, சைத்தியம் என்பன திராவிடருடையன. இவற்றை ஆரியர் கடன் பெற்றனர். இவை பிற்காலத்தில் இந்து சமயக் கோவில்களிற் காணப்பட்டன. இவற்றையே பௌத்தர் மேற்கொண்டனர். விமான வகைகள் பல தென் இந்தியாவில் உண்டு. அவை யாவும் கல்லரைகளிலிருந்து தோன்றின என்பது தவறாகாது. தென் கன்னடக் கோட்டத்தில் உள்ள 'முதுபித்ரி' என்னும் இடத்திற் காணப்படும் குருமார் கல்லறைகளில் மூன்று முதல் ஏழு அடுக்குகள் கொண்ட விமானம் காணலாம். சதுரத்தின்மேல் சதுரம் வைத்துக் கட்டப்பட்ட ஏழு அடுக்குகள் கொண்ட சதுரக் கல்லறைகள் பல இந்நாட்டில் உண்டு. இவ்வமைப்புக்கள் நாளடைவில் பெரிய விமானங்களாக மாறிவிட்டன என்பதில் ஐயமில்லை.

தென்னாட்டுக் கட்டடக்கலை தமிழகத்துக்கே உரியது. இன்றுள்ள வானளாவிய கோபுரங்கள் விமானங்கள் இவற்றிற் காணப்படும் வேலைப்பாடுகள் அனைத்தும் இந்நாட்டுப் பழைய வேலைப்பாடுகளிலிருந்து வளர்ச்சியுற்றனவே ஆகும். இந்த வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக உண்டானவை. மனிதக் குரங்கின் மண்டை ஓட்டிலிருந்து இன்றைய மனிதனது மண்டை ஓடு வளர்ச்சியுற்றாற் போலவே தமிழகக் கட்டடக் கலையும் வளர்ச்சி பெற்று வந்ததாகும். இதன் உண்மையை மாமல்லபுரத்துத் தேர்களைக் கொண்டும், திருப்பாதிரிப் புலியூரில் உள்ள சிவனார் கோவில் வேலைப்பாட்டைக் கொண்டும் செவ்வனே அறியலாம்.

கோயில்கள் பயன்பட்ட வகை

(1) சங்ககாலத்துக் கோவில்கள் அழியக் கூடிய பொருள்களால் ஆனவை. ஆதலால் நமக்குக் 'கல் வெட்டுகள்' கிடைக்கவில்லை. பின்வந்த பல்லவர் கற் கோயில்கள் அமைத்தனர். ஆதலின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அவர்க்குப் பின் வந்த சோழர் பழைய கோவில்களைக் கற்கோவில்களாக மாற்றினர்.

ஆதலின் அழியா நிலையுடைய கல்வெட்டுகள் தோன் றின. அவை கோவில் அறப்பணிகளைக் குறிக்க எழுந் தன. ஆயினும் அரசர் மரபு, போர்கள், அரிய செயல்கள் இன்ன பிறவும் முதலில் பொறிக்கப்பட்டிருந்தன. அக் குறிப்புக்களே இன்று தமிழக வரலாற்றிற்கு அடிப்படை யாக இருந்து உதவுகின்றன.

(2) கோயிலை அடுத்துச் சமய வளர்ச்சிக்குரிய மடங் கள் இருந்தன. அவை சமயக் கல்வியைப் புகட்டின. விழாக்களைக் காணவந்த அடியார்கட்கு உண்டியும் உறை யுளும் உதவின. அம்மடங்கட்குப் பலர் தானம் அளித் துப் பாதுகாத்துவந்தனர்.

(3) கோவிலை அடுத்து மருத்துவச் சாலை இருந்தது. இதனை தஞ்சாவூர்ப் பெரிய கோவில் கல்வெட்டால் அறியலாம்.

(4) நடனம், இசை, நாடகம் முதலிய நாகரிகக் கலை கள் கோவில்களில் வளர்க்கப்பெற்றன. இவற்றில் பண் பட்ட பெண்மணிகள் இருந்தனர். அவர்கள் அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர், உருத்திர கணிகையர் எனப்பட்டனர். தஞ்சைப் பெரிய கோவிலில் மட்டும் 400 பேர் இருந்தனர். காஞ்சி முத்தீசுவரர் கோவிலில் 42 அடிகள்மார் இருந்தனர். பெருங்கோவில்களில் எல்லாம் நடன அரங்கு, இசை அரங்கு, நாடக அரங்குகள் இருந்தன.

(5) கோவிலில் 'தருக்க மண்டபம்', 'பிரசங்க மண் டபம்' என்பனவும் இருந்தன என்பதைத் திருவொற்றி யூர்க் கோவிற் கல்வெட்டுக் கொண்டு அறியலாம். பாரதம், ஆகமம் போன்ற நூல்களைப் பொதுமக்கட்குப்

படித்துக் காட்டக் கோவில்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறிப்புரை

பெருங்கணி - தலைமை நிமித்திகன். கோட்டம் - கோயில். வண்ணம் - நிறம். நிவந்த - உயர்ந்த, நெடு நல்வாடை - எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. மூர்த்தங்கள் - விக்கிரகங்கள். ஆலமர் செல்வர் - கல்லால விருக்ஷத்தினடியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். கலிங்கம் - ஆடை. காடமர் செல்வி - துர்க்கை, காளி.

பயிற்சி

1. இப்பகுதியில் கோயிலாகக் குறிக்கப்பட்டவற்றின் பெயர்களைக் குறிக்க.

2. மணிமேகலை, நெடுநல்வாடை, பூங்கோயில், கோச்செங்கணன்—குறிப்பு எழுதுக.

வினாக்கள்

1. மண்டப்பட்டுக் கல்வெட்டால் நாம் அறியத்தக்கவை யாவை?
2. விமானங்களின் வகைகளும், அவற்றின் அமைப்பும் எவை?
3. தமிழகத்தில் மகேந்திரனுக்கு முன்பே கோவில்கள் இருந்தன என்பதற்குச் சான்று தருக.
4. மகேந்திரனுக்கு முற்பட்ட காலத்துக் கோயில்கள் எவ்வாறு அமைந்திருந்தன?
5. தேவாரக் காலத்துக் கோயில்களைப்பற்றி நீவிர் அறிவதென்ன?
6. சங்க காலத்துக் கோயில்களைப்பற்றிச் சுருக்கி வரைக.

கட்டுரையாக்கம்

'திராவிடக்கலை' என்பதுபற்றி ஒரு பக்கத்தில் கட்டுரை எழுதுக.

5. பத்திரிகையின் செய்திகளும் கருத்துக்களும்

'சுதேசமித்திரன்' பத்திராதிபர்,
திரு. ஸி. ஆர். ஸ்ரீனிவாசன், பி. ஏ.

தினசரிப் பத்திரிகையைப் புரட்டுவோருக்கு அதன் பொருளடக்கம் பழக்கமானது. பத்திரிகையின் சரக்கு செய்தியே; அதுவே பத்திரிகையின் ஜீவநாடி. செய்திப் பத்திரிகை (நியூஸ் பேப்பர்) என்ற பெயர் பிறந்ததும் இதன் பொருட்டே. இப்பெயருக்குச் செய்திகளை அறிவிக்கும் பத்திரிகை என்பது பொருள்.

செய்தியின் குணங்கள்

ஆனால், 'செய்தி' என்பது என்ன? இதற்கு விளக்கங்கள் பலவிதம்; தெளிவுதான் தோன்றவில்லை. சொல்லின் முழுப் பொருளை அலசி அதற்குச் சகல விதத்திலும் சரியான விளக்கம் வெளிவரவில்லை. ஒரு அடிப்படை வியாக்கியானம், செய்தியாக எவைகளைச் சொல்லக்கூடுமோ அவை யாவும் செய்தி என்று கூறுவது. இது வீணான வியாக்கியானம்; ஏனென்றால் எல்லாவிதச் செய்திகளும் செய்திகளாகா.

செய்திகளுக்கு மதிப்பு எவ்வாறு உண்டாகின்றது? பொதுப்படையாக, இரண்டு அம்சங்கள் செய்திக்கு மதிப்பைக் கொடுக்கின்றன; அவை கவர்ச்சி முக்கியத்துவம் என்ற இரண்டுதான். யாரைக் கவர வேண்டும்? எப்படி முக்கியத்துவத்தை அளவிடுவது? விசாலமான வாசகர் குழாத்திடையே பத்திரிகைகள் புழங்குகின்றன. இந்தக் கூட்டத்திற்குக் கவர்ச்சியும் முக்கியத்துவமும் பொருந்திய விஷயங்களே நம் அளவுகோல்கள். பத்திரிகைதோறும் அதன் சூழ்நிலைக்கும் சந்தாப் பரப்புக்கும் ஏற்றவாறு, அளவுகோல்கள் மாறுதல் அடையலாம். வர்த்தகத்தைப் பற்றிய பத்திரிகை விளையாட்டைப்

மொழிபெயர்ப்பாசிரியர், திரு. ஜெ. பார்த்தசாரதி, எம். ஏ.

பற்றிய செய்திகளை விவரிக்காது. தேசம் முழுவதும் போகும் பத்திரிகை பிரதேசவாரிச் செய்திகளுக்கு அதிக இடம் அளிப்பது அரிது. இன்று, செய்திப் பத்திரிகை நடத்துவதில், சுவையுள்ள செய்திகளைச் சேமிப்பதற்கும், பத்திரிகைப் பத்திகளைப் பங்கிடுவதற்கும் படும்பாடு பெரி தாகிவிட்டது. உற்பத்தி யம்சம் தொழில் முழுவதையும் விழுங்கும் அளவுக்கு விரிந்துவிட்டது. காரணம் பத்தி ரிகை பல வகுப்பினரையும், பல தேவைகளையும் திருப்தி செய்து சந்தா எண்ணிக்கையில் கண்ணும் கருத்துமாய் இருப்பதே.

அநுபவமுள்ள ஆசிரியன் தான் கையாளும் செய்தி களில் கவர்ச்சியும் முக்கியத்துவமும் பொருந்தியவை களைப் பார்த்தவுடனேயே புரிந்துகொள்ளுகிருன். பிறவிக் குணங்களுடன் ஒன்ருக இச்செயற்கைக் குணம் சமைந்து விடுகின்றது. ஆசிரியனின் நீலப் பென்ஸில் கையெழுத் துப் பிரதிகளின்மேல் குறிதவருத கூர்மையுடனும் இயந் திர வேகத்துடனும் ஓடுகிறது. செய்திகளின் இரு குணங் களும் அவைகளைப் பத்திரிகைகளின் பக்கங்களுக்கும் பத்திகளுக்கும் ஏற்றவாறு பிரித்து விடுகின்றன. தரா தரத்தையும் சமய சந்தர்ப்பத்தையும் ஒட்டி, செய்திகள் பத்திகளின் மேலும் கீழும் சென்று சேருகின்றன. திருவாங்கூர்ப் பத்திரிகை யொன்றையும், சென்னைப் பத்திரிகை யொன்றையும் ஒப்பிடுங்கள். அல்லது ஒரே பதிப்பின், முன் பின் பிரசுரங்களைப் பாருங்கள். நான் கூறியதற்குப் பிரத்யக்ஷப் பிரமாணம் காணலாம்.

செய்தி ஸ்தாபனங்கள்

செய்தியென்பது உத்தரவின்பேரில் உற்பத்தியாகக் கூடிய ஆலைப் பொருளோ அல்லது இஷ்டப்படி விலைக்கு வாங்கக்கூடிய பண்டமோ அன்று. பல இடங்களி லிருந்தும் சேகரிக்கப்பட்ட சம்பவங்களின் பதிவுதான் அது. நியூஸ் அல்லது செய்தி என்ற சொல் இதற்கேற்பப் பொருள் செய்யப்பட்டிருக்கிறது. 'N. E. W. S.' என்ற நான்கு எழுத்துக்களும் நான்கு திசைகளையும் (வடக்கு,

கிழக்கு, மேற்கு, தெற்கு) குறிக்கும். இவ்வெழுத்துக்களைக் கொண்ட சொல்லின் பொருள் நான்கு திசைகளிலிருந்தும் திரட்டப்படுவது என்பதுதான்.

செய்தியைச் சேகரிக்க, நிருபர்களை ஒவ்வொரு பத்திரிகையும் உலகம் முழுவதும் அனுப்புவது அசாத்தியம். பத்திரிகைகளுக்குச் செய்தியளிக்கும் தேவை தீர, செய்தி ஸ்தாபனங்கள் தோன்றின. இந்த ஸ்தாபனங்களில் நம் தேசம் வரை, மிகக் கீர்த்திபெற்றது, ராய்ட்டர்ஸ்தான். ஆரம்பத்தில் ராய்ட்டர்ஸ் பத்திரிகைச் சேவைக்குரிய ஸ்தாபனமாகத் தோன்றவில்லை என்பது ருசிகரமானவிஷயம். இந்தஸ்தாபனத்தின் ஆரம்பகர்த்தா ஜுலியஸ் ராய்ட்டர் என்பவராவார். தொழிலைத் துவக்கியதின் காரணம், பண மார்க்கெட்டுச் செய்திகளைப் பணக்காரர்களுக்குப் பரப்புவதுதான்; பத்தொன்பதாம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் பிறந்த இந்த ஸ்தாபனத்தின் மூலம் பொதுவாகப் பத்திரிகைகளுக்கு உண்டாகக்கூடிய வசதிகளை ராய்ட்டர் உணர்ந்தார். வாசகர்கள் ரசிக்கக் கூடிய செய்திகளைத் திரட்டப் புதுச் சங்கம் ஏற்படுத்தினர்; பிரெஞ்சு ஹாவாஸ், ஜெர்மன் உல்ப் என்பவர்களுடன் ஐரோப்பாவைச் செய்திகளுக்காக வளையமிட்டார். ஐரோப்பாக் கண்டத்தார்களுக்கு உலகம் முழுவதிலும் உறவு உண்டு. ஸ்தாபனம் விஸ்தாரமாகிக் கொண்டு வந்தது; காலப்போக்கில் கௌரவமடைந்தது.

பொறுப்பு மிகுந்தது செய்தியளிக்கும் சேவை. செய்தியின் மூலாதாரம் சந்தேகத்துக்குச் சற்றும் இடமின்றி இருக்கவேண்டும். இதற்குரிய வாய்ப்புக்கள் ராய்ட்டர் ஸ்தாபனத்துக்குக் கிடைத்தன. ஸ்தாபகர் குடும்பம் இறந்த பிறகுதான் ஸ்தாபனத்தை நடத்துவதற்கு ஒரு டிரஸ்டு ஏற்பட்டது; இப்பொழுது இந்த டிரஸ்டை, ஆங்கிலப் பத்திரிகைகளின் கூட்டுச் சங்கமான 'இங்கிலாந்து பிரஸ் சங்கம்' வாங்கிவிட்டது. உலகத்திலேயே இன்று மிகச் சிறந்த செய்தி ஸ்தாபனம் ராய்ட்டர்ஸ். அதன் பிரதிநிதிகள் இல்லாத இடமில்லை; குறிப்பிட்ட பிரதேசங்களில் விசேஷ செய்தி ஸ்தாப

னங்கள் சேகரிக்கும் செய்திகளை உபயோகிக்கும் உரிமையும் அதற்கு உண்டு.

அயல்நாட்டுச் செய்திகளை இன்றுவரை நமக்கு ராய்ட்டர் ஸ்தாபனமே அளித்து வந்தது. சமீபகாலத்தில் அதன் பேரில் அதிருப்தி; செய்திகள் குறைவு, தேசீய நோக்கம் அற்றவை என்ற எண்ணம் தோன்றியது. செய்திகளைப் பொறுக்குவதிலும் பரப்புவதிலும் ஆங்கில சாம்ராஜ்ய நிலைக்குப் பரிவு; இந்திய இஷ்டங்களுக்குப் புறக்கணிப்பு. காரணம் எதுவாயிருந்தாலும், கசப்பு இருந்ததால், பத்திரிகைகள் ராய்ட்டர்ஸுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களில் ஏகபோக உரிமையைக் கொடுக்கத் தயங்கின; அமெரிக்க யுனைட்டெட் பிரஸ் போன்ற போட்டி ஸ்தாபனங்களைப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்தன. ஆனால், இவைகளுக்கு ராய்ட்டர்ஸுடன் சமவசதிகள் இல்லாததால் சேவையின் தரம் ஓங்கக்கூடவில்லை. இன்றுவரை கனவாக இருந்த ஒரு புதுச் செய்தி ஸ்தாபனத் திட்டம் நனவாகிவிட்டது; செய்திச் சேவை குறைபாடுகள் நீங்கும் என நம்பவும் இடம் உள்ளது. இந்தியப் பிரஸ் டிரஸ்டு என்ற பெயருடன் இந்தியப் பத்திரிகைகளின் கூட்டுச் சங்கம் ராய்ட்டர்ஸின் இந்தியக் கிளையே வாங்கிவிட்டது. இதன் மூலம், சுதேசப் பத்திரிகைகளுக்குச் செய்திகளை உருவாக்க வாய்ப்பு உண்டாகிவிட்டது.

உள்நாட்டுச் செய்திகளைப் பரப்பும் ஸ்தாபனம், நம் தேசத்தில், இந்த இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் தான் ஏற்பட்டது. 'அசோஸியேடட் பிரஸ் ஆப் இந்தியா' என்று பெயர் பெற்ற ராய்ட்டர்ஸுக்குச் சொந்தமான சங்கந்தான் பலம் பெற்ற முதல் ஸ்தாபனம். இன்று இந்திய பிரஸ் டிரஸ்டு என்று தேசீய பத்திரிகைச் சங்கம் அசோஸியேடட் பிரஸின் உள்நாட்டுச் செய்திச் சேவையையும் கூட மேற்கொண்டுள்ளது முன்னேற்றத்திற்கு நல்ல அறிகுறி.

அசோஸியேடட் பிரஸ் ஆரம்பித்த விவரம் கேட்க அருமையானது. இந்திய கவர்மெண்டின் தலைநகரில்

சர்க்கார் செய்திகளைச் சேமிப்பதற்கு, முக்கிய பத்திரிகைகளின் விசேஷ நிருபர்கள் வேலைபார்த்து வந்தனர். பயோனீர் பத்திரிகை சலுகை மிகுந்திருந்தது அக்காலத்தில்; சிம்லாவில் இருந்த அதிகாரிகள் அதற்கு உதவி வந்தனர். இதனால், செய்திகள் பரப்புவதில், இப்பத்திரிகை நிருபர் மற்றப் பத்திரிகைக்காரர்களுக்கு எப்பொழுதும் ஒருபடி மேலேயே சென்றார்.

போட்டியில் தோல்வியுற்ற, 'இங்கிலீஷ்மன்', 'ஸ்டேட்ஸ்மன்', 'இந்தியன் டெய்லி நியூஸ்' என்ற பத்திரிகைகளின் நிருபர்கள் ஒன்று கூடி, பலம் திரட்டி, ஒரு புதுச் செய்தி ஸ்தாபனத்தைப் பிறப்பித்தார்கள். முதன்முதலில் தங்கள் பத்திரிகைகளுக்கு மாத்திரம் செய்திகள் என்ற தடை ஏற்பட்டது. அடுத்தபடியாக ஸ்தாபனத்துக்குச் சந்தா செலுத்தியவர்களுக்கும் செய்திகள் செல்ல ஆரம்பித்தன. இந்த முயற்சியில் முக்கியஸ்தர்கள் பக், கோட்ஸ், கே. ஸி. ராய் என்போர். ஸ்தாபனம் மதிப்பையும் முதன்மையும் பெற்றது ராயின் நுட்ப அறிவினால்தான். ஆரம்பத்தில் முதலிருவரும் ராயைக் குழிபறிக்கப் பார்த்தார்கள்; கடைசியில் அவருடன் சேர்ந்து செல்வதின் சிறப்பை உணர்ந்தார்கள். பக், கோட்ஸ் தொடங்கிய சங்கம், ராய்ட்டர்ஸ் ஸ்தாபனத்தால் வாங்கப்பட்டது; செல்வாக்கும் சக்தியும் அசோஸியேடட் பிரஸைப் பெருக்கி நிரந்தரமாக்கின.

நன்றாக அமைக்கப்பட்ட அசோஸியேடட் பிரஸ் அரசாங்க உதவியும் பெறவாரம்பித்தது. அடிமை நாட்டில் அரசாங்க உதவியை மக்கள் விபரீதமாக வியாக்கியானம் செய்வது சுலபம். தடையற்ற சுதந்திரச் செய்தி ஸ்தாபனங்களை நிறுவத் தனிப்பட்டோர் முன்வந்தனர். ஆனால் இந்த முயற்சிகள் நிரந்தரமாவதற்குப் போதிய பத்திரிகை ஆதரவு இல்லை. பிரீ பிரஸ் செய்திகள் ஆரம்பத்தில் நேர்மை பெற்று விளங்கின. ஆனால் முதலாளிகள் கெடுத்தார்கள் இந்த ஸ்தாபனத்தை; லாபத்திலும் பிரசாரத்திலும் அவர்கள் கவனம் சென்றது. செய்திகள் நடுநிலைமை இழந்து கெட்டன. இந்த க்ஷீண நிலையில்

யுனைடெட் பிரஸ் தோன்றியது; ஆனால் தேசீய நோக்குடன் சேவை புரியும் துணை ஸ்தாபனமாக இது நின்றுவிட்டது; விரிவு பெற்ற சங்கமாக ஆசை கொள்ளவில்லை. ஓரியண்ட் சர்விஸ் என்னும் ஸ்தாபனம், முஸ்லிம் கண்களுடன் செய்திகளைப் பொறுக்கிப் பரப்ப ஏற்பட்டுள்ளது. இச் சிறிய ஸ்தாபனங்களின் வரவினால் அசோஸியேடட் பிரஸின் மதிப்பும் சேவையின் தரமும் உயர்ந்துவிட்டன; விந்தையான விளைவு!

நிருபர்கள் சேவை

பத்திரிகைச் செய்திகளில் பெரும்பாகம் செய்தி ஸ்தாபனங்களிலிருந்து வருவது. இச்செய்திகளுக்கு இரண்டு முக்கியமான குறைகள்; ஒன்று, சந்தாதாரர்கள் எல்லோருக்கும் சமமான சேவை; போட்டியிடும் பத்திரிகைகளுக்குள் ஒன்றுக்கு மற்றொன்றைக் காட்டிலும் விசேஷ வசதியில்லாதது. இரண்டு, செய்திகள் பரிமாறுவதில், சுவையோ அல்லது உயிர்க்களையோ இல்லாதது. எல்லாப் பத்திரிகைகளுக்கும் பயன்பட வேண்டிய செய்திகள் இப்படி இருப்பதுதான் இயல்பு. குறைகளை நீக்குவது எப்படி?

பத்திரிகைக்குப் பத்திரிகை வேறுபாடு, ஓரளவு பொது விஷயங்களைப்பற்றிய அபிப்பிராய பேதங்களையும் கருத்து வேற்றுமைகளையும் பொறுத்தது. ஆனால், முக்கியமாகச் செய்திப் பத்திரிகைகள் விஷயத்தில், செய்தி விஸ்தரிப்பிலும் வெளியீட்டிலுந்தான் வித்தியாசம் புலனாகும். வித்தியாசம் மிக நுட்பமானது; அற்பமானதும் கூட. ஆனால், அர்த்தமற்றது என்று அலட்சியம் செய்ய முடியாதது. தனிப்பட்ட நோக்குடன் செய்திகளைத் திரட்டவேண்டும். செய்தி ஸ்தாபனங்களிலிருந்து வரும் பொதுப்படை விவரங்களை விஸ்தரித்துச் சூழ்நிலையை விளக்கவும் வேண்டும். இக்காரணங்கள் பொருட்டு, பத்திரிகைகள் சந்தர்ப்பத்திற்கேற்ப, சொந்த நிருபர் கூட்டத்தை வைத்துக்கொள்வது வழக்கம்.

பிரபல ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு, இங்கிலாந்தின்

முக்கிய நகரங்களில் நிரந்தர நிருபர்கள் உண்டு. இது மட்டும் அன்று. உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் நிருபர்கள் அமர்த்தப்பட்டிருக்கிருர்கள். இங்கிலாந்தின் பொருளாதார, அரசியல் உறவுகள் உலகம் முழுவதும் பின்னிக் கிடப்பதால், இந்தத் துணைச் சேவைக் கூட்டத்தாரின் தேவை சொல்லாமலே விளங்கும். நம் நாட்டுப் பத்திரிகைகள் இவ்வளவு தூரம் முன்னேற்றமடையவில்லை. இங்கிலாந்தில் நடக்கும் சம்பவங்களும் சக்திகளும், நம் நாட்டைப் பாதிப்பவை. இதனுல் நமது பத்திரிகைகளில் சிலவற்றிற்கு லண்டன் நிருபர்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இதற்கு அடுத்தபடியாகப் பத்திரிகைகளுக்குக் கிடைக்கும் பேருதவி, மாகாணத் தலைநகர்களில் விசேஷ நிருபர்களை அமர்த்துவதே. மேற்கொண்டு, மாகாணச் செய்திகளைத் திரட்ட, பத்திரிகைகள் சொந்த நிருபர்களை வைத்துக் கொள்ளுகின்றன. சென்னை மாகாணத்தில் இம் மாதிரி நிருபர்களுக்குத் திரட்டப்படும் செய்தியளவின் பேரில் ஊதியம் அளிப்பது வழக்கம்.

பத்திரிகைகளின் பணக்கஷ்டம் பலவிதம். மிகச் சிறந்த பத்திரிகைகளின் சந்தா எண்ணிக்கை பத்தாயிரக் கணக்கில்தான்; இன்னும் லட்சத்தை எட்டிப் பார்க்கவில்லை. இந்தியாவோ பரந்த தேசம்; இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் எட்டமுடியாத பிரதேசங்களில் எந்தப் பத்திரிகைக்கும் வியாபகம் இருப்பது அரிது. பத்திரிகைகள் பெரும்பாலும் குறிப்பிட்ட எல்லைகளைக் கடந்து, பரந்த பிரதேசங்களிலே சந்தாவை நோக்கி நிற்கின்றன. முட்டுப்பாடுகள் மிகுந்த வியாபகத்தினுல், வரும் குறுகிய லாபத்தில், விசேஷ நிருப சேவையைப் பத்திரிகைகள் அமைத்திருப்பது ஆச்சரியமே.

முப்பது வருஷங்களுக்குமுன் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது, மாகாண நிருபர்களின் பிழைப்பு சீரடைந்து விட்டது கண்கூடு. ஒரு காலத்தில் கட்டுரைகளுக்கு ஊதியம் கொடுப்பது என்பது விதி விலக்கு. விஷயத்தைத் தானுகவே அளித்தார்கள்; அளித்தவர்கள் ஊதியத்தை எதிர்பார்க்கவும் இல்லை. பெரிய மனிதர்

களாக இருந்தால் பிரசுரம் பெறுவதே போதிய வருமானம். சம்பளத்துக்கு வேலை செய்வோராக இருந்தால் வேலை செய்யுமிடத்தில்தான் சம்பளம் கிடைக்குமே! இயற்கை யறிவு படைத்த சிலர், சொந்த நலனுக்காக, பத்திரிகை களுடன் 'நிருபர்' என்ற தொடர்பை வைத்துக்கொண் டார்கள். இந்தச் சம்பந்தம், மக்களை மயக்கி, லாபம் பெற உதவியது. செய்திகள் கொடுப்பதற்கு மட்டும் அல்ல, அவைகளை மறைப்பதற்கும் பணம் பெற்ருர்கள். அதனுல், செய்திகளும் மனம் போனவாறு புரண்டன. சிற்சில சமயங்களில், இந்த ஒழுங்கற்ற ஒழுக்கம் பற்றிய புகார்களும் பத்திரிகை ஆபீசுகளில் புகுந்துவிடும். பத்திரிகைத் தலைமைக் காரியாலயஸ்தரோ, தகராறுகளில் தலையிட அதிகாரம் அற்றவர்கள். பெருத்த மானக்கேடு விளையாதவரை, குருட்டுக் கண்ணுடன் பார்த்ததும் பாராததுமாய் இருந்தார்கள். நிலைமை, சென்ற இருபத் தைந்து வருஷங்களில் மாறிவிட்டது; இன்று செய்திப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் செய்திகளில், ஊதியம் பெறுதவை வெகு சொற்பம்.

நிருபர்களின் தகுதிகளும் பயிற்சியும்

நிருபர்களுக்கு ஊதியம் அளித்தது, செய்திச் சேவை யில் சீர்திருத்தமும் கட்டுப்பாடும் கொண்டுவந்தது. ஆனுல் முழுவதும் திருப்திகரமான நிலை இன்னும் ஏற்பட வில்லை. ஆனுல் ஒன்றுமட்டும் நிதரிசனமான உண்மை. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிருபர்களின் செய்திகளில் விஷமமோ பக்ஷபாதமோ கிடையாது. தெரியாமல் தவறு செய்பவர்கள் காலக்கிரமத்தில் குற்றத்தை உணர்ந்து, அதிகப் பொறுப்புடன் பணி செய்வது சகஜம். நிரந்தர நிருபர்கள்தான் கௌரவத்திற்குக் காரணம் என்பதைப் பத்திரிகைகளும் உணர்ந்து விட்டன. நிருபர்கள் உழைப்பு, கண்களும் கைகளும் உதவும் உதவி போன்றது.

முன்போலன்றி, இந் நாட்களில் நிருபர்களின் வேலை வசதிகளில் பத்திரிகைகள் கருத்தும் கவனமும் காட்டு கின்றன. பொறுப்புள்ள சேவை வேண்டுமென்ருல்,

தகுதியும் ஒழுக்கமும் உள்ளவர்களே அமர்த்தவேண்டும் என்ற உணர்ச்சி தோன்றிவிட்டது. பழைய காலத்தில் நிருபராகப் புகலிடம் பெற்ற 'உதவாக்கரை'களுக்கு இப்பொழுது இடமே கிடையாது. வாழ்க்கையில் எந்தத் துறையிலும் வெற்றி பெறுவதற்கு வேண்டிய தகுதிகள் பத்திரிகைத் துறையில் பன்மடங்கு தேவை என்பது என் அநுபவ சிந்தாந்தம். இதுமட்டும் அன்று. பத்திரிகைத் தொழிலில் வெற்றி பெறுபவன் மற்றத் துறைகளிலும் வெற்றி பெறுவது நிச்சயம்.

பத்திரிகைத் தொழிலைச் சிறப்பாகக் கூறுவது 'மிகை படக் கூறல்' ஆகாது. பத்திரிகைக்காரனின் வாழ்க்கை சோதனைகள் நிறைந்தது; அதில் தப்பிப் பிழைத்து வெற்றி பெறுபவன் சிறந்த பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். சம்பளம் சொற்பம். ஆனால் சில கௌரவங் கள் உண்டு. எங்குச் சென்றாலும் நல்ல உபசரிப்பு. ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் விரும்பியழைக்கப்படும் விருந்தாளி. ஆனால் நகைச்சுவையுடைய ஆசிரியன், ஏதோ மாய விருந்துக்குச் செல்வதுபோல் நினைக்கக் கூடும். வாழ்க்கையில் சிறந்த சம்பவங்கள் அவன் இழந்த சிறப்புக்களை நினைவூட்டுகின்றன. பிறர் பெருஞ் செயல் களை எழுதும்போது, தான் பறிகொடுத்த பெருமையைப் புரிந்து கொள்ளுகிறான். அரசியல் நாடக அரங்கின் பக்கங்களில்தான் அவனுக்கு முதல் இடம். சமூக வாழ் விலோ, பின்னணியில் உட்காரவேண்டும். லாப நஷ்டத் திற்கு ஈடே இல்லை. பத்திரிகைக்காரனுக்கு உறுதியும் ஆறுதலும் அளிக்கக்கூடிய தியாக புத்தி மிகத் தேவை. உழைப்புடன் தியாகத்தையும் புகுத்தி, உயர்ந்த பயிற்சி கொடுக்கக்கூடிய துறை பத்திரிகைத் தொழிலைப்போல் வேறு கிடையாது.

பத்திரிகை நிருபர்கள், ஓரளவு பிரயாசைப்பட்டால், தொழிலின் நடைமுறை நுட்பங்களை உணருவது எளிது. சிறந்த நிருபராவதற்கு இது மாத்திரம் எப்படிப் போதும்! திறமையற்ற நிருபர், பத்திரிகைக்குப் பெரும் பாரம் என்று சொல்லவேண்டாம். எல்லா நிரந்தர நிருபர்க

ளுக்கும் பத்திரிகைத் தலைமைக் காரியாலயத்தில் குறைந்த பட்சம் மூன்று மாதமாவது பயிற்சி யளிப்பது நலம். இப்பயிற்சி, தலைமைக்காரியாலய நோக்குடன் செய்திகள் சேமிக்க உதவும். தொழிலில் 'புதிதாகச் சேருவோருக்கு நடைமுறைகளைக் கற்பிக்கும்; பிழைகளைத் திருத்த அடி கோலும்.'

செய்திப் பிரசுர விந்தை

செய்திச் சேமிப்புக்குத் திரும்பவும் நாம் செல்வோம். பத்திரிகாலயத்தில், ராய்ட்டர்ஸிலிருந்தும், அசோஸியேடட் பிரெஸிலிருந்தும் (இனி, இந்தியப் பிரெஸ் டிரஸ்டிலிருந்தும்) வரும் செய்திகளைத் தூரத் தந்தியச்சுக்கருவி, பதிவு செய்து கொள்ளுகிறது. மற்றச் செய்தி ஸ்தாபனங்களிலிருந்து வேறு விஷயங்கள் வந்து சேருகின்றன. நிரந்தர நிருபர்களின் செய்திகளைத் தந்திகளும் டெலிபோன்களும் அறிவிக்கின்றன. தினசரித் தபால் தூரப் பிரதேசங்களிலிருந்து, இரண்டாந்தரமான செய்திகளைக் கொண்டுவருகிறது. தலைநகரில் திரியும் நிருபர்கள் நாள் முழுதும் அவ்வப்பொழுது சேமிக்கும் சமாசாரங்களைக் கொடுத்த வண்ணமாயிருக்கிறார்கள். இவை யெல்லாம் போதாவென்று கவர்மெண்டு ஆபீஸ், கம்பெனி போன்ற பலதிறப்பட்ட இடங்களிலிருந்து, உத்தியோகஸ்தர்கள் 'கிடைத்த பிரசாரம் லாபம்' என்று விளம்பரத் தாள்களைத் தள்ளுகிறார்கள். செய்திக் குவியல், தினந்தோறும் மலைபோல் குவிகிறது. குப்பையை உடனே கவனித்தாக வேண்டும். ஆறின கஞ்சி பழங்கஞ்சி. பத்திரிகையிலோ செய்திகள் மேலும் மேலும் வந்து விழுகையில், இருப்பிடம் சுருங்கிக் கொண்டே வருகிறது. இங்கிலாந்தில் செய்திக் குவியலின் அளவு உத்தேசம் ஒரு நாளைக்குப் பதினைந்து லக்ஷம் வார்த்தைகள். இடமென்னவோ, ஐம்பதினாயிரம் வார்த்தைகளுக்குத்தான்.

இப்பொழுது, பத்திரிகாசிரியர் வேலையின் இயல்பு உங்களுக்கு ஒருவிதமாக விளங்கியிருக்கும். விஷயங்களைப் பொறுக்கிச் சுருக்கமாகப் பரிமாறும் திறமை

மிகுந்த அநுபவத்தின் பேரில்தான் கைகூடுவது. ஒன்றுக் கொன்று ஒவ்வாத பிரச்னைகளைப் பிணைக்கவேண்டும்; சண்டையிடும் சக்திகளைச் சமமாகச் சீர்தூக்கி இணைக்க வேண்டும். இவை யெல்லாவற்றிலும் பெரிய காரியம், பிரசுரத்தால் வரும் பேராபத்துக்களைத் தவிர்ப்பது. பத்திரிகைப் பிரசுரம் காலத்தோடு போட்டியிடவேண்டி யிருப்பதால், காரியாலயங்கள் யாவும் சக்கரம் போல் சுழன்று கொண்டிருக்கின்றன. விஷயங்களுக்கு ஏற்ற இடமும் பத்தியும் அமைத்துக் கொடுப்பது, படங்களைத் தயாரித்துத் தலைப்பு எழுதுவது முதலிய காரியங்கள் இயந்திர வேகத்துடன் நடைபெறுகின்றன. போக்கு வரவு சௌகரியம், செய்திகளின் முக்கியத்துவம் முதலிய வற்றை அநுசரித்து அநுதினமும் பத்திரிகைப் பதிப் புக்கள் வெளிவருகின்றன. தபாலைத் தவற விடாமல் இருக்கவேண்டு மென்றால் மணிக் கணக்குத் தப்பாமல் பதிப்புக்கள் பிறந்தாக வேண்டும். செய்திப் பத்திரிகா லயம் வேலைசெய்யும் நெருக்கடி நிலையைச் சிந்தனை செய்து பாருங்கள். உருவான பத்திரிகை ஓர் உற்பத்தி விந்தை என்பதை யார் மறுக்கமுடியும்? குறையே அற்ற நிலையில் பத்திரிகைத் தாள்கள் இல்லை என்பது உண்மை. ஆனால், அந்த நிலையை நெருங்கி விட்டதாகக் கூறலாம். இன்னும் ஒரு விஷயம் நம் கவனத்துக்குரியது. மனித சாதுரியத்தால், எவ்வளவு அபிவிருத்தி அடையமுடி யுமோ, அவ்வளவு அபிவிருத்தியையும் பத்திரிகைக் கலை பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

செய்தியறிவிப்பின் துணை வேலைகள்: கருத்துக்கள்

செய்திப் பத்திரிகை கொடுப்பன யாவும் செய்தி யாகவே இருப்பதில்லை. செய்தியைத் தவிர, செய்தியை ஒட்டியும், செய்தியிலிருந்து பிறப்பதுமான மற்றப் பொறுப்புக்கள் பத்திரிகைகளுக்கு உண்டு. பொதுஜன அபிப்பிராயத்தை சிருஷ்டி செய்து, சீருடன் விளங்கச் செய்வது பத்திரிகை. அதனைக் கண்ணாடிபோல் பிரதி பலிக்கிறது பத்திரிகை; அதற்கேற்ப, தன்னையும் மாற்றி

யமைத்துக் கொள்ளுகிறது. செய்தியளிக்கும் முக்கிய சேவையிலிருந்து நேரடியாகத் தோன்றும் துணை வேலைகளே இவைகள். முக்கியத்துவம் வாய்ந்த செய்தி பிரசுரமாகும் பொழுது, பத்திரிகை அதற்கு விளக்கமொன்றையும் கொடுக்கிறது. இதனால் வாசகர்கள், செய்தியின் உண்மை மதிப்பை அறிந்து அளவிட உதவி பெறுகிறார்கள். செய்தித் தாளில் ஆசிரியர் அபிப்பிராயங்களை அனுமதிப்பதும் இதன் பொருட்டே. தவிர செய்திகளைப் பற்றி வாசகர்கள் கருத்துக்கள் கடிதமூலம் கிடைக்கின்றன. பல முறைகளில் விசேஷப் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களைக் கொண்டு, அன்றாடச் செய்திகளுடன் இணைத்து, எழுதச்சொல்லவும் வேண்டியிருக்கிறது. இவர்கள் எழுதுவதைக் 'கட்டுரைகள்' என்று சொல்லுகிறோம். பிரத்தியேகப் பதிவு உரிமை இல்லாவிட்டால் மற்றப் பத்திரிகைகளிலும், வாசகர் நன்மைக்காக இக் கட்டுரைகள் இடம் பெறலாம்.

செய்திப் பத்திரிகையில், சாதாரணமாகச் சேர்க்கப் பட்டுள்ள விஷயங்கள் பலவகைச் செய்தி, ஆசிரியர் கருத்து, கடிதப் போக்குவரத்து, (வேறு பத்திரிகைகள், புத்தகங்களிலிருந்து) பெயர்க்கப்பட்டவை என்ற இனங்களில் அடங்கும். கருத்து எவ்விடத்திலிருந்து எழுந்தது என்பதைக்கொண்டு, இவ் வினங்களை வேற்றுமைப் படுத்தலாம். ஆசிரியரால் கருத்து வெளியிடப்பட்டால், 'தலையங்கம்' ஆகிறது; வாசகரிடமிருந்து வெளிவந்தால், கடிதப் போக்குவரத்தாகிறது; விசேஷ அறிஞரிடமிருந்து வந்தால், கட்டுரையாகிறது. மூலம் எதுவாயிருந்தாலும், கருத்துக்கள், செய்திகளுக்குப் பின்னதாகத்தான் பிறக்கின்றன. அப்படியென்றால், பத்திரிகை முதலில் செய்தித் தாளாகத் தினந்தோறும் வெளி வந்ததாகவும், பின்னர், திட்டப்படி கருத்துக்கள் சேர்க்கப்பட்டன என்றும் எண்ணக் கூடாது.

கருத்து—செய்திப் போட்டி

செய்திப் பத்திரிகை உயிர் பெற்றபோது, வெறும் கருத்துப் பத்திரிகையாகவும் பிரசாரத்துக்குரிய துண்டுப் பிரசுரமாகவும் இருந்தது. குறிப்பிட்ட காலந்தோறும் பிரசுரிக்கப்படும் பழக்கம், பத்திரிகைக்கு நிரந்தரத்தை நிறுவியது. காலம் மாறி, தேவைகள் விரிந்து, பத்திரிகை உயர்ந்துவிட்டது; ஆரம்பத்திலிருந்த அபிப்பிராயங்கள் காலச் சக்கரத்தில் சிக்கிக்கொண்டு விட்டன. பத்திரிகையின் பரப்பும் வழங்கப்படும் விஸ்தீரணமும் கொஞ்சங் கொஞ்சமாக விரிவடைந்தன. நகரத்திலிருந்து ஜில்லாவுக்கும், மாகாணத்திற்கும், தேசம் முழுமையும் பத்திரிகை சென்றது. வளர்ச்சி விரிவுடன், தனிப் பிரதேசங்களில், செலாவணிப் பெருக்கமும் பெற்றது. மேல் வகுப்பினரிடமிருந்து, நடுத்தர வகுப்பினர் கைகளுக்கு நழுவியது. ஓய்வுள்ள வகுப்பினரிடமிருந்து உழைக்கும் மக்களுக்கு எட்டியது. இந்த அடிப்படை வளர்ச்சியில், கருத்துக்களைக் காட்டிலும் செய்திகள் முக்கியத்துவம் பெறுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. பத்திரிகைச் செய்திகளும் விஸ்தாரம் பெற்றன. கருத்துக்களோ, செய்தி விஸ்தரிப்புடன் போட்டியிட வழியில்லை. கருத்துக்களின் இடத்தைப் படிப்படியாகச் செய்திகள் அபகரித்துக் கொண்டன. இப்புரட்சியைப் பற்றிய இரண்டு அம்சங்கள் கவனிக்க வேண்டியவை. ஒன்று, முன்போல் ஆசிரியர், பத்திரிகையின் முழு ஆட்சியையும் தன் கைகளில் வைத்துக் கொள்வது அசாத்தியம். இரண்டு, ஆசிரியனின் வேலையை இன்று, வெவ்வேறு விசேஷ அறிவுபடைத்த கூட்டத்தார்கள்தான் உண்மையில் நடத்துகின்றனர். தனி ஆசிரியனுக்கு, பல திறப்பட்ட விஷயங்களைப்பற்றித் தானே எழுதக் கூடிய வல்லமையும், அவகாசமுமிருப்பது அருமை.

ஆசிரியனின்றிப் பத்திரிகை நடப்பது எப்படி என்று ஆச்சரியப்படுவோர்க்கு, மர்மம் இப்பொழுது விளங்கக் கூடும். பத்திரிகாலயத்தில் ஆசிரிய பீடத்தில் அமருபவர்க்கு உள்ள புதுப் பெயர், ‘நிருவாக ஆசிரியர்’. பத்தி

ரிகையின் செய்திகளேயும் தொழில் முறையையும் சேர்த்துக் கவனிப்பது அவர் கடமை என்று எண்ணலாம். அவருடைய வேலே சுலபமல்ல என்று நான் சொன்னுல், நம்புங்கள். இவ்வேலேயில் வெற்றி பெறுவோர்க்கு எவ்வளவு கௌரவம் கொடுத்தாலும் தகும்!

குறிப்புரை

வியாக்கியானம் - விவரித்துக் கூறுதல். குழாம் - கூட்டத்தார். பிரத்தியக்ஷப் பிரமாணம் - காட்சியளவையால் மெய்ப்பித்தல். முட்டுப்பாடு - இடர். வியாபகம் - பரவுதல். கண்கூடு - காணக்கூடிய உண்மை. புகலிடம் - அடைக்கலம்.

பயிற்சி

1. சொந்த வாக்கியங்களில் அமைக்கவும் :—ஜீவநாடி, சந்தா, நீலப் பென்ஸில், நிருபர், வாய்ப்பு, அறிகுறி, கண்கூடு.

2. பொருள் கூறுக :—துணே ஸ்தாபனம், நிரந்தர நிருபர், உதவாக்கரை, தராதரம்.

விஞக்கள்

1. செய்திகளுக்கு மதிப்பைக் கொடுப்பவை எவை?
2. ராய்ட்டர்ஸ் ஸ்தாபனத்தைப் பற்றிச் சுருக்கமாக வரைக.
3. அசோஸியேடட் பிரஸ் எவ்வாறு தோன்றியது? அதன் மதிப்பும், சேவையின் தரமும் எவ்வாறு உயர்ந்தன?
4. முப்பது வருஷங்களுக்கு முன்னிருந்த நிருபர்களுக்கும், இப்போதுள்ள நிருபர்களுக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன?
5. செய்திகளேப் பிரசுரிப்பதில் பத்திரிகை ஸ்தாபனங்களுக்கு உள்ள கஷ்டங்கள் யாவை?
6. எவ்வகை விஷயங்கள் பத்திரிகைகளில் இடம்பெறுகின்றன?
7. பத்திரிகையின் ஆசிரியரை இப்போது நிர்வாக ஆசிரியர் என்றழைக்கக் காரணம் என்ன?

கட்டுரையாக்கம்

1. இருபரின் வேலேகள். 2. செய்திப் பிரசுரம். 3. இந்திய பிரஸ் டிரஸ்டு—இவை ஒவ்வொன்றையும் பற்றி ஒவ்வொரு பக்க அளவில் கட்டுரை வரைக.

6. வெற்றிலே

வித்துவான் திரு. தே. வீரராகவன், எம். ஏ.

ஓர் இனத்தாரிடையே காணப்படும் பழக்க வழக்கங்களே அவர்களின் சரித்திரத்தையும் நாகரிகப் பண்புகளேயும் அறிந்து கொள்வதற்கு உதவும் அளவுகோலாகும். மனித சமூகம் வளர்வதுபோல் சரித்திரமும் பண்புகளும் அதனுடன் வளர்ந்து கொண்டே வரும். ஆதலால் அவைகளும் ஜீவனுடையனவே. நம் நாட்டிலே, சிறப்பாகத் தமிழ் நாட்டிலே, வெற்றிலே சுவைக்கும் வழக்கம் எல்லாச் சாதியார்களிடமும், எல்லாச் சமயத்தார்களிடமும் பரவியிருப்பதைப் பார்த்தால், சாதி சமய வேறுபாடில்லாமல், அனைவரையும் ஆட்கொள்ளும் ஒரு கவர்ச்சி இதனிடம் இருப்பது புலப்படுகிறது.

வெறும் இலேதான் வெற்றிலேயாயிற்று. வெறுமை என்ற பண்புப் பெயர் இலே என்ற சொல்லுடன் பண்புப் பெயருக்குக் கூறப்பட்டுள்ள விதிப்படி புணர்ந்து வெற்றிலேயாயிற்று என்று தமிழ் இலக்கணம் கூறும். 'தனிமை' என்ற பொருளில் 'வெறும்' என்ற சொல் வழங்கப்படுவதற்கு வெற்றிலே ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். இன்றும் உலக வழக்கில் "வெறும் சோறு மட்டும் உண்டேன்", "இன்று வீட்டில் வெறுஞ் சாறு தான்" என்று வழங்குவதிலிருந்தும் வெறுமை என்ற சொல்லுக்குத் தனிமை என்ற பொருள் இருப்பதை அறியலாம். பூ, காய்களின்றித் தனித்த இலேயாயிருத்தல் பற்றி இவ்விலேக்கு வெற்றிலே யென்று பெயர் வந்தது என்று கூறுவர். இது தனித் தமிழ்ச் சொல்.

தமிழர் சமூக வாழ்விலே வெற்றிலேப் பழக்கம் எப்போது ஏற்பட்டது என்று அளவிட்டுக் கூற முடியாவிடினும், இது தமிழ் நாட்டுக்கே உரிய பழக்கமாயிருக்கலாம் என்று ஊகிக்கப் பல சான்றுகள் இருக்கின்றன. குச்சு வீடு முதல் மச்சு மாளிகை வரையிலும், ஆண்டிவாய் முதல் அரசன் வாய் வரையிலும், பிறப்பு முதல் இறப்பு

வரையிலுள்ள மங்கல அமங்கலச் சடங்குகளிலும் இந் நாட்டில் வெற்றிலே பரவியிருப்பதும், வெற்றிலேயின்றி வாழமுடியாத சோழ நாட்டவரும், மலேயாளிகளும் பல லக்ஷக் கணக்கில் இருப்பதும் இதன் பிறப்பிடத்தை ஒரு வாறு துணிந்தறிய உதவும்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் திகழ்ந்த கடைச் சங்க காலத்தில் கூட இந்தப் பழக்கம் மிக்கிருந்ததென்பதற்கு இலக்கியங்கள் சான்று கூறு கின்றன. பத்துப் பாட்டில் ஒன்ருகிய பட்டினப்பாலே யில், அதன் ஆசிரியர் உருத்திரங்கண்ணனுர், புகார் நக ரில் பல்வகைக் கொடிகள் பறந்த மாடங்களேக் குறிப் பிட்டு வரும் பகுதியில் "பாகுகுத்த மஞ்சிகை" என்று சில மாடங்களேக் குறிப்பிடுகின்ருர். அதற்கு உரைகாரர் நச்சினுர்க்கினியர், "பாக்கு வெற்றிலே சொரிந்த கட்டி டம்" என்று பொருள் கூறுகிருர். மதுரைக் காஞ்சி என்ற மற்ருெரு சங்கப்பாட்டில் மாங்குடி மருதனுர் என்ற புலவர் மதுரை நகர வீதியில் வெற்றிலே, பாக்கு, சுண் ணும்பு விற்கப்பட்ட செய்தியை,

"தகைசெய் தீஞ்சேற்று இன்னீர்ப் பசுங்காய்
நீடுகொடி இலேயினர் கோடுசுடு நீற்றினர்"

என்று குறிப்பிடுகிருர். இதற்கு உரையாசிரியர், "உடம்பிற்கு அழகைக் கொடுக்கும் இனிய கருங்காவி சீவிக் காய்ச்சின களிக் கலந்த இனிய நீரினேயுடைய பசிய பாக்குடனே வளர்ந்த கொடியீன்ற வெற்றிலேயினே யுடையாரும், சங்கு சுடுதலால் உண்டான சுண்ணும் புடையாரும்" என்று உரை வரைகிருர். கழாத்தலேயார் என்னும் மற்ருெரு கடைச் சங்கப் புலவர், புறநானூற் றில் 62-ஆம் பாடலில், "கணவனே இழந்த மகளிர் வெற் றிலே சாப்பிட மாட்டார்கள்; குளிர்ந்த நீரில் மூழ்கமாட் டார்கள்" என்று பொருள்படும்படி

"......பெண்டிரும் பாசடகு மிசையார்; பனிநீர் மூழ்கார்"

என்று வெற்றிலே சுவைக்கும் வழக்கம் இருந்ததைப் பற்றிச் சொல்கிருர். சங்க காலத்துக்கு அணித்தாக எழுதப்பட்ட சிலப்பதிகாரத்திலே, இந்திரவிழவூரெடுத்த

காதையில் புகார் நகரிலுள்ள பல வீதிகளைப் பற்றியும் கூறிக்கொண்டு வரும் இளங்கோவடிகள்,

"பாசவர், வாசவர், மைந்திண
விளைஞரொடு...... இருக்கையும்"

என்று கூறும் பகுதியில் பாசவர் என்ற சொல்லுக்கு "வெற்றிலை கட்டுவார்" என்று அரும்பத உரையாசிரியரும், "இலையமுதிடுவார் (இலையமுது - வெற்றிலை) என்று அடியார்க்கு நல்லாரும் உரை எழுதுகிறார்கள். அதே நூலில் ஊர்காண் காதையில் "தமனிய அடைப்பை" என்று ஆசிரியர் கூறுவதற்கு, "பொன்னாற் செய்த வெற்றிலைப் பெட்டி" என்று அரும்பதவுரைகாரர் எழுதுகிறார். கொலைக்களக் காதையில்,

"உண்டினி திருந்த உயர்பெய ராளற்கு
அம்மென் றிரையலோ டடைக்கா யீந்த"

என வருகிறது. அதாவது "உண்டிருந்த கோவலனுக்குக் கண்ணகி அழகிய மெல்லிய திரையலுடன் (வெற்றிலைச் சுருளுடன்) பாக்குக் கொடுத்த" எனக் குறிப்பிடுவதும் கருதத் தக்கது.

திருமால், சிவன் கோயில்களுக்கு நிபந்தங்கள் ஏற்படுத்திய தமிழ் மன்னர்கள் வெற்றிலைப் பாக்குக்கென்றே தனி நிபந்தங்கள் ஏற்படுத்தியிருந்த செய்தி கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. அடைக்காய் (அடை - இலை, காய் - பாக்கு), இலையமுது, வெள்ளிலை அமுது என்ற சொற்றொடர்களால் கல்வெட்டுக்களில் வெற்றிலையும் பாக்கும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஏழாம் நூற்றாண்டில் இருந்தவராகக் கருதப்படும் நம்மாழ்வார், திருவாய் மொழியில் திருக்கோளூர்ப் பதிகத்தில், "உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையுமெலாம் கண்ணன் எம்பெருமான் என்றென்றே" என்று குறிப்பதிலிருந்து அக்காலத்திலும் இறைவனுக்கு இலையமுது படைக்கும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. வெற்றிலைப் பாக்குப் போட்டதால் சுரக்கும் எச்சிலை உமிழப் பெரிய இடங்களில் "காளாஞ்சி" என்ற வட்டில் இருந்தது.

"மின்வட்டச் சுடராழி வேங்கடக் கோன் தானுமிழும்,
பொன் வட்டில் பிடித்துடனே புகப் பெறுவேன்"

என்று குலசேகரர் கூறுகிருர்.

மனித சமூகத்துக்கு வெற்றிலே புரியும் பலவித உதவிகளேக் கருதித்தான் அதை மங்கலப் பொருள்களில் சிறந்ததாக வைத்தனர் போலும். தொடக்க காலத்தில் தனித்த வெற்றிலே ஒரு மூலிகையாகக் கருதப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. நீர்க் கோவையைக் கெடுத்து, வாதத்தைப் போக்கி, மந்தத் தைத் தடுத்து, அஜீரணத்தை எடுத்து, கபத்தை அறுத்து, சுறுசுறுப்பைக் கொடுத்து குருதியோட்டத் தைத் துரிதப்படுத்தி உடல் வளர்ச்சியை அளிக்கும் ஒரு சிறந்த பொருள் வெற்றிலே" என்று வெற்றிலேயைப் பற்றி ஒரு மருத்துவர் எழுதியிருக்கிருர். தேள் கடி போன்ற சாதாராண நஞ்சுக்கு மாற்ருக வெற்றிலேச் சாறு கொடுக்கப்படுவது கிராம மக்களுக்குத் தெரியும். மருந்துப் பொருளாக இருந்த வெற்றிலேதான் பின்பு இன்ப மூட்டும் பொருளாக மாறி, உண்ட பிறகு பாக்கு, சுண் ணும்பு, இலவங்கம், ஏலக்காய் முதலிய பொருள்களுடன் இப்போது உண்ணப்பட்டு வருகிறது. உண்ட பிறகு வெற்றிலேச் சுருளே மெல்லுவதால் உண்டாகும் மணம் வாய்க்கு ஒரு தனி இனிமையைத் தருகிறது. வெற்றிலே சுவைத்த பின்பு உள்ளத்தில் உண்டாகும் இன்பத்தை வெற்றிலே சுவைப்பார் அனேவரும் அறிவர். "இந்தியர் கள் சாராயத்துக்குப் பதில் போதை தரும் ஒரு பொரு ளாக வெற்றிலேயை உண்டபின் உபயோகிக்கின்றனர். வெற்றிலே போட்டுக்கொள்வதால் மூளே வேகமாக வேலே செய்கிறது; அறிவு வளருகிறது; கவலே நீங்குகிறது" என்று ஓர் அராபிய நூலாசிரியர் எழுதுகிருர்.

ஸுச்ருதர் என்ற ஒரு பண்டைய மருத்துவப் புலவர் தாம் எழுதியுள்ள ஒரு நூலில், "உண்டபிறகு வெற் றிலே போட்டுக் கொள்வதால், பற்களுக்கு அடிப்பாகத் தில் உள்ள பள்ளங்களிலும் இடுக்குகளிலும் புகுந்து கொண்டிருக்கும் அழுக்கால் உற்பத்தியாகும் பூச்சிகள்

கொல்லப்படுகின்றன" என்று வரைந்திருக்கிறார். பிராகிருத மொழியிலுள்ள புத்த ஜாதகக் கதைகளிலும், வடமொழியிலுள்ள ஹிதோபதேசத்திலும் வெற்றிலையின் உபயோகம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் எந்தச் சிறிய மங்கலச் சடங்கும் வெற்றிலை இல்லாமல் தொடங்கவும் பெறாது; முடியவும் பெறாது.

ஔரங்கசீப் மன்னர் பாரசீகத்துக்குத் தூதனுப்பிய போது, அந் நாட்டு மன்னர்க்குத் தம் அன்பின் அறிகுறியாக அங்குக் கிடைக்காத வெற்றிலையும் மாங்கனியும் அனுப்பியதாகச் சரித்திரம் குறிப்பிடுகிறது. பதினாறும் நூற்றாண்டில் விஜய நகரத்துக்கு வந்த தோமிங்கோஸ் பேஸ் (Domingos Paes) என்பவர், அந்த நகரத்து மக்களில் பெரும்பாலோர் வெற்றிலை சுவைப்பதில் பேரார்வம் காட்டியதாக எழுதியிருக்கிறார். வெற்றிலை வாங்கிக் கொள்வதற்கு ஏற்படும் செலவிற்காக ஒவ்வோர் இஸ்லாமியப் பெண்ணுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மகமதியச் சட்டத்தில் பெண்களுக்கு ஓர் உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறதாம். வெற்றிலை கொடுக்கும் விஷயத்தில் வங்காளத்தில் ஒரு வேடிக்கையான பழக்கம் இருக்கிறதாம். அதாவது ஒரு பீடா (வெற்றிலைச் சுருள்) கொடுத்தால் அது சாதாரண மரியாதையையும், இரண்டு பீடாக்கள் கொடுத்தால் அது விசேஷ மரியாதையையும், வெற்றிலைத் தட்டை அப்படியே கொடுத்தால் அது பேரன்பையும் தனிப்பட்ட மரியாதையையும் குறிக்குமென்று அந் நாட்டுப் பழக்கமறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஒரே தட்டிலிருந்து வெற்றிலையை எடுத்துப் போடுவது ஒரு தன்மையான நிலையையோ நேசத்தையோ காட்டுமென்று இன்னும் நம்மவர் கருதுகின்றனர்.

ஆங்கில ஆட்சி இந்நாட்டில் ஏற்படுவதற்கு மூன்று நான்கு நூற்றாண்டுகட்கு முன்பு, இங்கு வந்து போன மேல் நாட்டாரில் சிலர் நம்மிடையே காணப்படும் வெற்றிலைப் பழக்கத்தைக் குறித்துப் பல சுவையான குறிப்புகளை எழுதி வைத்திருக்கிறார்கள். ஹீரட்டைச் சேர்ந்த அப்துல் ரசாக் என்பவரை விஜயநகர மன்னன் வெற்றிலையும் கர்ப்

பூரமும் கொடுத்து வரவேற்ருனும். " ஐரோப்பிய மன்னர் களிடமிருந்து பெறும் வீரப் (Knighthood) பட்டத்தைப் போன்ற சிறப்புடையதாகும், இந்திய மன்னர்களிட மிருந்து வெற்றிலே பெறுவது" என்று தாமஸ் பௌரி (Thomas Bowrey) என்ற மற்ருெரு யாத்திரிகர் குறிப்பிடு கிருர். இவற்றையெல்லாம்விட அலேக்சாந்தர் ஹாமில்டன் (Alexander Hamilton) என்பவர் கூறும் வரலாறு சற்று விசித்திரமாக இருக்கிறது. 1694-ஆம் ஆண்டில் ஹாமில் டன் கடார நாட்டு (Kedha) மன்னரைக் காணச் சென்ரு ராம். அம்மன்னர் ஹாமில்டனேத் தம்மருகில் உட்கார வைத்து அவருக்கு மரியாதை காட்டும் முறையில் தாம் தின்று கொண்டிருந்த வெற்றிலேயை ஒரு பொற் கிண் ணத்தில் உமிழ்ந்து அதை 'மரியாதையுடனும்' அடக்கத் துடனும் ஹாமில்டனே உண்ணும்படி செய்தாராம். அரசர் உண்டு உமிழ்ந்த தம்பலத்தை உண்பது அரசரால் மிகுதியும் பாராட்டப்படும் ஒரு செயலாக இருந்ததாம்.

தூக்கிலிடப்படுவதன் முன்னர்க் கொலேக் குற்றவாளி களுக்கு வெற்றிலே பாக்குக் கொடுக்கும் வழக்கம் நீண்ட காலம் இந்நாட்டில் இருந்து வந்ததாம். சிறையில் அடை பட்டுக் கிடப்போருக்கு மலேரியா போன்ற நச்சுக் காய்ச் சல்கள் வராமலிருக்கும் பொருட்டு நெதர்லாந்து அர சாங்கம் கைதிகளுக்கு வெற்றிலே கொடுத்து வந்ததாம். மலேயா நாட்டில் சண்டையிட்டுக் கொண்ட இருவர் தங்க ளுக்குள் வெற்றிலே மாற்றிக் கொண்டால் சமாதானமாகப் போய்விட்டதாகக் கருதுவாராம். ஒன்றைப் பற்றித் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளும் இருவர் முடிவில் தங்களுக்குள் வெற்றிலே மாற்றிக் கொள்ளும் பழக்கம் இன்னும் நம் நாட்டில் உண்டல்லவா?

வெற்றிலேயைப் பற்றிச் சில மூடக் கொள்கைகளும் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. சைனுக்காரர்கள் வெற் றிலேயை ஒரு பொழுதும் இடது கையால் வாங்கமாட்டார் களாம். மதுரையை ஆண்ட அரசி மங்கம்மாள் ஒரு சமயம் வெற்றிலேயை இடது கையால் எடுத்துவிட்ட குற்றத்துக்காகக் கழுவாய் பல செய்து நோன்பு நோற்ற

தாக அவள் சரித்திரம் கூறுகின்றது. மலையாள நாட்டில் இழிவர் என்ற இனத்தாரிடையே ஒரு பழக்கம் இருக்கிற தாம். அதாவது சூல் கொண்ட ஒருத்திக்கு இன்ன குழந்தை பிறக்கும் என்பதை அறிய அக்குலத்தில் மூத்தாள், ஒரு வெற்றிலையை எடுத்து அதன் மேல் எண் ணெயை வார்த்து அந்த வெற்றிலையைக் கர்ப்பிணி உந்தி மேல் பிடிக்க எண்ணெய் எந்தப் பக்கம் வழிந்தோடு கிறதோ அதிலிருந்து இன்ன குழந்தைதான் அவளுக்குப் பிறக்கும் என்று கூறிவிடுவாளாம்!

வெற்றிலை வியாபாரத்தில் அரசாங்கத்துக்கு நல்ல வருமானம் பழங்காலத்திலிருந்து வந்ததாகத் தெரிகிறது. வெற்றிலை விற்போருக்கு வரி விதிக்கப்பட்டிருந்ததைப் பண்டை நூல்களிலிருந்து அறியலாம். பதினாறும் நூற் றாண்டில், கிழக்கிந்தியக் கம்பெனி, இந்திய மன்னர்களிட மிருந்து வெற்றிலை வியாபாரத்தைத் தனிச் சலுகையாகப் பெற்றுக் கொண்டது என்று போர்த்துகீசிய அதிகாரி ஒருவர் எழுதியுள்ளார். கிழக்கிந்தியக் கம்பெனியில் வேலை பார்த்து வந்த ஆங்கிலேயர்களின் சொந்த வருமா னத்தைப் பெருக்க, 1765ஆம் ஆண்டில், கிளைவ் வங்கா ளத்தில் ஒரு வியாபாரக் கழகத்தை ஏற்படுத்தி அதன் மூலமாய் வெற்றிலை, உப்பு, புகையிலை முதலியன விற்று லாபம் பெற உரிமை கொடுத்திருந்த வரலாறும் இங்கு நினைவுகூரத் தக்கது.

தமிழ் நாட்டில் வெற்றிலைப் பயிர் செய்வதற்கென்றே ஓர் இனத்தார் பண்டை நாட்களில் இருந்ததாகத் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. "இலை வாணியர்கள்" என்றும், "கொடி வேளாளர்கள்" என்றும் அவர்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். அக்காலத்தில் காவிரிப் பூம்பட்டினத்தில் வெற்றிலை விற்கும் இடமாக இருந்த ஓர் இடம் இக்காலத்தும் "இலையமுது கூடம்" என்ற பெயருடன் அவ்வூருக்கு மேற்கே சற்றுத் தூரத்தில் இருந்துவருகிறது.

பிற நன்செய்ப் பயிர்களைப் போன்று அவ்வளவு எளிதாக வெற்றிலையைப் பயிர் செய்துவிட முடியாது.

செம்மண் கலந்த களிப்பு நிலத்தில்தான் வெற்றிலை நன்கு பயிராகும். தஞ்சை ஜில்லாவில் பண்டார வாடை, கும்பகோணம் முதலிய இடங்களிலும், தென்னார்க்காட்டில் கூடலூர், நெல்லிக்குப்பம் முதலிய இடங்களிலும், செங்கற்பட்டு ஜில்லாவில் மதுராந்தகம், கருங்குழி முதலிய இடங்களிலும், மலையாளத்திலும் கிடைக்கும் வெற்றிலை சிறந்ததாம். வெள்ளை வெற்றிலை, பச்சை வெற்றிலை, கர்ப்பூர வெற்றிலை, ரவேசி வெற்றிலை என வெற்றிலையில் பல இனங்கள் உண்டு. இரண்டாண்டு களுக்கு மேற்பட்ட வெற்றிலைக் கொடிகளைக் கத்தரித்து வரிசையாக நடுவார்கள். கொடிகள் நன்கு தளிர்த்து இலைகள் விட்ட பிறகு இரண்டு வருஷங்களிலிருந்து ஐந்து வருஷ காலம் வரையில் வெற்றிலையைக் கிள்ளுவார்கள். மழைக் காலத்தில் வெற்றிலை நிறையக் கிடைக்கும்; ஆனால் சுவை குறைந்திருக்கும். வெயிற் காலத்தில் கிடைக்கும் வெற்றிலை அளவில் சுருங்கியிருப்பினும் சுவை மிக்கதாய் இருக்கும். நம் தேசத்தில் சில மாகாணங்களில் வெற்றிலை வியாபாரம் கூட்டுறவு முறையில் நடை பெற்று வருகிறது. வெற்றிலைப் பயிரால் அதனுடன் தொடர் புடைய பாக்குத் தொழில், சுண்ணாம்பு சுடல், வெற்றிலைக் கூடை முடைதல், புகையிலை பதனிடல் போன்ற வேறு பல குடிசைத் தொழில்களும் வளர்ச்சி பெறுகின்றன.

TB 03/10 NSC

குறிப்புரை

தகைசெய்......பசுங்காய் - சாயம் ஏற்றப்பட்ட பாக்கு. பாசடகு - பசுமையாகிய வெற்றிலை. திரையல் - வெற்றிலைச் சுருள். போதை - அறிவு மயக்கம். நிபந்தங்கள் - நிலையான நன்கொடை ஏற்பாடுகள்.

பயிற்சி

1. வெற்றிலைக்கு வழங்கும் வேறு பெயர்களையும் தொடர்களையும் குறிக்க.

2. பதம் பிரித்து எழுதுக :—அளவிட்டு, துணிந்தறியனாதூத்தலுப் பிய, நூற்றாண்டு, குறைந்திருக்கும்.

3. பழக்க வழக்கங்கள், குச்சு வீடுமுதல் மச்சு மாளிகைவரை, ஆண்டி முதல் அரசன் வரை, பிறப்பு முதல் இறப்பு வரை—நும் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

137014

வினாக்கள்

1. 'வெற்றிலை' என்னும் பெயரின் காரணத்தை ஆராய்க.

2. வெற்றிலை சுவைக்கும் பழக்கம் தமிழ் நாட்டிற்கு மிகவும் பழமையானது என்பதற்கு இலக்கியங்களிலிருந்து சான்று தருக.

3. சிலப்பதிகாரத்தில் வெற்றிலை சுவைக்கும் பழக்கத்தைப் பற்றிக் கூறப் பெற்றுள்ளது யாது?

4. வெற்றிலை செய்யும் நன்மையைப் பற்றி மருத்துவர் கூறுவதென்ன?

5. வெற்றிலை உண்பதால் உண்டாகும் நன்மையைப் பற்றிய பலரது கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

6. முஸ்லிம்களிடையே வெற்றிலை எவ்வாறு போற்றப்படுகிறது?

7. வெற்றிலையை ஒட்டிச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள கொள்கைகள் எவை?

8. வெற்றிலையை அயல் நாட்டார் எவ்வாறு போற்றுகின்றனர்?

9. 'வெற்றிலை வியாபாரம்' என்பது பற்றி நீவிர் அறிவதென்ன?

10. வெற்றிலைப் பயிர் எவ்வித நிலத்தில் செழிக்கும்? தமிழ் நாட்டில் வெற்றிலை பயிராகும் பேர்போன இடங்களைக் குறிப்பிடுக.

கட்டுரையாக்கம்

வெற்றிலை தன் சிறப்பைத் தானே சொல்லுவதுபோல் 25 வரியில் எழுதுக.

7. பொறியூர்தி

திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார்

உலகில் இயல்பாகக் காணப்படுவதையே மனம் நம்புகின்றது. அங்ஙனமல்லாதவற்றை நம்பத் துணிவதில்லை. இருங்கள்; பரகாய பிரவேசமென்று ஒரு வித்தையுண்டு என்று ஒருசார் பண்டைய நூல்களிற் படிக்கிறோம். இவ்வாறுனவற்றைப் படிக்கும்போதெல்லாம், இவை



நிகழக்கூடியனவா என்ற ஐயம் மனத்தகத்துத் தோன்றுகின்றது. இவ்வாறு மனந் தடுமாறுமிடத்து, 'எல்லாம் வல்ல இறைவனது அருளை முன்னிட்டு முயன்று நிற்பார்க்கு, எதுதான் செய்ய இயலாது' என்று ஒருசார் மனம் சமாதானப்படும். இங்ஙனம் தோன்றப் பெருதவரே கண்டதே பொருளென்றும் மற்றவை கற்பிதமென்றும் நினைப்பராதலால், அவர் மனம் தெளிவுருது.

இவ்வண்ணம் சிலர் சில பொருள்களில் நம்பிக்கை கொள்ளாமை குறித்து அவர்மீது குறைகூறுவதிற் பய னில்லே. ஆனல், தாம் கண்கூடாகக் காணுதவையெல் லாம் உண்மையல்லவென்று கூறத் துணிவது நல்லறி வுக்கு அழகல்ல என்பதை மட்டும் வற்புறுத்திக் கூறலாம். நாம் காணுத எத்தனையோ வெளிநாடுகளிலுள்ள பொருள்களைப் பற்றிப் பத்திரிகை வாயிலாக அறிகிரும்; அங்ஙனம் உணரும்போது அவை மெய்யென்று நம்ப வில்லையா? அவ்வண்ணமே முற்காலத்து நூல்களிற் காணப்படுஞ் சில 'இங்ஙன மிருக்குமா? என்று நம்மிள மையில் ஐயுற்றவை, அங்ஙன மிருந்திருக்கலாமென்று ஒரெண்ணம் நம் நெஞ்சில் தோன்றுமாறு பிற்காலத்துச் செய்வன இல்லையா? அவற்றில் ஒன்றைப்பற்றி இங்குக் கூறுவேன்.

இராமபிரான் இராவணனைச் சங்கரித்துச் சீதையை மீட்டதும், நாட்களைக் கணக்கிட்டுப் பார்த்தான். 14 வருஷங் கழித்துத் தான் மீண்டு வருவதாகப் பரதனிடம் குறித்த நாள் அன்றே என்று தெரியவந்தது. அப்போது இராமன் விபிஷணனை நோக்கி,

> "ஆண்டு பத்தொடுநாலு மின்றே டறுமாயின்
> மாண்ட தாமினி யென்குலம் பரதனே மாயின்
> ஈண்டுப் போகவோ ரூர்தியுண் டோ?......"

"பதினன்கு ஆண்டுகள் வனத்திற் கழித்துவிட்டு நான் மீண்டு வருவதாகப் பரதனுக்கு வாக்களித்தேன். அதன் படி நான் இன்று வருவேன் என்று பரதன் எதிர்பார்த்து நிற்பான். என்னைக் காணுவிடின் பரதன் உயிர் நீப்பான். பரதன் மாள என் குலமே அழியும். ஆதலின் கடுவேக மாகச் சென்று இன்று சூரியாஸ்தமனத்திற்குள் என்னை அயோத்தி சேர்ப்பிக்கக்கூடிய ஊர்தி ஏதேனுமுண்டோ?" என்று வினவினன். விபீஷணன் 'தூண்டு(வி)மான முண்டென்று தொழுது,'

> "ஈங்குளாரெலா மிவருவது இவரி னீயினிது
> பூங்குலா நகர் புகுதியிஞ்ஞான்று......"

"எம்மிடம் ஒரு விமானமுளது. அது இங்குள்ளவரெல்

லாரும் ஏறக்கூடியது. நீ அதன்மீது இவர்ந்து சென்ருல் இன்றே அயோத்தி சேர்வாய்'' என்று புகன்ருன்.

பின்னர்த் தன்ருணையால் விபீஷணன் கொணர்ந்த புஷ்பக விமானத்தின்மீது சேனையோடு சேர்ந்து இராம பிரான் அன்றே பரத்துவாசாச்சிரமஞ் சார்ந்து, தான் மீண்டுவந்த செய்தியைப் பரதனிடம் கூறுமாறு அனு மனை அனுப்பினன். அனுமான், அக்கினிப் பிரவேசஞ் செய்யச் சித்தனயிருந்த பரதனுக்கு இராமபிரான் மீண்டு வந்த செய்தியை யுணர்த்தி, அவனை அங்கியிற் புக வொட்டாது தடுத்துக் காத்தனனென்று இராமாயணத்திற் படித்திருக்கிருேம்.

தாம் காணுதவையெல்லாம் மெய்யென்று எண்ணும் மனப்பான்மையார், இன்றைக்கு வெகு சிலவே ஆண்டு கட்கு முன்பு இது கட்டுக்கதை யென்று எண்ணியிருப் பார். இப்போது படைகளுடன் வானத்துப் பறந்து செல் லும் வானக் கப்பலைப் பற்றி யறிந்திருத்தலால், இராமா யணத்துக் கூறிய புஷ்பக விமானச் செய்தியும் ஒருகால் உண்மையாயிருக்கலாமென்று எண்ணுதற்கு இடந்தருகிற தன்ருே?

இராமாயணத்துக் கூறிய புஷ்பகவிமானம் போன்று சீவகசிந்தாமணியென்ற பெருங்காப்பியத்தில் ஒரு வகை யான ஊர்தியைப் பற்றிய நிகழ்ச்சி சொல்லப்பட்டுள்ளது. இராசமாபுரத்திலே குருகுலத்துதித்த சச்சந்தனென்னும் அரசன், விசயை யென்பாளை மணந்து அவளது பேரழ கில் ஈடுபட்டு நாட்டைக் கட்டியங்கார னென்பானிடம் ஒப்புவித்துத் தான் அந்தப்புரத்திலேயே இன்புற்றிருந் தான். இங்ஙனிருக்கையில் விசயை கருவுற்றவள், ஒரு நாள் மூன்று கனுக்கண்டு அவற்றை அரசனிடங் கூறி ஞள். அரசனும் அவற்றின் பயனைக் கனுநூலின்படி ஆய்ந்துரைத்தனன். பின்னர் விசயையுற்ற கருவு நாடோ றும் வளரலாயிற்று. அப்போது மன்னனுக்கு எந்திர வூர்தி ஒன்று இயற்றுவிக்க வேணுமென்ற ஒரெண்ணந் தோன்றிற்று. அதனுல் மன்னன் அந்தக் கலையில் வல்லா னெருவனைக் கூவி ஒரெந்திரவூர்தி யியற்றக் கட்டளை

யிட்டனன். அந்தத் தச்சனும் மன்னவன் கட்டளைப் படி,

“ பல்கிழி யும்பயி னுந்துகி னூலொடு
நல்லரக் கும்மெழு கும்நலஞ் சான்றன
அல்லன வும்மமைத் தாங்கெழு நாளிடைச்
செல்வதோர் மாமயில் செய்தன னன்றே.”

அவ்வாறு இயற்றிய அந்த மயிற்பொறி உயிருடனிருக்கும் மயில்போலத் தோன்றிற்று. அந்த மயிற்பொறியின் மீதேறி வானவழியாகச் செல்லவும், பூமியிலிறங்கவும் தன்னுடைய தேவியைச் சச்சந்த மன்னவன் பயிற்றுவித்தான். பின்னர் ஒரு சமயம், கட்டியங்காரனென்பான் அரசை வௌவக் கருதி அந்தப்புரத்தை முற்றுகை செய்தபோது, சச்சந்தன் மனைவியான விசயை அந்த மயிற் பொறியின் மூலமாகவே அரசன் அனுமதியின்மேல் அந்தப்புரத்தினின்று வெளியேறினுள் என்பதே இந் நிகழ்ச்சி. சிறிது காலத்திற்குமுன் இந்தப் பகுதியைப் படித்தவரிற் பலர், பறக்கும் மயிற்பொறி அரசன் இயற்றித்தர அதன் மூலமாக விசயை பறந்து அந்தப் புரத்தினின்று வெளியேறினுளென்ற செய்தியைப்பற்றி, ‘இது நிகழ்ந்திருக்குமா ?’ என்று நினைத்திருப்பார். விஞ்ஞான சாஸ்திரம் வளர்ச்சியுற்று மயிற்பொறி போன்ற வான விமானம் பறந்து செல்வதைப் பல்காலும் கண்கூடாகக் கண்டறியும் இக்காலத்திலோ, இது நிகழ்ந்தது கூறியதாகவே கருத இடந் தருகின்றதல்லவா ?

இங்ஙனம் வானத்தியங்கும் பொறிகளே யன்றி, நிலத்திலூர்ந்து செல்லும் பொறியும் இருந்ததாகக் காண்கிறது. அது கூறுவேன்.

அவந்தி நாட்டில் உஞ்சைப்பதியில் சண்டமகாசேனன் என்னும் பெயர் பூண்ட பிரச்சோதனன் என்பான் ஓர் அரசனிருந்தான். அவனுக்கு வாசவதத்தை என்ற ஓர் அருமை மகளிருந்தாள். அன்னுளுக்கு உதயணனை யாழ் பயில்விக்குமாறு செய்யப் பிரச்சோதனன் விரும்பினுன். பிறகு மந்திரிமாரோடு ஆலோசித்து, அவனை யகப்படுத்தச் சூழ்ச்சி செய்தான். அதன்படியே சண்ட

மகாசேனனென்ற பிரச்சோதனன் வேழப் பொறி யொன்றை இயற்றுமாறு பணிக்கப் பணியாளரும்,

" அரக்கி னும்மெழுக் காகிய நூலினும்
மரத்தி னும்இழி மாவின் மயிரினும்
விரித்த தோலினும் வேண்டிய வற்றினும்
தரித்து யானையைத் தாமியற்றி னர்."

இவ்வாறு இயற்றிய வேழப்பொறி செய்தொழில் வன்மை யால் போலியானையாகப் புலப்படாது இயற்கை யானை யாகவே புலப்பட்டதென்பது உதயணன் சரிதையைப் படிப்பார்க்கு இனிது விளங்கும்.

மற்றும் உதயணன் கதையை யுற்று நோக்குவார்க்கு நிலத்தியங்கும் மற்றோர் ஊர்தியும் இருந்ததென்பது விளங்கும். உதயணனுக்கு உயிர்த்தோழனும் மந்திரியு மான யூகியென்பான், உதயணனைத் தன் மதியின் வலி யால் பிரச்சோதனனிடமிருந்து வாசவதத்தையோடு வெளியேற்றிச் சயந்தி நகரம் புகுவித்த பிறகு, தான் உஞ்சையம்பதியில் முடிக்க வேண்டுவன முடித்துத் தனது நட்பினனான யவனப் பாடித் தலைவன்,

" கையிற் புனைந்த கழிநுண் சிறப்பொடு
வையகத் தியங்கும் வெய்யவ னூரும்
தேரி னன்ன செலவிற் றாகி
யாவரு மறியா வரும்பொறி யாணியின்
இருப்புப் பத்திர மிசையக் கவ்வி
மருப்புப் பலகை மருங்கணி பெற்றுப்
பூணி யின்றியும் பொறியி னியங்கும்
மாண்வினை வையம் மனத்தினி தேறப்பக்
கடுப்பும் தவிர்ப்பும் கண்டன னாகி
வத்தவ னன்னா டத்திசை முன்னி
வித்தக வாணி வேண்டுவயின் முறுக்கி
பூந்தார் மார்பிற் புரந்தர குமரனிற்
போந்தனன் ".

(பெருங்கதை—இலாவா, யூகிபோதரவு—178–198)

என வருவது காண்க.

இங்ஙனமிருந்த நம் கலையறிவுகள் இடையிற் பிற நாட்டாரின் போராட்டத்து நேர்ந்த குழப்பத்தினால் மங்கி

விட்டன. இனியாவது நம் நாட்டார் மனவமைதியுற்று விஞ்ஞான சாஸ்திரம் முதலிய கலைகளில் வல்லுநராய் மேம்பட்டுத் திகழ்வார்களாக.

குறிப்புரை

இன்றேடு அறுமாயின் - இன்றேடு முடியுமானல். மாமயில் - சிறந்த மயிலின் உருவமாக. எழுநாளிடை - ஏழு நாட்களில். பொறி - எந்திரம். வௌவ - கைப்பற்ற, அபகரிக்க. முன்னி - முற்பட்டு. வித்தகம் - ஞானம், அறிவு. புரந்தரன் - இந்திரன்.

பயிற்சி

1. யானை, எந்திரம், வாகனம் என்பவற்றிற்கு வரும் வேறு பெயர் களைக் குறிக்க.

2. உயிரெழுத்து முதலெழுத்தாகவுள்ள சொற்களை யடுத்து 'ஓர்' என்னும் எண்ணிடைச் சொல் வரும் என்பது விதி: (உ-ம்.) ஓர் எண்ணம் இவ்வாறு வருவதற்கு இப் பகுதியிலிருந்து நான்கு உதாரணம் தருக.

வினுக்கள்

1. வானவூர்திபற்றி இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள இடம் யாது?

2. சீவகசிந்தாமணியில் வரும் பறக்கும் பொறியைப்பற்றிய செய்தி யைக் கூறுக.

3. நிலத்தில் ஊர்ந்து செல்லத்தக்க எந்திரப்பொறி முற்காலத்தி லுண்டென்பதைச் சான்றுடன் விளக்குக.

கட்டுரையாக்கம்

"நமது முன்னேர் கலையறிவு" என்பதுபற்றி ஒரு பக்கம் அளவில் கட்டுரை வரைக.

8. பெனிஸிலின்

விந்தை மருந்து

காப்டன், என். சேஷாத்திரிநாதன்

கடந்துபோன ஒருநூறு ஆண்டுகளுக்குள்ளே வைத்திய முறை புரட்சி அடைந்துவிட்டது. ஸர் ஜேம்ஸ் ஸிம்சன் (Sir James Simpson) இரண வைத்தியத்துக்கு ஆளாகும் நோயாளிக்கு நோவு தோன்ருதிருக்கப் பெரிதும் பயன்படுகின்ற குளோரொபாரம் என்னும் மயக்க மருந்தை முதன் முதலில் உபயோகித்தார். லிஸ்டர் பிரபு (Lord Lister) கார்பாலீக் அமிலத்தை அணுவுயிர்ச் சங்காரியாக முதன் முதலில் பயன்படுத்திஞர்; சீழ் பிடிக்காமல் இரண வைத்தியம் செய்யும் முறைகளைச் சீர்திருத்திஞர். எர்லிச் (Ehrlich) என்பார் ஸல்வார்ஸன் மருந்தைக் கண்டுபிடித்து ஸிஃபிலிஸ் என்னும் கொடிய மேக நோயை ஒழிக்க வழி கண்டார். 1932-ம் ஆண்டில் டொமாக் (Domagk) என்னும் ஜர்மானிய விஞ்ஞானி சல்ஃபா மருந்தைக் கண்டுபிடித்துச் சீழ் பிடித்தலையே ஒழித்துவிடலாம் என்ருெரு நம்பிக்கையை எழுப்பிஞர். மக்களுடைய உடலில் இருந்து நிமோனியா, மெனிஞ்சைட்டிஸ் என்னும் கொடிய ஜுரங்களையும் சல்ஃபா மருந்துகள் துரத்தியடித்தன. நெடுங்காலமாக பிரசவ ஜன்னியோடு பெரும் போர் நடைபெற்று வந்தது. கடைசியாக இப்போரில் சல்ஃபா மருந்துகள் வெற்றிபெற்றன.

இத்தகைய நூதன வைத்திய முறைகளும் மருந்துகளும் செய்த புரட்சியைவிட மிகவும் விந்தையானது பெனிஸிலின் மருந்து செய்த புரட்சிதான்.


1928-ம் ஆண்டில் டாக்டர் அலெக்ஸாண்டர் ஃபிளெமிங் (Dr. Alexander Fleming) என்பார் லண்டன் மாநகரில் ஸெயின்ட் மேரி வைத்தியசாலையைச் சார்ந்த ஆராய்ச்சி நிலையத்தில் அணுவுயிர் விஞ்ஞான நிபுணராக வேலை பார்த்து வந்தார். இதுவே பெனிஸிலின் வரலாற்றின் ஆரம்பம் என்று கூறலாம். இவர் அணுவுயிர் விஞ்

ஞானத்தில் தேர்ந்தவர். அணுவுயிர்ச் சங்காரி யென வழங்கிவந்த பல மருத்துகளை ஆர்வங்கொண்டு ஆராயத் தொடங்கினுர். இதற்காகப் பகை யணுவுயிர் பலவற்றைப் பயிர் செய்து வந்தார். பகையணு வுயிர்களைக் கலப்பில்லாமல் தனித்தனியே பயிர் செய்வது எளிதன்று. நீரில் அணுக்கள் மிதப்பதுபோல் வாயுமண்டலத் திலும் பலவகை அணுவுயிர்-விதைகள் உலவுகின்றன. பகை யணுவுயிர்களை வகுத்து உணர் கலவையுடைய பயிர்த் தட்டுகளி லும், ஆராய்ச்சிக்குழாய்களிலும் தனித்தனியே பிரித்துப் பயிர் செய்து காக்கும்பொழுது வாயு மண்டலத்திலிருந்து வேறு அணுவுயிர் விதைகள் புகுந்து பயிராவது, ஆராய்ச்சி ஆலயங்களில் காணும் சாதாரண நிகழ்ச்சியேயாம். அலெக் ஸாண்டர் ஃபிளெமிங் சீழ்ப்பிடித்தலுக்குக் காரணமான



ஸர் அலெக்ஸாண்டர் ஃபிளெமிங்

ஸடஃபிலொகாக்ஸ் என்னும் அணுவுயி ரைப் பயிர்த்தட்டில் பயிர் செய்த போது, அதில் வேறு அணுவுயிர் விதை வாயு மண்டலத்திலிருந்து புகுந்து வளர்வதைக் கண்டு வியப்புற்ருர். இவ் வியப்பிற்குக் காரணமும் உண்டு. இப் படி வளர்ந்த அணுவுயிர் வெண்மை யான ஒருவகைப் பூஞ்சணமேயாம். பயிர்த் தட்டில் வளர்ந்த ஸ்டஃபி லொகாக்கஸ் அப்பூஞ்சணத்தை அணு காமல் சிறிது விலகி நின்று வளர்ந்த காட்சி வியப்பாகவே இருந்தது. இவ் வணுவுயிர் ஏன் பூஞ்சணத்தை அணுகவில்லை? ஸ்டஃபி லொகாக்கஸ் என்னும் அணுவுயிர் அஞ்சி விலகுவதற்குக் காரணமாகிய பூஞ்சணத்தினின்று சுரந்த பொருள் எத்




பெனிஸிலின் பூஞ்சணத்தை ஸ்டஃ பிலொகாகஸ் அணு காது இருத்தல்


தன்மை வாய்ந்தது? இத்தகைய பிரச்னைகள் அலெக்ஸாண்டர் ஃப்ளெமிங் மனத்தில் உதித்திருக்க வேண்டும் என்பது இப்புதிய பூஞ்சணம் புகுந்து பயிரான ஆராய்ச்சித் தட்டைப் புறக்கணிக்கின்ற வழக்கத்திற்கு மாருகப் பத்திரப்படுத்தி, இப்பூசணத்தையும் தனியாகப் பயிர் செய்து காப்பாற்றினுர் என்பதனுல் தெளிவாகிறது. நாள்தோறும் செய்வதற்குஇருந்த அலுவல்களை முடித்த பின் ஒழிந்த நேரம் கிடைத்தபோது, இப்பூஞ்சண ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஸ்டஃபிலோகாக்கஸ் அணுவுயிரை அணுகாமல் தடுத்த இப்பூஞ்சணத்தின் ஆற்றலையெல்லாம் ஆராயத் தொடங்கினுர். வேறு பல அணுவுயிர்களையும் அணுகவிடாத ஆற்றல் இப்பூஞ்சணத்திற்கு உண்டா என்பதை ஆராய்ந்தார்.

கிராம முறைப்படிச் சாயம் ஏற்றுக்கொள்ளும் வகுப்பெனவும், கிராம சாயம் ஏற்று முறைக்கு இணங்காத வகுப்பெனவும் அணுவுயிர்களை இருவகையாக வகுக்கலாம். கிராம முறையில் சாயம் ஏற்றுக்கொள்ளும் வகுப்பைச் சார்ந்த அணுவுயிர்களில் பல இப்பூஞ்சணத்தை அணுகிவளரா என்பதை ஃப்ளெமிங் ஆராய்ச்சியால் தெரிந்து கொண்டார். இப்பூஞ்சணத்தின் உருவ அமைப்பையும் பிற தன்மைகளையும் கண்டபொழுது, இது பெனிசிலியம் வகுப்பைச் சார்ந்தது என்பதும், வளரும்போது ஒரு வகைச் சாரத்தை உணுக்கலவைப்பொருளில் சுரக்கும் என்பதும், அணுவுயிர்கள் வளராமல் தடுக்கும் ஆற்றல் இக்கலப்புக்கு உண்டு என்பதும் பிறவும் ஆராய்ச்சியால் தெளிவாயின. பெனிஸிலியம் என்னும் பூஞ்சணம் சுரந்த சாரத்திற்குப் பெனிஸிலின் என்னும் பெயரையும் வழங்கினுர். இப்பூஞ்சணம் உணுக்கலவை நீரில் பயிராகின்ற பொழுது சுரக்கின்ற சாரத்தைப் பிரித்து எடுத்தார். இந்நிலையில் பெனிஸிலின் ஆராய்ச்சிக்குத் தடை ஏற்பட்டது. டாக்டர் ஃப்ளெமிங் வேலைபார்த்துவந்த ஸெயின்ட் மேரி ஆராய்ச்சியாலயம் மிகச்சிறியது. ஆகையால், பெனிஸிலின் ஆராய்ச்சியைத் தொடர்வதற்குப் போதிய வசதிகள் இவருக்குக் கிடைக்கவில்லை. எனினும் முடிந்த

வரையில் முயற்சி குன்ருமல், அணுவுயிர்ச் சங்காரியாகத் தோன்றிய பெனிஸிலின் ஆற்றலேப் பலவாறு பரிசோதனே



பெனிஸிலின் பூஞ்சணம் பயிராவது



ஹீட்லி முறைப்படி பெனிஸிலின் உயர்வு

செய்து வந்தார். நோயாளியினுடைய சளி முதலிய கழிவுப் பொருள்களிலிருந்து பகையணுவுயிர்களேத் தனியாகவே பிரித்துப் பயிர் செய்வதற்குப் 'பெனிஸிலின் உதவியது. ரணங்கள்மீது பெனிஸிலின் கலவை நீரைப் பரப்பி ரணங்களே விரைவிலே ஆற்ற முடியுமென்று அவர் அறிந்தார்.

ஃப்ளெமிங் செய்த ஆராய்ச்சிகள் 1932-ம் ஆண்டு வரைக்கும் பிரபலம் அடையவில்லே. பெனிஸிலின் வைத்திய உலகத்தையே கலக்கும் என்று எவரும் எதிர் பார்க்கவில்லே. ஃப்ளெமிங்குக்கு ஆப்த சிநேகிதரான ரெயிஸ்ட்ரிக் (Raistrick) என்பாரொருவரே பெனிஸிலின் பிரபலமடையலாம் என்று நம்பியவர். இவர் ரசாயன விஞ்ஞானி; வைத்தியத்திலும் தேர்ந்தவர். பெனிஸிலின் ஆராய்ச்சியில் ஃப்ளெமிங் பண்டிதருக்கு ரெயிஸ்ட்ரிக் தம்மாலியன்ற உதவிகள் புரிந்தார். ஆராய்ச்சிக்காகச் சீரான முறையிலே உணுக்கலவை நீரிலிருந்து பெனிஸிலினேப் பிரித்துப் பரிசுத்தம் செய்து திரட்டிக் கொடுத்தார். இதனே எலிகளுக்குச் செலுத்தியபொழுது எவ்விதத் தீங்கும்

விளையவில்லை என்பதையும் நிரூபித்தார்; நியுமோனியா ஜுரத்திற்குக் காரணமாகிய அணுவுயிரை இவ்வெலிகளின் உடலில் புகுத்தி, அதனோடு பெனிஸிலினையும் செலுத்தினர். சில எலிகளுக்குப் பெனிஸிலினைச் செலுத்தாமல் நியுமோனியாவை விளைக்கும் பகையணு உயிரைச் செலுத்தினர். பெனிஸிலின் செலுத்தப்பட்ட எலிகள் நோயால் வருந்தாமல் பிழைத்தன. பெனிஸிலின் செலுத்தப்படாத எலிகள் அனைத்தும் நோய்க்கு இரையாகி இறந்தன. இவ்வாறு தெளிவான ஆராய்ச்சிகள் பல செய்து, பெனிஸிலினின் ஆற்றல்களை விளக்கிய போதிலும் வைத்தியர்கள் பெனிஸிலினுடைய மகிமையை அறிந்து கொள்ளவில்லை. "பூஞ்சணத்திலிருந்து சுரக்கின்ற மருந்தை நோயாளிக்கு எப்படிப் பயன்படுத்தலாம்?" என்றூர்கள்.

1939-ம் ஆண்டில் இரண்டாவது உலகப் போர் நெருங்குவதை வைத்தியர்களும் இராணுவ அதிகாரிகளும் அறிந்து கொண்டனர். போர்க்களத்தில் படுகாயமேற்று வருந்தும் இராணுவ வீரர்களுக்கு அணுவுயிர்களால் உயிர்ச் சேதம் வராமலிருக்க என்ன செய்யலாம் என்று வைத்திய விஞ்ஞானிகள் வெகு தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினூர்கள். டாக்டர் ஃப்ளோரி (Dr. Florey) என்பாரும் அவருடைய உடனூழியர்களும் அணுவுயிர்ச் சங்காரிகளைத் தேடத் தொடங்கினூர்கள். பெனிஸிலின் சிறந்த அணுவுயிர்ச் சங்காரியாகலாம் என்று சிந்தித்து அதைத் திரும்பவும் ஆராயத் தொடங்கினூர்கள். இரண வைத்தியத்திற்கும் நியுமோனியா போன்ற பலவகை ஜுரங்களைக் குணம் செய்வதற்கும் பெனிஸிலின் ஆற்றலுடையதெனவும், அதுகாறும் பகையணுவுயிர்களைக் கண்டித்த மருந்துகள் அனைத்திலும் பன்மடங்கு அதிகமான ஆற்றலுடையது இந்தப் பென்ஸிலினெனவும், உடலுக்கு எத்தகைய கேடும் விளைக்காது எனவும், டாக்டர் ஃப்ளோரியும் உடனூழியர்களும் தெளிவான அத்தாட்சிகளுடன் நிரூபித்தனர். ஆக்ஸ்போர்ட் ஆராய்ச்சி நிலையத்திலிருந்தும், அமெரிக்காவில் ராக்ஃபெல்லர் ஆராய்ச்சிக் கழகத்திலிருந்தும், இவர்களுடைய ஆராய்ச்சிக்குப்

போதிய அளவு பொருளுதவி கிடைத்தது. போர்முனை யில் இரண சிகிச்சைக்குப் பென்ஸிலின் இன்றியமையாத மருந்தாகும் என்று எண்ணி அதைப் பெரிதளவிலே உற் பத்தி செய்வதற்குரிய வழிவகைகளை அமெரிக்காவிலேயே தேடினுர்கள். அமெரிக்காவிலுள்ள வைத்திய ஆராய்ச்சிக் கழகங்களும், மருத்துவ உற்பத்திச் சாலைகளும், ஊக்கத் தோடும் உற்சாகத்தோடும் இவர்களுக்கு உதவி புரிந்தன; பெனிஸிலினை நன்ருய்ச் சுத்தம் செய்யவும், ஏராளமாய் உற்பத்தி செய்யவும் வழிவகைகளை வகுத்துக் கொடுத் தன. பல வைத்தியசாலைகளிலுள்ள நோயாளிகளுக்குப் பெனிஸிலினைக் கொடுத்தபோது, அப்பிணியாளிகள் விரை வில் குணமடைவதைக் கண்ணுற்ற வைத்திய விஞ்ஞானி கள் அம்மருந்தின் ஆற்றலை வியந்து கொண்டாடினர்.

பெனிஸிலின் செய்யும் முறையும் விரைவிலே மாறுதல் அடைந்தது. இதற்குமுன் கிடைத்த பெனிஸிலினைவிடப் பன்மடங்கு வீறுள்ள பெனிஸிலினை உற்பத்தி செய்யத் தொடங்கினுர்கள். போர் முனையில் போர் வீரர்களுக்குச் சிகிச்சை செய்ய ஏராளமாய்ப் பெனிஸிலின் கிடைத்தது. இம்மருந்து போர் வீரர்களின் மரணத் தொகையைக் குறைத்தது. இரணங்கள் விரைவிலே குணமாயின. உடைந்த எலும்புகள் சீர்குலையாமலே வெகு விரைவில் பொருந்திக் கூடின. போர்முனையில் காங்கிரீன் (Cong-rene : அங்கமே அழுகிப் போவது) நோய்க்கு ஆளாகாமல் போர் வீரர்கள் தப்பிப் பிழைத்தனர். நீடித்த கால தாமதமில்லாமலே குணம் அடைந்து போர் வீரர்கள் போர்முனைக்குத் திரும்பினுர்கள்.

அணுவுயிர்ச் சங்காரியாக வைத்தியத்திற்கு உதவு கின்ற மருந்து பெரிதளவிலே இரத்தத்தோடு கலந்திருந் தாலும், உடலுக்குத் தீங்கு விளைக்காமல் இருப்பதோடு மிகச் சிறிதளவிலும் பகையணுவுயிர்களைத் தாக்கும் ஆற்றல் பெற்றிருப்பது இன்றியமையாதது. பெனிஸிலின் மருந்து தோன்றுவதற்குமுன் கண்டுபிடித்த அணுவுயிர்ச் சங்காரிகளில் எதுவுமே இத்தன்மைகளைப் பெற்றிருக்க வில்லை. இரண்டாயிரத்தில் ஒரு பங்கு என்ற அளவிலே

கலந்த பெனிஸிலின் கலவை மருந்துகூட, திசுக்களுக்கும் ஜவ்வுகளுக்கும் எத்தகைய தீங்கும் விளைக்கவில்லை. பத்து லட்சத்திற்கு ஒரு பங்கு அளவுள்ள பெனிஸிலின் கலவை நீரும் அணுவுயிர்களை நாசம் செய்யும் ஆற்றல் பெற்றது.

பெனிஸிலினுக்கு அடங்குகிற பகையணுவுயிர்களில் தலைமை பெற்றவை சீழ் பிடித்தலுக்குக் காரணமான ஸ்டஃபிலொக்காக்கஸும் ஸ்ட்ரெப்டொகாக்கஸுமேயாம். கூற்றுவனது சன்னிதானத்திற்கு விரைவிலே அழைத்துச் செல்லும் யமகிங்கரன் போன்றது ஸ்ட்ரெப்டொகாக்கஸ் அணுவுயிரேயாம். இரணஜன்னி, பிரஸவ ஜன்னி நியுமோனியா ஜுரம் என்னும் கொடிய நோய்களுக்குக் காரணமானவை ஸ்ட்ரெப்டொகாக்கஸ் வகுப்பைச் சார்ந்தவை. இந்நோய்களுக்கு ஆளானவர்களுடைய உடலுக்குள் பென்ஸிலினை இஞ்சக்ஷன் முறையிலே செலுத்தி விரைவிலே சுகநிலை அடையச் செய்துவிடலாம். மெனிஞ்சொகாக்கஸ் என்னும் அணுவுயிர் மூளைக்காய்ச்சலை விளைக்கும். ஸ்ட்ஃபிலோகாக்கஸ் வேறு இடங்களில் சீழ் பிடித்தலை விளைப்பதோடு, எலும்பிலும் சீழ் பிடித்தலை விளைக்கும். நிலத்தில் இருக்கும் அணுவுயிர்கள் கொடிய காயம் பட்டவர்களுடைய புண்ணில் புகுந்து இரத்தத்தோடு கலவையாகிக் காங்கிரீனை விளைக்கிறது. இத்தகைய நோய்களை வேர் அறுக்க பென்ஸிலின் இன்றியமையாத மருந்தாகிறது. முதல் உலகமகா யுத்தம் நிகழ்ந்த பொழுது பெனிஸிலின் மருந்து தோன்றாததினாலே அந்நாட்களில் மேற்கூறிய தொத்து நோய்களால் மாண்டவர்களின் எண்ணிக்கை, பகைவர்களுடைய குண்டுகளால் மாண்டவர்களின் எண்ணிக்கையிலும் பன் மடங்கு அதிகம். இரண்டாவது உலகமகா யுத்தத்தில் இத்தகைய நோய்களால் நிகழ்ந்த மரணத்தொகை பெரும்பாலும் குறைந்துபோயிற்று.

வரன்முறை கெட்ட காம வாழ்க்கையால் விளையும் நோய்களின் காணரியா என்பதும் சிஃபிலிஸ் என்பதும் மேக நோய்களைச் சார்ந்தவை. இவை சமூகத்தில்

இன்றைக்கும் மறைந்து உலவுகிற பேய்களாகவே இருந்து வருகின்றன.

ஸல்வார்ஸன் மருந்துகள், சல்ஃபா மருந்துகள், பெனிஸிலின் முதலிய நவீன மருந்துகள் கண்டுபிடிப்பதற்கு முன்னே இந்நோய்கள் எளிதில் குணமாகாமல் நோயாளிக்குத் துன்பம் விளைத்தன. இந் நோய்களால் அடையும் துன்பங்களைக் கண்ணுறுபவரும் வினைப்பயன் என்று இரங்கி வந்தனர். துன்புறுபவனும் கருமவினை என்று தன்னைத்தானே ஆற்றித் தேற்றிக்கொண்டு நோயைத் தாங்கி வந்தான்.

பெனிஸிலினும் சல்ஃபா மருந்துகளும் ஸல்வார்ஸன் மருந்துகளும், இந்நோய்களை உலகிலிருந்து வெகு சிரமமில்லாமலே அகற்றி விடுகின்றன. பெனிஸிலின் இவ்விரு நோய்களுக்கும் பயன்படக்கூடியது. காணரியாவை ஒரே நாளில் உடலிலிருந்து அகற்றிவிடும் ஆற்றல் உடையது. ஸிஃபிலிஸ் நோய் ஆரம்பமான உடனேயே ஏழு நாட்களுக்கு விடாமற் பெனிஸிலின் சிகிச்சை செய்தால் நோய் முற்றிலும் மறைந்து போய்விடும்.

இரணத்தின்மீது பெனிஸிலினைப் பரப்பிச் சாதாரண வைத்தியத்திற்கு இணங்காத இரணத்தையும் எளிதில் ஆற்றிவிடலாம்.

பெனிஸிலின் மருந்தினுடைய ஆற்றல்களை ஆராய்ந்து விளக்கிய ஃப்ளோரி என்பாருக்குப் பின் வந்தவர்களும், பல துறைகளில் இடையரு முயற்சியோடு ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டறிந்தனர். இன்று பெனிஸிலினை முற்றிலும் சுத்தமாக உற்பத்தி செய்வதோடு ஏராளமாகவும் குறைந்த விலைக்கு யாவருக்கும் அகப்படுமாறும் உற்பத்தி செய்கின்றனர்.

பாக்டீரியாக்களைக் கிராம் சாயம் ஏற்றும் முறைப்படி இருவகையாகப் பிரிக்கலாம் என்று முந்தியே சொன்னோம். இவ்விரு வகுப்பிலும் கிராம் சாயம் ஏற்றுக் கொள்கிற வகுப்பில் அடங்கிய அணுவுயிர்கள் பெனிஸிலினுக்கு அடங்குவன; கிராம் சாயம் ஏற்றுக் கொள்ளாத வகுப்பைச் சார்ந்த அணுவுயிர்கள் பொதுவாகப் பென்ஸி

லினுக்கு அடங்காதவை. ஆனால், இதற்கும் சில ஒழிபுகள் உள்ளன. ஒருவகை மூளைக் காய்ச்சலுக்குக் காரண மாகிய மெனிஞ்சொகாக்கஸ் எனவும் ஒருவகை மேக நோய்க்குக் காரணமாக காணக்காக்கஸ் எனவும் பெயர் கொண்ட அணுவுயிர்கள் பெனிஸிலினுக்கு எளிதில் இணங்கக் கூடியவை. இவ்விரு அணுவுயிர்களும் கிராம் சாயம் ஏற்றுமுறைக்கு இணங்காவாம். டைஃபாயிட் ஜுரம் விளைக்கும் அணுவுயிரும், சீதபேதி அணுவுயிரும், காலரா அணுவுயிரும் பெனிஸிலினுக்கு வசப்படாதவை. க்ஷயரோகம், குஷ்டம் இவைகளுக்கு காரணமாகிய அணு வுயிர்கள் கிராம் சாயம் ஏற்றுமுறைக்கு இணங்குமாயினும் பெனிஸிலினுக்கு இணங்காவாம்.

பெனிஸிலின் சிகிச்சைக்கு ஆளாகும் நோயாளிக்கு ஒரு பிரச்னை உண்டு. அவன் நிலையில் அதுவும் முக்கிய மான பிரச்னைதான். இரவும் பகலும்மூன்று மணி நேரத்திற் கொருதரம் தேள் கொட்டுவதுபோல் இஞ் சக்ஷன் முறைப்படி பெனிஸிலினைச் செலுத்துவதைத் தவிர்த்து வேறு முறையிலே இம் மருந்தைச் செலுத்த முடியாதா என்பதே இவனுடைய பிரச்னை. வைத்தியன் நோயாளியாகும் போதல்லவா நோயாளியின் இந்தப் பிரச்னை எவ்வளவு முக்கியமானதென்று உணருவான்? பெனிஸிலினுடைய அதிசயச் செயலே வேதனையைத் தாங்க நோயாளிக்கு உதவி செய்கிறது. ‘இந்த வேதனை யைச் சிறு குழந்தைகள் எப்படித் தாங்குவார்களோ? அவர்களுக்கு இப்படி வேதனை விளைப்பது கொடுஞ்செய லன்றோ?’ என்று சிலர் கேட்கலாம். இப்பிரச்னைகளுக்கு விடைகாணச் சில வருஷங்களாயின. குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் புதிய முறையில் செய்த பெனிஸிலின் மாத்திரைகளை வாய் வழியாகக் கொடுத்து இஞ்சக்ஷன் முறை அளவிலேயே நோய்களைக் குணமாக்கும் வைத்திய முறைகளும் தோன்றத் தொடங்கியிருக்கின்றன. மேலும் புதிய முறைப்படி இஞ்சக்ஷன் செய்வதற்குப் புது வகைப் பெனிஸிலின் என்றும் அகப்படுகிறது. அதை இருபத்து நான்கு மணி நேரத்திற்கு ஒருதரம் இஞ்சக்ஷன் செய்

தால் போதும். பழைய முறைப்படி மூன்று மணி நேரத்திற்கு ஒரு தரம் பென்ஸிலின் இஞ்சக்ஷன் செய்வதற்குச் சமமாக உதவுகிறது இப்புதிய மருந்து.

புதிய மருந்துகளைக் கண்டுபிடித்தபிறகு. அப்புதிய மருந்துகள் தாறுமாறுமாக உபயோக மாகும்போது அவைகளுடைய பெயரையே கெடுத்துவிடுகின்றனர். பெனிஸிலின் மருந்தும் இப்படி வீணுக்கப் படுகிறது. அதனுடைய பெயர் கெடும்படி இடையூறுகள் உண்டாக லாம். வைத்தியன் எதிர்பார்க்கும் அளவிலே பெனிஸலின் மருந்து நோயாளிக்கு எப்பொழுதும் நன்மை விளைவிப்ப தில்லை. இதற்குச் சில காரணங்கள் உள்ளன என்பதை வைத்தியர்கள் உணர வேண்டும். இல்லாவிடில் பெனி ஸிலின் மருந்து வீணுகிவிடலாம். கலவை செய்த பெனிஸிலினைப் பனிக் கட்டியின் தட்ப நிலையிலேயே காப்பது இன்றியமையாதது. இல்லாவிட்டால் இம் மருந்தின் வீறு குன்றிப் போகும். வீறு குன்றிய பெனி ஸிலினைச் செலுத்தும்பொழுது எதிர்பார்த்த நன்மை விளையாது. பெனிஸிலினுடைய வீறு குறைவதற்கு வேறு காரணங்களும் உள்ளன. அவற்றில் முக்கியமானது பெனிஸிலின் கலப்பதற்கு உபயோகமாகும் நீர் அசுத்தப் படுவதேயாம். நிலத்தில் சாதாரணமாக வாழும் ஒரு வகைப் பாக்டிரியம் கலவைநீர் வழியாகவோ அல்லது, அசுத்தமான இஞ்சக்ஷன் கருவியூடோ பெனிஸிலில் கலந்து பெனிஸிலினுடைய ஆற்றலைக் குறைத்து விடும். பெனிஸிலினை இஞ்சக்ஷன் முறையில் கையாளும்போது அதற்குற்ற நிபந்தனைகளைச் சீராக அனுசரிக்க வேண்டும். ஆஸ்டியொமயலைட்டிஸ் என்னும் நோய் எலும்புச் சீழுக்குக் காரணமானது. இந்நோய் விளைக் கின்ற ஸடஃபிலொகாக்கஸ் அணுவுயிர் எலும்புக்குள்ளே பதுங்கி மருந்துக்கு விலகி வாழ்கின்றது. இதனுலேயே பெனிஸிலினை ஆரம்பத்திலிருந்தே ஏராளமாகக் கையாள வேண்டும்.

பெனிஸிலினைப் போன்ற அணுவுயிர்ச் சங்காரி களுக்கு ஆன்டிபயோட்டிக்ஸ் (antibiotics : அணுவுயிரை

எதிர்க்கும் மருந்துகள்) என்று பெயர். இவ்விந்தை மருந் தாகிய பெனிஸிலினை டாக்டர் ஃப்ளெமிங் கண்டுபிடித்த தற்காக ஆங்கில அரசாங்கத்தார் இவருக்கு "ஸர்" பட்டம் வழங்கினர். இவர் உலகப்பிரசித்தியான "நோபல்" பரிசும் பெற்றார். டாக்டர் ஃப்ளோரியும் அவருடைய உடனூழியர்களும் பெனிஸிலினுடைய விந்தை ஆற்றல் களை வைத்தியத்திற்குச் சர்வசாதாரணமாகப் பயன்படு மாறு உற்பத்தி செய்யும் வழி வகைகளைத் தேடிக் கொடுத்துப் புகழ் பெற்றனர்.

இதன் பின்னர் உலகெங்கும் பல விஞ்ஞானிகள் ஆண்டி பயோட்டிக் ஆராய்ச்சியில் புகுந்தனர். பல அணுவுயிர் எதிர்ப்பு மருந்துகளையும் கண்டுபிடித்தனர். ஆனால் அவைகளில் வைத்தியத்திற்குப் பயனாகக் கூடியவை மிகச்சில. ஒன்று மட்டும் பயனாகும் என்று தெரிய வருகிறது. இதன் பெயர் ஸ்ரெப்டொமைசின் (streptomycin). க்ஷயரோகத்தை அடக்கும் சக்தி இதற்கு உண்டு. பெனிஸிலினுக்கு அடங்காத டைஃபாயிட் அணுவுயிர் போன்றவைகளை அடக்கும் ஆற்றலுடையது. ஆனால் இதை ஏராளமாய்ச் செய்ய வசதிகள் ஏற்பட வில்லை.

நமக்குப் பகையாயிருக்கும் அணுவுயிரின் வேட் டைக்கு போர்க் கருவிகளை உண்டுபண்ணுவதிலே குன்றா முயற்சிகள் பல நடைபெற்று வருகின்றன. இவ்விடா முயற்சிகளுக்குப் பெனிஸிலின் மருந்துதான் வெற்றிக் கொடி ஏந்தி முன்னே செல்கின்றது. மக்களுடைய சுகவாழ்வு இதனால் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆனால் பகை அணுவுயிர்கள் பல பெனிஸிலின் போன்ற மருந்துகளுக்கு அடங்காமல் மக்களுடைய சுக வாழ்வைக் குலைக்கின்றன. இவைகளில் ஒன்று, வைரஸ் (Virus) என்பது. இது அணுதர்சனியின் (Microscope) உதவி யாலும் காணமுடியாதது. இவ்வகுப்பு அணுவுயிர்களை அடக்க எதிர்ப்பு மருந்து கிடைத்தால், இளம்பிள்ளை வாதம் முதலிய பல நரம்பு நோய்கள், அம்மை நோய்கள் ஆகிய நோய்களைத் தவிர்க்கலாம். மக்களுக்கு உதவியாக

வாழும் பிராணிகளையும் நோய் பாதியாமல் காக்க வேண்டும். தாவர இனங்கள் நமக்கு உணவாக இருப்பதால், அவற்றிற்கு நோய் விளையாமல் காப்பதிலும் நாம் கருத்தைச் செலுத்தவேண்டும். இதற்கமைந்த ஆராய்ச்சிகளும் நடை பெறுகின்றன. இதற்கெல்லாம் பயன்படவல்ல பூஞ்சண மருந்துகளை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கிறார்கள்.

இப்போது வைத்திய உலகம் எங்கும் ஆராய்ச்சி ஆராய்ச்சி என்பதே பேச்சு. நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வம் மக்களனைவருக்கும் உறுதியாகும் காலமும் வரலாயிற்று. கோடிக் கணக்கிலே பொருள் செலவழித்து மக்கள் ஒருவரை ஒருவர் கொன்று ஒழிப்பதற்கான கொடிய கருவிகளைச் செய்வதற்கமைந்த ஆராய்ச்சிகள் ஒருபுறம் நடைபெற்று வருகின்ற அதே நேரத்தில், வைத்திய விஞ்ஞானிகள் மானிட வாழ்வின் சுகநிலைக்காக உலகத்தின் செல்வத்தில் ஒரு சிறு பகுதியையாவது மக்களுடைய உயிரைக் காக்கும் பொருட்டுச் செலவழிக்க மாட்டார்களா என்று ஏங்கி நிற்கிறார்கள். இவர்களுடைய ஏக்கம் தீராதா ? உலகம் விரைவில் சுகம் உறாதா ?

குறிப்புரை

உணுக்கலவை - அணுவுயிர்கள் உணவாகக் கொண்டு பெருகுவதற்காகத் தயாரிக்கப்படும் திரவம். சங்காரி - கொல்லும் பொருள். வீறு - சக்தி. திசு - Tissue. ஓழி - விலக்கு.

பயிற்சி

1. பிரித்துக் காட்டுக : நூற்றாண்டு, நெடுங்காலம், பகையணு, பன்மடங்கு, இடையூறு.

2. பகுபத உறுப்புக் கூறுக :—கண்டார், பெற்றன, தொடங்கினர், அறிந்தார்.

வினாக்கள்

1. ஸிம்ஸன், லிஸ்டர், எர்லிச், டொவாக் என்பார் ஒவ்வொருவரும் வைத்திய முறையில் உண்டாக்கிய புரட்சி யாது ?

2. ‘பகையணுவுயிர்களைக் கலப்பில்லாமல் தனித்தனியே பயிர் செய்வது எளிதன்று’—ஏன் ?

3. அலெக்சாண்டர் ஃப்ளெமிங் சீழ்பிடித்தலுக்குக் காரணமாயுள்ள அணுவுயிரைப் பயிர்த்தட்டில் பயிர் செய்தபோது கண்ட அதிசயம் யாது?

4. அணுவுயிர்களை எவ்விரு வகைகளாகப் பிரிக்கலாம்?

5. பூஞ்சண ஆராய்ச்சியால் ஃபொளமிங் தெரிந்துகொண்ட விஷயங்கள் யாவை?

6. பெனிஸிலின் பிரபலமான மருந்தாகலாம் என்று நம்பிய ரசாயன விஞ்ஞானி யார்? அவர் ஃப்ளெமிங்குக்கு எவ்விதம் உதவிபுரிந்தார்?

7. இரண்டாம் உலக யுத்தம் நெருங்கும் சமயத்தில் பெனிஸிலினைப் பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்தவர்கள் யாவர்? அவர்கள் கண்ட உண்மை என்ன?

8. காயமடைந்த போர்வீரர்களுக்குப் பெனிஸிலின் எவ்வாறு உதவியது?

9. மற்ற அணுவுயிர்ச் சங்காரிகளுக்கும், பெனிஸிலினுக்கும் உள்ள இரு வேற்றுமைகள் யாவை?

10. பெனிஸிலினால் குணமாகும் நோய்கள் யாவை?

11. பெனிஸிலின் மருந்தில் சமீபகாலத்தில் எவ்வகை முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன?

12. சிறு குறிப்புக்கள் வரைக :—வைரஸ்; ஸ்ட்ரெப்டொமைசின்.

கட்டுரையாக்கம்

"பெனிஸிலின்" என்பதைப்பற்றி ஒன்றரைப் பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.

9. சுவீடன்

திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பி. ஏ.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஏராளமான சின்னஞ் சிறு நாடுகளிலே, பொருளாதாரத் துறையில் பெரும் முன்னேற்ற மடைந்துள்ள நாடு, சுவீடன். இரு உலகப் பெரும்போர்களிலும் சுவிட்சர்லாந்தைப்போலச் சுவீட னும் நடுநிலைமை வகித்தது. முதலாளித்துவம் அபேத வாதம் ஆகிய இரண்டுக்கும் நடுவழியான ஒரு பொரு



ளாதார அமைப்பும் சுவீடனிடம் பொருந்தியுள்ளது. 'கள்ள வாணிகம் (Black Market) என்பதே இல்லாத நாடு உலகில் ஒன்று இருக்கிறது என்ருல் அதுதான் சுவீடன். இக்காரணங்களால், சுவீடனைப்பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாதது.

விஸ்தீரணமும் ஜனத்தொகையும்

சென்னை மாகாணமும் சுவீடனும் நிலப்பரப்பில் அநேகமாகச் சமமானவை. ஆனல் சுவீடனில் பாதிப்

பிரதேசம் காடுகள் நிரம்பியது. மேலும் ஒரு லக்ஷம் ஏரிகளும் பல மலைகளும் ஏராளமான ஆறுகளும் உள்ளன. சுவீடனின் ஜனத்தொகை 70 லக்ஷம்தான். அதாவது, மைசூர் சமஸ்தானத்தைவிடக் குறைவானது. சுவீடனில் ஒவ்வொரு 11 பெண்கட்கும் 10 ஆண்கள் வீதந்தான் இருக்கின்றனராம்!

மூன்று குழந்தைகள் உடையவர் பெரிய குடும்பத்தாரெனச் சுவீடனில் கருதப்படுகின்றனர். ஏனெனில், ஒவ்வொரு 100 குடும்பங்களிலும், 83 குடும்பத்தார் ஒரு குழந்தை உடையவராகவும், 12 குடும்பத்தார் இரண்டு குழந்தைகள் உடையவர்களாகவும், ஐந்து குடும்பத்தார்கள் மட்டுமே மூன்று குழந்தைகள் உடையவர்களாகவும் இருக்கிறார்கள்.

சரித்திரம்

பல நூற்றாண்டுகள் பெரிய வல்லரசாக விளங்கியதும் கி. பி. 862 முதல் 500 ஆண்டுகள் வரை ரஷ்யாவில் அரசு செலுத்தியதும் ஆகிய சுவீடன் இப்போது ஆதிக்க அரசியலிலிருந்து விலகி நிற்கிறது. ஏகாதிபத்தியங்களே உலக யுத்தங்கட்குக் காரணம் என்பதை சுவீடன் நாட்டவர் உணர்ந்திருப்பதே இதற்கு மூல காரணம். கி. பி. 1800 முதல் பிறநாட்டு விவகாரங்களில் சுவீடன் தலையிட்டதில்லை. ரஷ்யா, ஜெர்மனி ஆகிய இரு பெரு நாடுகட்கு அருகிலிருந்தும், யுத்தத் தீ தன்னைப் பற்றாதபடி இந்நாடு தன்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. இதன் பயனாகச் சுவீடனில் சமாதானமும் சுபிட்சமும் நிலவின. இவைதான் இந்நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்கு அடிப்படை.

விஞ்ஞான முன்னேற்றம்

தீப்பெட்டி, டைனமைட், ஐஸ் பெட்டி, சிக்கலைக் குறைக்கும் ரவைகள் (Ball bearings) டெலிபோன், டிசல் எஞ்சின், கிரசின் ஸ்டவ் ஆகிய கருவிகள் அனைத்தும் சுவீடன் நாட்டினராலேயே முதன் முதலில் கண்டுபிடிக்கப்

பட்டன. இவற்றிலிருந்து சுவீடனில் விஞ்ஞானம் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

கூட்டுறவு

கூட்டுறவு இயக்கம் உலகில் பரவியதற்கு, சுவீடனில் இவ்வியக்கம் வெற்றி பெற்றமையே காரணம். பல பெரிய தொழிற்சாலைகள் சுவீடனில் கூட்டுறவு முறையில் நடைபெறுகின்றன. சில்லறை வியாபாரத்திற் பெரும்பகுதி இந்த ஸ்தாபனத்தாரிடமே இருக்கிறது. கள்ள வாணிகம் இங்கு இல்லை எனின், இவற்றின் நிருவாகத் திறமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

தொழில்கள்

சிமிண்டு, இரும்பு, மரச்சாமான்கள், செயற்கை வீடுகள் ஆகிய இவற்றைச் செய்யும் தொழிற்சாலைகள், நெசவு ஆலைகள், சுரங்கங்கள், பலவகை யந்திரங்கள் உற்பத்தி செய்யும் சாலைகள் போன்ற எத்தனையோ வகைத் தொழில்கள் இந்த நாட்டில் இருந்தபோதிலும், முக்கியமானவை—காகிதத் தொழிற்சாலைகளும் கண்ணடித் தொழிற்சாலைகளுமே.

காகிதத்தால் சுவீடிஷ்காரர்கள் செய்யாதது ஒன்றுமே இல்லை. காகிதப் போர்வை கூடச் செய்கிறுர்கள்! கரன்ஸி நோட்டு என்ற காகித நாணயத்தை உலகுக்கு வழங்கியவர்களும் சுவீடிஷ்காரர்களே ஆவர்.

பொருளாதார செழிப்பு

சுவீடனின் நாணயமாகிய குரோணர் (குரோணர்=14 அணு) டாலருடன் இணைக்கப்பட்டிருக்கிறது. (நமது நாட்டு நாணயமாகிய ரூபாய் இங்கிலீஷ் ஸ்டர்லிங்குடன் இணைக்கப்பட்டிருப்பது போல டாலர் கிராக்கியான நாணயமாயிருப்பதால், சுவீடனின் நாணயமும் மிக வலுவான நிலையில் உளது.

சுவீடிஷ்காரர்கள் பொதுவாகப் பணம் படைத்தவர்

கள். அண்டை நாடுகளில் உள்ள சொத்துக்களிலும் தொழில்களிலும் பெரும்பகுதி இவர்கட்குச் சொந்தமானவையே.

வேலையில்லாத் திண்டாட்டம் என்பதே சுவீடனில் கிடையாது. மக்களின் பாதித் தொகையினர் பணப் பாது காப்பு நிதிகளிற் கணக்குகள் வைத்திருக்கின்றனராம். கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து, சுவீடனின் செழிப்பை மேலும் ஊகிக்கலாம் :—

ரேடியோ நிலையங்கள்	... 33
ரேடியோ கருவிகள்	... 20 லட்சம்
சினிமாக் கொட்டகைகள்	... 2242
டெலிபோன்	... 1 லட்சம்
ஆகாய விமானங்கள்	... 30
மோட்டார் கார்கள்	... 2 லட்சம்
ரயில் பாதையின் நீளம்	... 10400 மைல்கள்
தினசரிப் பத்திரிகைகள்	... 230

கல்வி

எட்டு வருஷ இலவசக் கட்டாயக் கல்வி முறை ஸ்வீடனில் அமலில் இருக்கிறது. அவ்விதம் கற்க இயலாதவர்கள் ஏழு வருஷங்கள் கற்றபின்பு, வாரம் இரு நாட்கள் வீதம் மேலும் இரு ஆண்டுகள் கல்வி கற்க வேண்டும். எல்லா மாணவர்கட்கும் காலை ஆகாரமும் ஏழை மாணவர்கட்கு உணவும் உடையும் அரசியலாரால் இனமாகக் கொடுக்கப்படுகின்றன. ஓராண்டில் 360 மைல்கள் இலவச உல்லாசப் பிரயாணமும் மாணவர்கட்கு உண்டு! கல்லூரிகள், நேர்த்தியான கண்ணைக் கவரும் கட்டடங்களில் அமைந்துள. உயர்தரக் கல்லூரிகளில், தாய்மொழி தவிர, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ் ஆகியவற்றில் இரண்டு மொழிகள் கட்டாய பாடமாக இருக்கின்றன. ஸ்டாக்ஹோம் சர்வகலாசாலையில் சமஸ்கிருதமும் கற்பிக்கப்படுகின்றது. வியாபாரம் பற்றிய கல்வி சுவீடனில் சிறந்துள்ளது. பல ஜெர்மன் பேரறிஞர்கள் இப்போது சுவீடன் சர்வகலாசாலைகளிற் பணி

யாற்றுகின்றனர். எல்லா மாணவர்கட்கும் 9 மாத மால ராணுவப் பயிற்சி உண்டு.

சுகாதாரமும் வைத்தியசாலைகளும்

சுவீடனில் பொதுச் சுகாதாரம் மிகத் திருப்தியான முறையில் இருக்கிறது. சுவீடன் மக்கள் உயரமானவர்கள் ; நல்ல உடலமைப்பு உள்ளவர்கள். அவர்களுடைய சராசரி வயது 70. (நம் நாட்டில் 27) இந்நாட்டவர் நம் தேசத்திலும் பல நகரங்களில் கண் வைத்தியசாலைகளையும் பிற வைத்தியசாலைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். உலகிலேயே மிகச் சிறந்த டாக்டர்களும், ஆஸ்பத்திரிகளும் சிகிச்சைக் கருவிகளும் சுவீடனில் உண்டு. விமானப் படையெடுப்பு ஏற்பட்டால் அப்போது நோயாளிகளைக் காப்பாற்றுவதற்காக மலைகளுக்குள் தங்குமிடங்கள் (Shelters) கட்டி, அம்மலைகளின்மீது ஆஸ்பத்திரிகள் அமைத்திருக்கின்றனர். ஆபத்துக் காலத்தில், 'லிப்ட்' என்ற கருவி மூலம் நோயாளிகள் உடனே அவ்விடங்களுக்குக் கொண்டு போகப்படுவார்கள்.

சுவீடிஷ் அரசியலார் தங்களுடைய வைத்தியசாலைகளில் ஒரு நோயாளிக்குத் தினசரி ரூ. 18 வீதம் செலவிட்ட போதிலும், 4 ரூபாய் மட்டுமே அவனிடமிருந்து வசூலித்து மீதச் செலவைத் தாங்களே ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

இருப்புப் பாதைகள்

அமெரிக்க இருப்புப் பாதைகளுக்கு அடுத்தபடியாக உலகிற் சிறந்தவை சுவீடனில் உள்ளவையே. மிக அழகிய மின்சார ரயிலொன்றில் 5 மணி நேரத்தில், கோதன்பர்க்கிலிருந்து 300 மைல் தூரத்திலுள்ள ஸ்டாக்ஹோமுக்கு நான் ஒரு முறை சென்ற பிரயாண அனுபவம் என் மனத்தைவிட்டு என்றும் அகலாது.

சுவீடனில் பகற் பிரயாணத்துக்கும் இராப் பிரயாணத்துக்கும் தனித்தனி ரயில் வண்டிகள் உண்டு. இரவில் ஓடும் ரயில்களில் எல்லா வகுப்புப் பிரயாணிகட்கும் தூங்கும் வசதி தரப்படுகிறது.

எல்லா ரயில்களிலும், புகை பிடிப்பவர்க்கும் பிடியாத வர்க்கும் தனித்தனி வண்டிகள் உண்டு. ஓடும் ரயிலிலேயே பிரயாணிகள் ஒரு கோடியிலிருந்து மற்ருெரு கோடிக்கு நடந்து செல்வதற்குத் தக்கபடி வழி விடப்பட்டிருக் கின்றது. இந்த நடை பாதைகளிலுள்ள, தானே மடக்கிக் கொள்ளும் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு, பிரயாணிகள் இயற்கைக் காட்சிகளேக் கண்டு களிக்கலாம். இன்றியமையாப் பொருள்கள் பலவற்றை வணிகர் ரயிலி லேயே விற்கின்றனர். குப்பையைப் போடுவதற்குத் தொட்டிகளும் ரயிலில் வைக்கப்பட்டுள்ளன ; குடி தண் ணீர்க் குழாய்களும், காகிதத்தாலான குவளேகளும், கைக் குட்டைகளும் ரயில்களில் வைக்கப்பட்டுள்ளன ; வேக மாகச் செல்லும் ரயில்களில் 'டைனிங் கார்' என்னும் சாப்பாட்டு விடுதிகளும் உண்டு. மேல் வகுப்புப் பிரயாணி கட்கு ரயில்வேப்படமும் தினசரிப் பத்திரிகையும் இலவசமாய்க் கிடைக்கும். நம் நாட்டில் பஸ்களில் இருப்பது போன்று சுவீடன் ரயில்களில் கண்டக்டர் இருக்கிருர். இவர் குறிப்பிட்ட ரயில் அடுத்தாற் போல் எந்த இடத்தில் நிற்கும் என்பதை ஒலி பரப்பும் கருவி மூலம் அறிவித்துக்கொண்டே யிருப்பார்.

அரசியலமைப்பு

நம் நாட்டைப் போலவே, (ஆனல், ஒரு முடியரசின் கீழ்) கட்சி முறையில் ஜனநாயக ஆட்சி சுவீடனில் நடை பெறுகிறது. சுவீடிஷ் மக்களுக்கு அரசியல் விஷயங்களில் அதிக அக்கரை இல்லே. ஆயினும் மன்னரிடத்தில் மக்கள் மிகவும் பற்றுள்ளவராக இருக்கின்ருர்கள்.

சீதோஷ்ணநிலே

சுவீடனில் மழை அபரிமிதமாகவே பெய்கின்றது. மழை போதுமான அளவு பெய்யாவிட்டால், அக்காலங் களில் விவசாய வேலேகட்குப் போதிய மின்சாரம் கிடைப் பதற்காக மின்சாரத்தைப் பங்கீடு செய்கின்றனர்.

சுவீடன்தான் உலகிலேயே மிகவும் வடக்கேயுள்ள

நாடு. ஆகையால், இங்குள்ள கால நிலையே மிக விசித்திர மானது. மே மாதம் தொடங்கி மூன்று மாதங்கள் இள வேனிற்காலம். இக்காலத்தில் சுவீடனில் சூரியன், அல்லும் பகலும் பிரகாசிக்கின்றது. அதாவது மே மாதத்தில் உதயமாகும் சூரியன் ஜுலை மாதத்தில்தான் அஸ்தமிக் கிறது. இதனால் இந்த நாட்டுக்கு **நள்ளிரவுச் சூரியன்** நாடு என்று பெயர் வழங்குகின்றது.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் மூடுபனிக்காலம். அப் போது உறைந்த பனிக்கட்டியில் ஓடி விளையாடுவது இந் நாட்டவருக்கு மிகவும் இன்பம் தருவதாகும்.

மக்களின் குணங்கள்

சுவீடிஷ் மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள் ; எவ் வேலையையும் முகமலர்ச்சியோடும் திறமையோடும் செய் யும் இயல்புடையவர்கள். தமிழ் மக்களைப் போலவே சுவீ டிஷ் மக்களும் நகைச்சுவை நிரம்பியவர்கள், இவர் களுடைய தேசீய விளையாட்டு, கால் பந்தாட்டம் ; தேசீய உணவு, மீன். அடுத்தபடியாக இவர்கட்குக் காப்பியில்—பால் சேர்க்காத கறுப்பு நிறக் காப்பியில்—மோகம் அதிகம். இந்தியக் காப்பி உலகெங்கும் புகழ் பெற்ற தாகையால் சில சுவீடிஷ் பெண்கள் காப்பி தயாரிப்பது பற்றி என்னை வினவினர். சாமர்த்தியமாக ஏதோ சொல்லி மழுப்பிவிட்டேன்.

தந்தை பிரபலமாயிருந்தால், மகன் தன் பெயரை விட்டு விட்டு அவர் பெயருக்குப் பின்னால் "மகன்" என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்வது சுவீடிஷ் மக்களின் பண்பாடு.

பொதுவாகச் சுவீடிஷ்காரர்கள் கணக்கில் வல்லு நரல்லர். இதனால்தான் தசாம்ச முறையிலேயே நீட்டல், முகத்தல், நிறுத்தல் அளவுகள், நாணயம் இவற்றை சுவீடிஷ்காரர்கள் அமைத்துக் கொண்டனர் போலும்! மிகச்சிறிய கூட்டல் கழித்தல் கணக்குகட்குக்கூட அவர்கள் எந்திர உதவியை நாடுகின்றனர்.

நகரங்கள்

சுவீடனின் தலைநகராகிய **ஸ்டாக்ஹோம்** உலகின் மிக அழகிய நகரங்களில் ஒன்று; சரித்திரப் பிரசித்தி பெற்றது. பதின்மூன்று ஏரிகள், பல மலைகள்—இவற்றிற் கிடையே அமைந்துள்ள இந்நகரின் பெருமையை "ஸ்டாக் ஹோம் நகரை இரவில் பார்த்துவிட்டு இறந்து போ" என்ற பழமொழியிலிருந்து அறியலாம். திறந்த வெளியில் மிருகக் காட்சிசாலை இருப்பது உலகிலேயே இந்த நகரில் மட்டுந்தான். இந்நகரிற் பல கட்டடங்களில்



ஸ்டாக்ஹோம் நகரின் ஒரு காட்சி

பத்தாவது மாடியில், குழந்தைகள் விளையாடுவதற்காகத் தோட்டங்கள் இருக்கின்றன. இங்குள்ள **டவுன்ஹால்** என்னும் மண்டபம் சுவீடனின் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாகும். உலக சமாதானத்துக்கு உழைத்தவர் கட்கும் பிற மேதாவிகட்கும் நோபல் பரிசுகள் ஏற்படுத்திய சுவீடிஷ்காரரான ஆல்ப்ரட் நோபல் என்பவர் நினைவு நிலையமாக ஒரு பெரிய நூல் நிலையம் ஸ்டாக்ஹோம் நகரில் உளது. சுவீடனின் இதர முக்கிய நகரங்கள்—கோதன் பர்க்கும், மால்மோவும்.

முடிவு

சுவீடன் கடந்த நூறு ஆண்டுகளில்தான் இந்த மகோன்னத நிலையை அடைந்திருக்கிறது. இதற்குக் காரணமாயுள்ளவர்கள் கைதேர்ந்த தொழிலாளிகளும், சிறந்த பொறியியல் வல்லார்களும், பிரசித்திபெற்ற விஞ்ஞானிகளும் திறமையான நிர்வாகிகளுமாவர். மேலும், மிக மலிவான மின்சார வசதியும், தொழிலாளரிடையே அமைதியும் இங்கே காணப்படுகின்றன. நம் நாட்டுக்கும் இவை அனைத்தும் வேண்டும். இவை இருந்தால், இந்தியாவும் இந்த வையத்து நாட்டிலெல்லாம் உயர்வுற்று, வறுமை நீங்கி வாழலாம்.

பயிற்சி

1. சின்னஞ்சிறு, விஞ்ஞானம், முன்னேற்றம், அரசியல்,—பிரித்துக் காட்டுக.
2. ஆதிக்கம், மூலகாரணம், கூறவும் வேண்டுமோ, பணியாற்று—இவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைக்க.

வினாக்கள்

1. ஐரோப்பிய நாடுகளுள் சுவீடனுக்குரிய தனிச் சிறப்பு யாது?
2. சுவீடன் நாட்டின் சரித்திரம், பொருளாதாரம், கல்வி, இருப்புப் பாதை, மக்களின் குணங்கள் இவற்றைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

கட்டுரையாக்கம்

"சுவீடன் நாடு" என்பது பொருளாக ஒன்றரைப் பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.

10. சங்ககால வள்ளல்கள்

(நாடகம்)

கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை

உறுப்பினர்கள்: ஔவையார்; அதியமான்; கருணாகரர்; வீரவேள்மா; பிறைசூடி; காவலன். நங்கை—இயல்மொழி; செல்வி—அருண்மொழி. தேவி—தேமொழி.

இடம்: அதியர் கோவிலின் அரசப்பெருமன்றம்.

பொழுது: முற்பகல்.

(திருக்கோவலூர் மலையமான் தோல்வியும் அதியற்குத் திருமகள் தோற்றமும்.)

ஔவையார்: வென்றி நலந்தோன்ற வீற்றிருக்கும் கோவே! நினது சினம் அடங்குக. நின் படைப்பெரு மக்கள் ஈண்டு, மலையமானை யோட்டி வாகை சூடிய நினது வெற்றியைப் போற்ற, விழைந்து நிற்கின்றனர். திருமுடிக்காரி போரிலாற்றாது புறங்காட்டி யோடியும் ஏனோ உனக்கு இன்னும் அவன்பால் சினந்தணிந்திலது! நின்பகை யொழிந்தது; நீ வீரவாகை சூடினாய்; நின்னை எதிர்ப்பவர் இந்நானிலத்தும் இலர்; ஆதலால் அதிய, நினது நெஞ்சம் அமைதியுறுவதாக.

அதியமான்: அன்னாய்! தாங்கள் அம்மலையனை நன்கு அறியாதவர்கள் போலும்! அவன் நெஞ்சம் என்றும் வஞ்சகத்தாலாயது. புறங்காட்டி இன்று ஓடிய அவன், நாளை ஒரு படையுடன் நம்முன் நிற்பினும் நிற்பன். அவன்தான் திருமுடி, என் சினத்தீ அவியுமாறு இம்மண் மீது உருண்டோடாமற் போயினும், அவனை யான் சிறை செய்து தளையிடாது தவிர்ந்தமையே என்னை வருத்துகின்றது. என் செய்வது? அவனன்றி நம்மாலாவது என்?

கருணாகரர்: எம்பெரும! நம் யானைகள் பகைவர்களது எதிர்ப்பு ஒழியுமாறு போர்முனையில் பொருதமையால் அவற்றின் கொம்பு நுனிகள் தேய்ந்து குறுகின. அவை செல்வதைக் கண்ட நம் பகைவர் தம் மதில் வாயிற் கதவுகளின் பழைய தாழ்ப்பாள்களை நீக்கிப் புதியனபொருத்துகின்றனர். மற்றும் நம் பரிகள் போர்க்

களத்தில் மாண்டவர் தம் உருவு அழியுமாறு பிணங்களின் மீது உழக்கிச் சென்றமையால் குருதிக் கறை மிகுந்த குளம்புகளோடு உள்ளன? அவற்றின் செலவைக் கண்டு காடுகளின் சிறு வழிகள் யாவும் சுவைத்துள்ள வேல் முள்ளால் அடைக்கப் பெறுகின்றன. அண்ணலே, இவை யாவும் நின்பாற் கொண்ட அச்சத்தால் நிகழ்வனவேயாம்.

வீரவேள்மா: வீரர்தம் தலைவ, உறைக்குள் கட்டி வைக்கப் பெறாத நினது வேற்படைக்கு அஞ்சிப் பகைஞர் கேடகப்பிடியுடன் தமது கைப்பிடிப்பினை நெருக்கிக் கொள்ளுகின்றனர். ஏனெனில் ‘நின் வேல் அவரது மார்பகத்தே எறியப்படும்போது அவர்தம் பரிசையையும் ஊடுருவிச் செல்லும்’ என்பதனை உணர்வர். இன்னும் வாள்பட்ட புண்ணால் வடுப்பெற்ற நம் வீரமிக்க படைஞர் தம் வலிமையைக் கண்டு, புண்ணிலிருந்து ஒழுகும் குருதியால் நனையப் பெற்ற அம்புகளை நம் பகைவர் தூணியகத்தே எடுக்காமல் வைத்துள்ளனர்.

பிறைசூடி: எம் நாயக, உயிரினைக் காக்கும் பொருட்டு வெண் சிறு கடுகைப் புகைத்தாலும் தடைப்படாது விரைந்து சென்று, தக்க முறையில் இயல்பின் புறமாயிருந்து ஆவியைக் கைக்கொள்ளும் இயமனையே ஒத்துள்ளாய் நீ. ஆதலால், தலைசாய்ந்துள்ள நெற்கதிர்கள், வரப்புடன் சேர்ந்து சுழலும் கழனிகளோடு நீர்வளம் மலிந்த, பகைஞர்தம் அகன்றநாடு, நின் சினம் பெற்றால், அப்பகைவர் வாடும்படி அழிவது திண்ணம்.

ஔவையார்: எம் தலைவ, நின் ஆற்றலழியுமெனக் கருதி, மலையமான் தப்பினமைக்குக் கவல்கின்றனையோ? அம்மலையமான் தப்பினமைக்குக் கவல்கின்றனையோ? அவ்வாறெனில் அதனை விட்டொழிக, நினக்கு நிகர் நீயே. (காவலன் பணிவுடன் வருதல்) ஏடா! என் செய்தி?

காவலன்: அம்மையே,। வணங்குகிறேன். நமக்கு பெறுதற்கரிய நன்னாளாம். இந்நாளின் இந்நற்பொழுதில், முருகன் திருவருட் பெருக்கால், பூப்போலும் வடிவினையுடைய மைபூசப்பெற்ற கண்கள் மயங்கவும் தோள்கள் மெலியவும் தன்னை நோக்கிய மகளிர்தம் நெஞ்சைப்

பிணிக்குமாறுள்ள அழகுடன் இளஞாயிறு போன்ற ஓர் இளவரசர் நம் அன்னையார்பால் தோன்றியுள்ளார்.

ஔவையார் : நல்ல செய்தியே! இதனைப் பெற்று மகிழ்க. (ஒரு பொற்காசு அளித்தல்) நமது இறைமகன் வாழ்க. வேந்தே, நும்பால் எத்தகைய உளநைவும் தோன்றுதலாகா. மகன் பிறந்த இம்மங்கல நாளில் நினது உளம் பெருமகிழ்ச்சியால் பொலிவதாகுக. ஏடா காவலா! நீ விரைந்து சென்று நம் வள்ளுவனை அழைத்து, நம் மன்னர் மகன் பிறந்தமையை, இம்மாநகர் உணருமாறு முரசொலி செய்து தெரிவிக்க. மற்றும், நகர்ப் பெருந்தகை அம்பலவாணரை யணுகி அரசர் இளவரசர் பிறந்த நாட் சிறப்புக்கு வேண்டுவன விரைவினி லியற்ற ஒரு திட்டம் விரும்புகிறார் எனவும் அறிவிக்க. (காவலன் பணிந்து செல்லுதல்) ஓ! அதோ, செவிலித் தாயர்களும் மகவுடன் வருகின்றனரே!

நங்கை—இயன்மொழி : (திரைக்குள்)

மாணிக்க மால் வரைமேல் மன்னுசெக்கர் வானமென
வேணிப் பிரான் தோளில் மேவும் சிறு குருந்தோ!

செல்வி—அருண்மொழி ; (திரைக்குள்)

செஞ்சதங்கை கொஞ்சச் சிறுகிண் கிணியாடக்
கஞ்சமலர்த் தாளுமையாள் கண்களிக்க வந்தானே!

தேவி—தேமொழி : (திரைக்குள்)

பெண்ணூர்ந்த கற்புப் பிடியும் பிணமானும்
கண்ணாரக் கண்டு களிக்கவரு கற்பகமோ!

மூவரும் : (மகவுடன் மன்னன் முன்)

நீலமயில் வாகனனே நெட்டிலைவே லாயுதனே
கோலநிறைக் கோழிக் கொடிபடைத்த சேவகனே!

நங்கை : குன்றமும் கொக்கும் குரைகடலும் சூர்மார்பும்
குன்றவடி வேல்எறிந்த கொற்றவனே நற்றவனே!

செல்வி : உள்ளத் திமிரம் ஒழித்துச் சிவானந்த
வெள்ளத்துள் அன்பர் விளையாட வைத்தோனே!

தேவி : முத்தோ குலிசமோ மூதொளிமா ணிக்கமோ
சித்தோ தென்போரூர்ச் சிவானந்த வாரிதியோ!

மூவரும் : ஞானக் கருப்போமெய்ஞ் ஞானனந் தக்கடலோ
தானற்றுப் போற்றும் தமிழமுதத் தண்ணளியோ.

ஒளவையார் : (அண்மையிற் சென்று நோக்கி) செவிலியர்காள்! நீவிர் கூறியன மெய்தான். நம் வேந்தன் முருகவேளைத்தான் திருமகனுகக் கொண்டுள்ளான். வாழ்க நம் மன்னன்! வேந்தே உன் அருமை மகனை இவன் இனிது காண்க. (அதியமான் அமைதியின்றி நோக்குதல்) மன்ன! அரும் பெறல் திருமகனைக் கண்டுமா நினக்கு இன்னும் அமைதி ஏற்படவில்லை? அரசே! விண்ணவரை வழிபட்டு நல்வேளையில் ஆவுதி அளித்து, இவ்வுலகிற்குப் பெறுதற்கரிய மரபு வாய்ந்த கரும்பைக் கொண்டு வந்து, இந்நில உலகத்தில் ஆணை செலுத்திய தொன்மை நிலைபெற்றுயர்ந்த நினது மரபின் முன்னோர்களை யொப்பவே நீயும் பொன் வீரக் கழல் புனை காலினையுடையாய்.

பெரிய பனம்பூ மாலையைப் பூண்டுள்ளாய்; மலர் மலிந்த பொழிலையும் பெற்றுள்ளாய். இன்னும், நாளும் புதிய புலால் மணநாறும் நீண்டவேலையும் தமிழ்நாட்டு ஏழு மன்னர்களோடும் ஒன்றுகூடி நாடும் நீங்காத அரசவுரிமையையும் குறைவிலாது பெற்றுள்ளாய். எனினும், அமைதி பெருது போரினை விரும்பி, ஒளிமிகும் முரசு முழங்க மன்னர் எழுவருடன் பகைத்து மேற்சென்று போரில் வெற்றிவாகை சூடி, நின் வலிமையை விளங்கக் காட்டிய அந்நாளிலும், உனது புகழின் மேன்மையைப் பாடவியலாது போயினர். ஆனல் இன்று, எதிர்ப்பு மிகுந்த கோவலூரை யழித்து வென்று, மற்றும் பகைஞர்தம் அரண்களை அழிக்கும் திறல் மிகுந்த ஆழியைத் தாங்கியுள்ள நினது தோளை, மாபெரும் புலவன்—பரணன், தன் பெருமை தோன்றப் பாடினன். இதனல் நின் வலிமையின் நிலைமை விளங்குவதன்றோ!

(இந்நிலையிலும் சினம் நீங்காமைகண்டு) "கையிலுள்ளது வேல்; காலில் இருப்பது புனைகழல்; மெய்யினில் வேர்வையுள்ளது; குருதி நிரம்பிய பசியபுண் தொண்டையின்பால் ஏற்பட்டுள்ளது. பகைவர் ஒழியுமாறு, வளர்கின்ற இளம் பனையினுச்சியில் ஊசிபோன்றுள்ள வெண்மலரையும், பெரிய வெட்சிப் பூவினையும்,

வேங்கை மலரோடு சேர்த்துச் சுருண்ட கரிய மயிரினில் வனப்புற அணிந்து புலியுடன் போர்செய் வலிமை மிகுந்த யானை போலச் சினம் இன்னமும் தணியவில்லை. பகைஞரை வெகுண்டு நோக்கிய அவன் கண்கள், தனக்குற்ற அருமைச் சிறுமகவைக் கண்டும், சிவப்பு மாறுதுள்ளன. ஆதலின் இவனைச் சின மூட்டியவர்கள் ஐயோ, பிழைக்க மாட்டார்கள்.

கருணாகரர் : தண்ணளி வேந்தே! தாயின் தனி மொழியை ஓம்புக. அவர் தம் உணர்ச்சியும் உளமும் வெறுத்த எவையும் தாங்களிதுவரையில் புரிந்ததில்லையே! பெரும! எமது, முழுமதி நிகர்க்கும் திருநிறை இளவரசைப் பெற்று உளமகிழ்வு பெற்றருள்க.

அதியமான் : அன்னாய்! எனது அடங்காச் சினத்தை இன்னே அவித்தேன். தங்கள் உள்ளம் வாட மனங் கொளேன். தேவி, தருக என் மகனை. (மன்னன் தன் மகனை ஏந்தி மகிழ்தல்).

கருணாகரர் : தண்மதி நிகர்க்கும் பொன் இளங் கோவுடன் எம்மிறை அதியமான் என்றும் வாழ்க.

யாவரும் : வாழ்க, வாழ்கவே.

குறிப்புரை

கோ - அரசன். வாகை - வெற்றிமாலை. தளை - விலங்கு. கவைந்துள்ள - இருபிரிவாயுள்ள. பரிசை - கேடகம்.

பயிற்சி

(1) பிரித்துக் காட்டுக : ஞானிலம், தணிந்திலது, தண்ணளி.

(2) நிகழ்வன, அகத்தே, ஆற்றல், மங்கலநாள், இவண், நிகர்க்கும்—நும் சொந்த வாக்கியங்களில் அமைக்க.

வினாக்கள்


1. வெற்றிமாலை சூடிய பின்பும் அதியமான் அமைதியின்றி இருந்தமைக்குக் காரணம் யாது?

2. "நினக்கு நிகர் நீயே"—சந்தர்ப்பம் கூறுக.

3. இளவரசன் பிறந்த செய்தியை யறிந்ததும் ஔவையார் யாது செய்தனர்? காவலனிடம் யாது கூறினர்?

கட்டுரையாக்கம்

'அதியமானின் சீற்றமும், ஔவையாரின் தேறுதல் மொழியும்' என்பது பொருளாக ஒரு பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.



TAMIL ILAKKIYA THIRATTU

FOR FORM V—GENERAL STUDY

(Prepared as per 1952 Syllabus)

BY

P. DORAIKKANNU MUDALIAR, M.A., L.T.,

AND

VIDWAN S. V. VARADARAJA IYENGAR, M. O. L.

T. G. GOPAUL PILLAI

PUBLISHERS

TEPPAKULAM
TIRUCHIRAPALLI



2/27, BROADWAY
G. T. MADRAS

Copyright]

1954

[*Frice Rs.* 1-6-0